30 JAN 1999
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:6 வள்ளுவர் ஆண்டு 2030 தை 16 சனிக்கிழமை (30– 01 – 1999) SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம்:36

# செம்மணியைத் தோண்டுவது வெள்ளத்தால் ஒத்திவைப்பு!

## சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜன. 30

மட்டக்களப்பு புறநகர்ப் பிரதேசத்தில் 51 வயது குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கொக்குவில் வாசியான ஆறுமுகம் காத்தமுத்து (வயது 51) என இவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இரவு வீடியோ கொட்டகை ஒன்றில் படம் பார்த்துவிட்டு வீட்டிற்கு புறப்பட்ட இவர் மயானத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

(உ-21)

## பொலீஸ் கோரிக்கை நீதிமன்றம் ஏற்றது

யாழ்ப்பாணம், ஜனவரி 30

செம்மணியில் உள்ளதாகக் கருதப்படும் பெரும் மனிதப்புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கைக்கு அனுமதி வழங்கி அப்பகுதியில் வெள்ளம் தேங்கியிருப்பது காரணமாக மார்ச் மாதம் வரை ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த விடயம் நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது பொலிஸார் முன் வைத்த கோரிக்கையை ஏற்று இந்த வழக்கை மார்ச் 5 ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்தார்.

இந்த வழக்கு யாழ். நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

செம்மணி புதைகுழிகளைத் தோண்டுவதற்கான உத்தரவைவிடுப்பதாயின்அங்குஅப்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## விமான சேவை நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 30

பலாலிக்கும்- இரத்மலானைக்கும் இடையேயான ஹெலி டூர் ஸின் விமான சேவை நேற்று ஆரம்பமானது.

யாழ்ப்பாணத்தில் இருந்து 52 பயணிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். கொழும்பில் இருந்து 38 பயணிகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இன்று செல்லும் விமானத்தில் செல்ல 50 பேருக்கு நேற்று டிக்கட் வழங்கப்பட்டதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

பலாலியில் இருந்து சென்ற ''லயன்ஏயர்'' பயணிகள் விமானம் இரணைதீவுக் கடற்பகுதியில் காணாமல் போனதன் பின்னர் நேற்றுத்தான் பயணிகள் விமானசேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

(உ-3-7-15-139-173))

## குருநகர்க் கடல் பகுதியில் படை - புலிகள் மோதல்!

கொழும்பு, ஜன. 30

குருநகர் கடற்கரையோரத்துக்கு அப்பால் கல்முனைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்த மோதலின் போது விடுதலைப்புலிகள் சிறிய ஆயுதங்களைப் பயன்படுத்தி நடத்திய தாக்குதலில் விமானப்படையினரின் ஹெலி ஒன்று சிறு சேதத்துக்குள்ளானது என்றும்—

விடுதலைப். புலிகளின் ஒரு தொகுதி வள்ளங்களை விமானப் படை ஹெலிகள் தாக்கி அழித்தன என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் புலிகள் தரப்பில் பதினொரு பேர் உயிரிழந்ததாகத் தெரிய வந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

ஆனால் இந்த மோதல் தொடர்பாக புலிகள் தரப்புத் தகவல் ஏதும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

(7 ஆம் பக்கம் பார்க்க)

### குருநகர்க் கடல் பகுதியில்

## ஹெலித் தாக்குதலில் மதகுரு உயிரிழப்பு!

### மூதாட்டி, இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 30

வன்னியில் இருந்து மீளக் குடியமர்வதற்காக யாழ். கடலேரி ஊடாக குருநகர் நோக்கி வந்த 13 பேர் அடங்கிய பயணிகள் குழு ஒன்றின் மீது நேற்றுக்காலை 7 மணியளவில் ஹெலிக் கொப்டர் நடத்திய தாக்குதலில் மதகுரு ஒருவர் உயிரிழந்தார். மூதாட்டி ஒருவர் உட்பட இருவர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு

( 7ஆம் பக்கம் பார்க்க)

### காலை 7 மணிக்கு - விடிந்த பின்னர்

## வெள்ளைக் கொடியை காட்டியபோது ஹெலி எம் மீது சரமாரியாகச் சுட்டது

### காயமுற்ற மூதாட்டி கூறும் தகவல்

யாழ்ப்பாணம், ஜன 30

காலை 7 மணியளவில்— விடிந்த பின்னர்— ஹெலிக் கொப்டர் ஒன்று நாமிருந்த பகுதியில் தாழ்வாகப் பறந்து வந்து வட்டமடித்தது. நாம் வெள்ளைக்கொடியொன்றைத் தூக்கிப் பிடித்து காட்டியபொழுதும், சடசடவென எம்மை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

- இவ்வாறு குருநகர் கடற்பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற சம்பவத்தில் காயமடைந்தவர்களில் ஒருவரான 73 வயது மூதாட்டி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் துப்பாக்கிக்குண்டு ஒன்று அவரது இடது கையின் மேற்பகுதியை கிழித்துச் சென்றுள்ளது.அதிக

( 7 ஆம் பக்கம் பார்க்க)

### ஸ்லேவாக்கியாவில்

## 6 ஈழத் தமிழர்கள் ரயில் மோதிப் பலி!

கொழும்பு, ஜன. 30

ஸ்லேவாக்கியாத் தலைநகர் பிரட்றக்சலாலாவியாவில் சுரங்க ரயில் பாதை ஒன்றினூடாக நடந்து சென்று கொண்டிருந்த இலங்கையர்கள் 6 பேர் பின்னால் வந்த ரயில் மோதியதில் உயிரிழந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்லேவாக்கியப் பொலீஸார் இந்த விபத்துச் சம்பவம் குறித்து இலங்கை வெளி விவகார அமைச்சுக்கு நேற்று அறிவித்தனர்,

(7 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் திருப்தியில்லை என்கிறார் ஆணையாளர்

கொழும்பு, ஜன. 30

வடமேல் மாகாண சபைக்கான தேர்தலின்போது இடம்பெற்ற வன்முறைகள், ஊழல்கள், வாக்குப் பெட்டிகள் காணாமல் போன சம்பவங்கள் ஆகியனவற்றால் அத்தேர்தல் குறித்துத் தான் திருப்தியடையவில்லை எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயகா தெரிவித்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் ஆலோசனையுடனேயே வடக்கு-கிழக்கில் அபிவிருத்திப் பணி

### அரச அதிபர்களுக்கு ஆளுநர் அறிவுறுத்து

கொழும்பு, ஜன. 30

வடக்கு — கிழக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் இராணுவத்தினருடன் கலந்து ஆலோசித்தே மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன வடக்கு-கிழக்கு அரச அதிபர்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலை குறித்து ஆராய நேற்றுக்கூட்டப்பட்ட மாநாட்டிலேயே இப்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் ஆளுநர் அலுவலகத்தில் நடந்த இந்த மாநாட்டில் யாழ். அரச அதிபர் தவிர்ந்த ஏனையமாவட்ட அரச அதிபர்களும், வடக்கு-கிழக்கில் பணிபுரியும் இராணுவ அதிகாரிகளும் பங்குபற்றினர்.

வடக்கு-கிழக்கில் சிவில் மற்றும் பாதுகாப்புத்துறை சார்ந்ததான முடிவுகள் பாது

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் மேற்கு

## வல்லவாம்பிகா சமேத சொர்ணசித்தி விநாயகர் ஆலய பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

நாளை 31-01-99 ஞாயிற்றுக்கிழமை
காலை 7.55 மணி முதல் 9 00 மணி
வரையுள்ள சுபவேளையில்
சிவப்பிரம்மஸ்ரீ சொ. இரத்தினசபாபதிக்குருக்கள் தலைமையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் வந்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

-நிர்வாக சபையினர்

(62616)

## YOGI HOME SCIENCE ACADEMY

75, அம்மன் றோட், நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த வகுப்புக்கள் யாவும் அடுத்த வாரத்திலிருந்து ஆரம்பமாக இருப்பதால், மாணவர்கள் அனைவரும் உடன் வந்து தொடர்பு கொள்ளவும்.

- ஆசிரியை

(62612)

## வாழ்த்துகின்றோம்

இல. 16, ப்லாலி வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரியில்
இன்று (30 - 01 - 99) சனிக்கிழமை
மக்கள் சேவைக்காக உதயமாகும்

APPALO NURSING HOME

சிறப்புற வாழ்த்துகின்றோம்

SIVAN MOTOR STORES
70/1, Manipay Road, Jaffna.

(62619)

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்புமுடிவுகள்

சங்கானை புனித சலேசியார் ஆலய கட்டட நிதிக்கான அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் (24 - 01 - 99) பரிசு பெற்ற இலக்கங்கள்:

1ஆம் பரிசு — 3803
2ஆம் பரிசு — 1222
3ஆம் பரிசு — 579

ஆறுதல் பரிசுகள்

1) 6790 2) 1733 3) 2811
4) 729 5) 4946 6) 3843
7) 218 8) 3563
9) 1358 10) 5486

- பங்குத்தந்தை

(62604)

## கண்ணீர் அஞ்சலி

29 - 01 - 1999 அன்று இயற்கை யெய்திய,
எமது கலாசாலை விரிவுரையாளர்
திரு. ஆ. மகாதேவன் அவர்களின் தாயாராகிய

திருமதி பூரணம் ஆறுமுகம்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்!

மாணவர் மன்றம்,
பலாலி ஆசிரிய கலாசாலை
திருநெல்வேலி.

(62617)

## தவறிவிட்டது

புலோலி மத்தி, புலோலியைச் சேர்ந்த,
அருணாசலம் உமாசங்கர்

என்பவரின் 652572278 V, இலக்க தேசிய அட்டை, விமான பயணத்திற்கான படிவம், எம். எல். ரீ. பதவிக்குரிய கடிதம், தொலைத் தொடர்புக்குரிய வியாபார பதிவு என்பன நேற்று வெள்ளிக்கிழமை காலை அல்வாய்க்கும் — யாழ்ப்பாணத்திற்குமிடையில் தவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள், வி. எம். ஆர் தொலைத் தொடர்பு நிலையம், அல்வாய் நாவலடி என்னும் விலாசத்திலோ அல்லது 070212281 இலக்கத்திலோ தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

(62608)


## சமயச் சந்நிதிகளில்

தெல்லிப்பழை கருணைமிகு காசி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக தினம் இன்று சனிக்கிழமை நடைபெறும்.

காலை 10 மணிக்கு இடம் பெறும் வைபவத்தில் சங்காபிஷேகமும், விசேட ஆராதனைகளும், பூசைகளும் நடைபெறும். (இ-15)

★ ★ ★

நீர்வேலி கந்தசுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8. 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம் ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் தைப்பூசத் தினமான நாளை காலை 10-00 மணிக்கு விஷேட அபிஷேகமும் பூசையும் நடைபெறவுள்ளன.

★ ★ ★

கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் சமாதிக்கோயிலில் நாளை மறுதினம் பிற்பகல் 3-30 மணிக்கு ஆயிலிய பூசையும் நற்சிந்தனை பாராயணமும் இடம்பெறும். (உ-3)

★ ★ ★

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் தைப்பூச உற்சவ தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு சங்காபிஷேகம், விசேட பூசை என்பன நடைபெறவுள்ளன. பிற்பகல் 3-00 மணிக்கு வசந்தமண்டப பூசையை அடுத்து 4-00மணிக்கு அழகிய மஞ்சத்தில் சுவாமி வீதி வலம் வருவார். (உ-135)


[A/L 2000]

பொருளியல்
S. வரதராஜன்
B. A (Hons)
ஜனவரி — 31

ஆசிரியரின் வகுப்புக்கு அனுமதி வழங்கப்படும் இறுதித் திகதி 31-01-99

இதற்குப்பின்பு அனுமதிகள் வழங்கப்பட மாட்டாது.

- நிர்வாகி

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

(62629)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி
இன்று முதல்
அர்ஜுன், பூஜா
நடித்த
சூரியப் பார்வை
(புதிய வெளியீடு)
காட்சிகள்;- 10.30, 2.30
(பழைய நேரம்)
T. P. No. 070—212223

(62429)

## ராஜா

யாழ்ப்பாணம்.
பிரபு, சுகன்யா, விசு
நடித்த
சின்ன மாப்ளே
இன்று காட்சிகள்
10-30, 2-00, 5-00

[சி/6246]

## விஷ்ணு

வீடியோ
துரை வீதி, கோண்டாவில்.
எமது இன்றைய
வெளியீடு!
① கல்கத்தா
[illegible]

(62626)


## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டமும், விவசாயக் கூட்டமும் எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளன. (ஐ-180


யாழ் நகரில் வைத்திய கலாநிதிகளின்
ஒருங்கிணைந்த சேவை

## JAFFNA MEDICAL CENTRE

## யாழ். வைத்திய நிலையம்

166, 1 St Cross Street, Jaffna
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)

ஆரம்பம்: 31 - 01 - 99 ஞாயிற்றுக்கிழமை

★ வெளிநோயாளர் சேவை — OPD
★ உள்ளக நோயாளர் சேவை
In Ward Management
★ மருந்தகம் — Pharmacy

- நிர்வாகி

(62618)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி யோகவதி அரசரத்தினம்

சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி யோகவதி அரசரத்தினம் 29-1-1999 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் செல்வி வசந்தி அரசரத்தினம் [பேராசிரியர், தலைவர் உயிரியல் இரசாயனத் துறை, மருத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்), இலங்காதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் சுந்தா சுந்தரலிங்கம் [B B C Madras], சுந்தரவதனன் [பொறியியலாளர், U. S. A] ஆகியோரின் அன்புச் சகோதரியும் பராசக்தி, சகுந்தலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆறுமுகத்தின் அன்பு மாமியாரும் காயத்திரி, கோகுலன், ராகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை [31-1-99] ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10. 00 மணியளவில் சாவகச்சேரியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
வசந்தி அரசரத்தினம்
[மகள்]

''சுந்தர வாசம்''
சிவன் கோயில் வீதி,
சாவகச்சேரி.

[62625]

## திருமதி பூரணம் ஆறுமுகம்

[குரும்பசிட்டி]

குரும்பசிட்டியைப்பிறப்பிடமாகவும், உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் ஆறுமுகம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், வாமதேவன், மகாதேவன்[பலாலி ஆசிரிய கலாசாலை], சக்திதாசன் ஆகியோரின் அன்புமிகு அன்னையும் கணேஸ்வரி, மங்களராணி, இராஜநாயகி ஆகியோரின் மாமியும் ஞானபரன், வாகினி, வாசுகி, இராகுலன், கிரிசாந்தி, நிசாந்தி ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற துரையப்பா அவர்களின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் உரும்பிராய் இல்லத்தில் 30-01-99 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வடக்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

ஆ. மகாதேவன்
(மகன்)

சந்திரோதய வித்தியாலயம் முன்பாக,
மருதனார்மடம் வீதி,
உரும்பிராய்.

(62614)

## ஞானப்பிரகாசம் அலோசியஸ்

(வன்னி ஜெப ஆலய போதகர்)

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட ஞானப்பிரகாசம் அலோசியஸ் கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

இவர் ஞானப்பிரகாசம் செல்வராணி அவர்களின் சிரேஷ்ட புதல்வரும் சிலுவைதாஸ், புஸ்பம் ஆகியோரின் அன்பு மருமகனும் மேரிவின்சிலா (சுசிலா) அவர்களின் அன்புக் கணவரும் ஆன்சிந்துஷா (சுண்டுக்குளி மகளிர்கல்லூரி), பானுசாலோன், யொய்சன், பினஸ்டியன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அலெக்சாண்டர் (உரிமையாளர், சிந்து வாச் வேக்ஸ்), அன்ரன் பிரன்சிஸ் (வவுனியா), அல்போன்ஸ் (உரிமையாளர், அமல் மணிக்கூட்டுத் தொழிலகம்), அனுசியா அமிர்தா, அமலேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் றோசா, கமலினி, விஜயகுமார், ஹெலமன் (படப்பிடிப்பாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (31. 1. 99) நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொட்டடி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. ஞானப்பிரகாசம்
(தந்தை)

செம்மணி வீதி,
நாயன் மார்கட்டு.

(62632)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையேறுகிறது

**எல்லாம் சரிவரும்**

நாடகம்

வேம்படி மகளிர் உயர் கல்லூரி மண்டபம்

31 - 01 - 99

காலை 10-00 மணி மாலை 3-30 மணி

TRRO LTD

106, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (62611)

**FAST கொமினிக்கேசன்**

99—01—30 இன்று முதல்


உள்நாட்டு, வெளிநாட்டு

தொலைபேசி அழைப்புக்களைப்
பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாட்டு தொ. இல. 009421 — 2591
உள்நாட்டு ,, ,, 021 — 2591

392, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம். (62602)

**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்

**குமாரசாமி இராஜரட்ணம்**

தோற்றம் 1942—07—09 மறைவு 1996—01—30

நந்தா விளக்கணைய நாயகனே
நானிலத்தோர்க்கு கல்வியில் நாயகனே
நீ பதித்த கல்விச் சுவடுகளின் பின்னே
ஆயிரமாயிரம் இளந்தலை முறையினர்
ஆண்டுகள் மூன்று சென்றன - எம்
நினைவலைகள் நெஞ்சை விட்டு நீங்கா
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மகன், மருமகள்,
பேர்த்தி, உற்றார், உறவினர், நண்பர்கள்.

ஆனந்த நிலையம்,
நவிண்டில், கரவெட்டி. (62607)

# உசனில் கும்பாபிஷேகம் நாளை

யாழ்ப்பாணம், ஜன. 30

உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு எண்ணெய்க் காப்பு இன்று காலை 6மணி தொடக்கம் பி.ப 3 மணி வரை நடைபெறும். மகா கும்பாபிஷேகம் நாளை காலை 7.02 மணிக்கு நிகழும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும்.

(அ)

## பயிற்சி

சண்டிலிப்பாய், ஜன. 30

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் அனுசரணையுடன் நடத்தும் நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தும் பயிற்சி நாளை ஞாயிற்றுக்கிழமை சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

சங்க எல்லைக்குட்பட்ட விவசாயிகள் நலன் கருதி இப்பயிற்சி நடத்தப்படவுள்ளதாக சங்கத்தலைவர் ச. செல்வரத்தினம் தெரிவித்தார். (ஐ–135)

## திருத்தம்

இம்மாதம் 23 ஆம் திகதி சஞ்சீவியிலும், 24ஆம், 25ஆம் திகதிகளில் உதயனிலும் வெளியான **பணிப்பெண் தேவை** என்ற விளம்பரத்தின் கடைசி வசனத்தை பின்வருமாறு திருத்தி வாசிக்கவும்.

அடையாள அட்டை இலக்கம், இரண்டு புகைப்படம், விலாசம் மற்றும் குடும்ப விவரங்களுடன் உடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

இத்துடன் புகைப்படம் — என்று அச்சானது தவறாகும்:

கணக்கீடு
திரு. N. சதீஸ்
A/L 1999
பங்குடமை
Sat, Sun 3–00 p.m
A/L 2001
முதன்மை பதிவேடுகள்
Sat, Sun 5.00 p.m
**வளர்மதி அக்கடமி**
K.K.S. றோட் கொக்குவில்
(62601)

# அதிரடி அரங்கு

குறைந்தகட்டணத்தில் மக்களுக்குத் தொலைபேசிச் சேவையை வழங்குவதற்காக நாணயத் தொலைபேசி வசதியை 'ரெலிகொம்' நிறுவனம் பரவலாக யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தொலைபேசி மூலம் அழைப்பு எடுப்பவர்கள் நாணயங்கள் மூலம் செலுத்தும் கட்டணத்திலிருந்தே அந்தத் தொலைபேசியைப் பராமரிப்பவருக்கு 'கொமிஷன்' கிடைக்கக் கூடியதாக 'ரெலிகொம்' நிறுவனம் கட்டணத்தைத் தீர்மானித்துள்ளது.

அதுவும் சேரும் தொகைக்கு ஏற்ப சுமார் 18 வீதத்திலிருந்து 30 வீதம் வரை 'கொமிஷன்' வழங்கப்படுகின்றது.

உதாரணமாக ஒரு நாணயக்குற்றி தொலைபேசியில் மாதம் சேர்ந்த தொகை 30 ஆயிரத்தை எட்டினால் அதில் 9 ஆயிரம் ரூபா அந்தத் தொலைபேசியைக் கவனிக்கும் முகவருக்கு — சும்மா இருக்க — கிடைக்கின்றது.

ஆனால் அதுவும் காணாதென்று வேறு வழிகளையும் அவர்கள் நாடுகின்றார்கள்.

தொலைபேசியில் நாணயக்குற்றிகள் சேர்ந்ததும் அதைத் திறந்து எடுத்துச் சேகரிப்பவர்கள் இவர்களே. அதன் பின்னர் தொலைபேசி எடுக்க வருபவர்களுக்கு பணத்தை நாணயங்களாக—சில்லறைகளாக—மாற்றிக் கொடுப்பதற்கும் அவர்கள் 'கொமிஷன்' பெறுகிறார்கள். பத்து ரூபாவை மாற்றுவதற்கு ஒரு ரூபா 'கொமிஷன்' என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! இதென்ன பகற்கொள்ளை என்று பலரும் மூக்கில் விரல் வைக்கின்றார்கள்!

★ ★ ★ ★ ★

பல்கலைக்கழகக் கல்வியிலே முக்கிய இடத்தைப் பெறுபவை நூலகங்கள். கண்ணெனப் போற்றத்தக்கவை, கல்விக்கு விருந்தாகும் நூல்களே.

ஆனால் யாழ். பல்கலைக்கழகத்தில் உயர்பீடம் ஒன்றைச் சேர்ந்த மாணவர்கள் தமது 'கிறுக்கு'த் தனத்துக்கு நூல்களைக் களமாகப் பயன்படுத்தியமையால் ஆயிரக் கணக்கான புத்தகங்கள் — பெறுமதி மிக்க நூல்கள் — முடக்கப்பட்டு கிடப்பில் போடப்பட்டிருப்பதாக அதிர்ச்சி தரும் ஒரு தகவல் வெளியாகி உள்ளது.

குறித்த பிரிவு மாணவர்களிடையே ஏற்பட்ட 'சோடிப்' பிரச்சினைகளே இதற்கு அத்திவாரம் என்று கூறப்படுகின்றன. அதனால் ஏற்பட்ட முரண்பாடு கருத்து மோதலாகி, மௌனப் போராட்டமாகத் தொடர்ந்து, ஈற்றில் தமது கோபங்களை பலரும் பயன்படுத்தும் புத்தகங்கள் மூலம் வசைமாரி பாடி, சேறு அள்ளிப் பூசும் 'புரட்சி'யாக வெடித்திருக்கின்றது.

நூல் நிலையங்களில் இத்தகைய சிறு சிறு சம்பவங்கள் நடப்பது தவிர்க்க முடியாததே. அதுவும் பாடசாலை நூல் நிலையங்களில் — சிறிய மாணவர்கள் கையாளும் புத்தகங்களில் — இத்தகைய வசைமாரிகள், ஜோக்குகள் பொறிக்கப்படுவது சிறிய அளவில் நடப்பது வழமைதான்.

ஆனால் உயர்கல்வியையும், அரிய நூல்களையும் பெரிதும் மதிக்கும் யாழ். பல்கலைக்கழகம் போன்ற கலைக்கூடங்களில் இத்தகைய செயல்கள் பெருத்த எடுப்பில் நடப்பது மனதை நெருடுவதாக உள்ளது.

தங்கள் காதல் கோப தாபங்களைத் தீர்த்துக் கொள்ளவும், மற்றையவர்களை அநாமதேயப் பாணியில் திட்டித் தீர்க்கவும், அவர்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தவும் பெறுமதி மிக்க நூல்களைச் சீரழிப்பது கண்டிக்கத்தக்கது. அத்தோடு இத்தகைய வழிகளை நாடியது அவர்கள் சார்ந்த துறைக்கும் அநாகரிகமாகும்.

நூலகர்கள் எடுத்துச் சொல்லியும் திருந்தாவிட்டால் இவர்களை எப்படித் திருத்துவது? பெறுமதி மிக்க அரிய புத்தகங்களை இவ்வாறு கையாளும் நமது மாணவர்கள் நாளை தமது உயர் கல்வியை முடித்ததும் சமூகத்தை எப்படிக் கையாளப் போகின்றார்கள்? நினைக்கவே பயமாக இருக்கின்றது!

★ ★ ★ ★ ★

**மீண்டும் ராகிங் அசுரன்!**

இதுவரை காலமும் பல்கலைக்கழகத்தில் மட்டும் தலைவிரித்தாடிய இந்த அசுரன் இப்போது தனது கால்களை மெல்ல, மெல்ல அதற்கு வெளியிலும் வேறு உயர்கல்வி நிறுவனங்களிலும் பதிக்கத் தொடங்கியிருக்கின்றான்.

பல்கலைக்கழக மாணவர்களின் ''ரூம் ராகிங்'' ஆங்காங்கே நடப்பது பற்றிய தகவல்கள் அவ்வப்போது கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

மறுபுறத்தில் உயர்தொழில் நுட்பக் கல்லூரி, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஒன்று ஆகியவற்றிலும் ''ராகிங்'' தலைதூக்கியிருப்பதாகத் தகவல்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுக்கு இத்தகவல் சமர்ப்பணம்.

தொற்று நோயை முளையிலேயே கிள்ளியெறியும் நடவடிக்கைகளை அவர்கள் எடுக்காவிட்டால் நிலைமை மோசமடையும் போது கஷ்டம் அவர்களுக்குத்தான். சமூகம் தானாக எழுந்து வந்து திருத்த முன்னர் திருந்தி விடுவது நல்லது.

உயர் தொழில் நுட்பக் கல்லூரியில் 'ராகிங்' மாணவரிடையே கசப்புணர்வை பெரிய அளவில் வளர்த்து விட்டதாகவும் தகவல்.

தளபாட வசதிகள், தனிக் கட்டட வசதிகள் இல்லாதபோது அடங்கிக் கிடந்த இக் கல்லூரி மாணவ சிரேஷ்டர்கள் இப்போது வசதி கிடைத்ததும் வெறி கொண்டவர்கள் போன்று துள்ளிக் குதிக்க தொடங்கி விட்டார்கள் போலும்!

வசதி கேட்டு இவர்கள் குரல் எழுப்பிய போது அதை ஆதரித்த சமூகம், இவர்கள் அளவுக்கு மீறி அநாகரிகமாகத் துள்ளிக் குதிக்கும் போது ஒட்ட நறுக்கவும் முயற்சிக்காது என்று இவர்கள் நினைக்கிறார்களோ...?

- மின்னல் -

**மருத்துவமனைத் திறப்பு விழா**

**யாழ் வைத்தியசாலை**

**JARL HOSPITAL LTD.**

284, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(ஆலடிச்சந்திக்கு அண்மையில்)

இன்று நண்பகல் 12 மணிக்கு அரசாங்க அதிபர் உயர்திரு. க. சண்முகநாதன் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

- கண் சத்திர சிகிச்சை
- சத்திர சிகிச்சை
- வைத்திய நிபுணர் ஆலோசனைகள்
- மருத்துவப் பரிசோதனை
- மகப்பேற்று மருத்துவம்
- நோயாளர் தங்கும் வசதி
- வெளிநோயாளர் பரிசோதனை
- குழந்தை மருத்துவம்

பல், தோல் சிகிச்சை இவற்றுடன் மருத்துவ ஆய்வுகூடம்
ஈ. சி. ஜீ. டிஸ்பென்சறி வசதிகள்

இரவு பகல் M. B. B. S. வைத்தியரின் சேவை

நிர்வாகத்தினர்

(62605)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

நடராசா சிற்சபேசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 781313785V), விசேட அடையாள அட்டை (090202405) கடந்த 21-1-99 அன்று வில்லூண்டிப்பிள்ளையார் வீதிக்கும், மானிப்பாய் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இராமையா செட்டியார் அன் சன்ஸ், 172, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (62521)

பெரியதம்பி தர்மினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (726831300V)யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஆ ர ணி கொம்யூனிக்கேசன் 337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். (62580)

இராமச்சந்திரன் நந்தினி என்பவருடைய விசேட அடையாளஅட்டை 25-01-99 அன்று யாழ்ப்பாணத்திற்கும் நாச்சிமார் கோயிலடிக்கும் இடையில் தவறிவிட்டது. [இல. 0907025770] கண்டெடுத்தவர்கள் கணேசா வாச்வேக்ஸ். கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி என்றமுகவரியில் ஒப்படைத்து உதவவும். (62581)

தம்பிமுத்து சந்திரகுமாரி என்பவருடைய தேசிய, விசேட அடையாள அட்டைகளும், வதிவிடப்பதிவு, திருமணப்பதிவு மற்றும் பிறப்புப் பதிவுச் சான்றிதழ்களும் 28-01-99 அன்று இருபாலைச் சந்திக்கும் நீர்வேலி கந்தசுவாமி கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அச்சுவேலியில் அல்லது இருபாலையிலுள்ள E. P. D. P. அலுவலகத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (62570)

கரிகாலன் உமா ஆகிய எனது தேசிய, விசேட, வேலை அடையாள அட்டைகள் (725102585V, 0904015082) சுழிபுரத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஸ்ரீவரதராஜா வெதுப்பகம், வழக்கம்பரை, சுழிபுரம், என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (62563)

பணிப்புலம் பண்டத்தரிப்பைச் சேர்ந்த சிவலதா பகீரதனின் (746941390V) இலக்க தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் யாழ். நகரில் மினிபஸ் ஒன்றில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் A. பகீரதன் பணிப்புலம், பண்டத்தரிப்பு என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (62574)

திருமதி கணேஷ் மேரி நாயகி என்பவரது தேசிய, விசேட அடையாள அட்டைகள் கொக்குவிலுக்கும், தட்டாதெருச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். பிரதம தபாலகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (62571)

ஜெகதீசன் கலைவாணி என்பவரின் தேசிய, விசேட, பல்கலைக்கழக அடையாள அட்டைகள் யாழ்ப்பாணம்—மானிப்பாய் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சிவவில்லா, மானிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (62572)

## விற்பனைக்கு

ஒரு வாரம் நிரம்பிய பல இனக் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் கே. வி. சாமி, 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி யாழ்ப்பாணம். (62594)

நல்ல நிலையில் உள்ள பொமனேறியன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. மலிவான விலையில் கொடுக்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்: S. குகநாதன். கலிகை சந்தி, துன்னாலை. (62586)

## தேவை

ஊனமுற்றோர் சங்கத்தில் பயிற்சி பெறுவோரது கைப்பணிப் பொருள்களை பாதுகாத்து வைப்பதற்கு அலுமாரிகள் தேவை. விற்பனை செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்க: செயலாளர் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் 39, கொழும்புத்துறைவீதி, யாழ்ப்பாணம். (62529)

வடமராட்சியில் ஆரம்பிக்கவிருக்கும் இசைக் குழுவிற்கு இசைக் கருவிகளில் நல்ல பரிச்சயம் உள்ளவர்கள் தேவை. சொந்தமாக வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது, தொடர்பு கொள்க: ஜெயன் (நெல்லியடிச் சந்திக்கு அண்மையில்) பருத்தித்துறை வீதி, நெல்லியடி. (62561)

## புதிய பிரிவு

தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புக்கள் (புதிய பிரிவு) 31-01-99 இல் ஆரம்பமாகவுள்ளது. பயிற்சி நிலையம், 116, பலாலி வீதி (கராச் ..ருகில்), கந்தர்மடம் என்னும் முகவரியில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். (62553)

தமிழ், ஆங்கில, தட்டச்சு சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புக்கள்(புதிய பிரிவு)1-2-99-ல் ஆரம்பமாகவுள்ளன. பயிற்சி நிலையம், சந்தையடி ஒழுங்கை, ஆவரங்கால் எனும் முகவரியில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். (62493)

## வாடகைக்கு

சுன்னாகத்தில் இல. 100 காங்கேசன்துறை வீதியில் பழைய பொலீஸ் நிலையம் முன்பாக கடை தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு. வேறு கடைத் தளபாடங்களும் சகாய விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜெமினி, 280, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (62567)

## ஆங்கிலம் விஷேடமாக

O/L பரீட்சையில் Distinction, G.A.Q. உள்வாரி, வெளிவாரிப் பட்டப்படிப்பில் A பெறுபேறடைய (Spoken English உட்பட) கற்பிக்கப்படும் ஆசிரியர் B Sc. London Inter 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (62558)

## சிங்கா வகுப்பு

பேச, எழுத வாசிக்கவும், O/L பரீட்சையில் தக்க சான்று பெறும் வகையிலும் (தமிழ் மொழி மூலம்) ஆறு மாதங்களில் கற்பிக்கப்படும். ஆசிரியர் லீலாகிருஷ்ணன் ஆரம்பம்: 31—01—99 ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு ஆறுகால்மடச் சந்தி, மானிப்பாய் வீதி. (அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்) (62564)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழிகள் தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (62576)

## திருமண சேவை

சகல மதத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். நேரிலும், தபால் மூலமும் தொடர்பு கொள்ளலாம். க. திலகராசா, இல. 36/11, காட்டுக் கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (62527)

## வியாழ மாற்றம்

வியாழமாற்றம் 09-01-99, செவ்வாய் மாற்றம் 18-01-99 ($7\frac{1}{2}$ மாதங்களுக்கு) எங்கும் விற்பனையாகின்றன. ரூபா 12 கணிப்பாசிரியர் Prof. சத்தியதாஸன் (Mech - E, Elec - E) புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. (சி/6164)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 11 — 12 — 1912

மறைவு 31 — 12 — 1998

## திருமதி சின்னத்துரை பொன்னம்மா

எம் குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், ஆறுதல்களையும், அனுதாபச் செய்திகளையும் அறிவித்தோருக்கும் பல வழிகளிலும் உதவி செய்தோருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

இன்று (30 — 01 — 99) சனிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

அரசடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (62579)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

உயர்திரு.

## பொன். முத்துக்குமாரு

எமது சனசமூக நிலையத்தின் ஆரம்ப உறுப்பினராக இருந்து நிலையத்தின் வளர்ச்சிக்காகப் பெரும் பங்களிப்புச் செய்த உயர்திரு. பொன். முத்துக்குமாரு அவர்களின் மறைவை ஒட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபத்தைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**பன்னாலை கணேச சனசமூக நிலையம்,**
**தெல்லிப்பழை.**

(62502)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்லி



தோற்றம் 02 — 12 — 1936

மறைவு 22 — 01 — 1997

அமரர்

## செல்லர் ஆறுமுகதாஸ்

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

**மனைவி, பிள்ளைகள்.**

திருக்கேதீஸ்வரி இல்லம்,
இணுவில் தெற்கு. (62532)

# என்றும் மறக்கொணா
# 4 ஆம் ஆண்டு நினைவுத்துளிகள்



மேதகை உயர்திரு.

## ஏரம்பு சோதிலிங்கம்

(மண்டைதீவு)

மண்ணகம் 14—04—1926

விண்ணகம் 15—01—1995

திதி: 30—01—1999

அன்பின் திருவுருவமே ஆற்றலின் உறைவிடமே
இகம் போற்றும் உத்தமரே ஈகைக் குணத்தவரே
உயர்ந்தோர் மதிக்கும் தீரனே ஊக்கத்தால் உயர்ந்தவரே
எல்லையிலாப் புகழுடையவரே ஏதிலார்க்கு உதவுபவரே

உங்கள் அன்பாலும் அரவணைப்பாலும் ஆற்றலாலும் நாம் தரணியில் தலை நிமிர்ந்து வாழ வழி செய்தவரே. விண்ணகம் சென்று நான்கு ஆண்டென்ன நாலாயிரம் ஆயிடினும் நெஞ்சம் மறக்குமோ! உங்களை வருவீர்களென எதிர்பார்த்து ஏமாந்தோம் தெய்வத்துள் தெய்வமாகிய உங்களைப் போற்றியே வணங்கி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**இனிய மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**மைத்துனர், சகோதரி.**

ஸ்ரேசன் வீதி,
கொக்குவில். (62595)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி விழா வாழ்த்துக்கள்

மக்களோடு அன்போடும், பண்போடும்,
பணிவோடும் பழகி நற்பணிகள் பல புரிந்து
**இன்று மணி விழா (60) மாண்புறும்**
வலி. மேற்கு பிரதேச செயலர்

**கா. சந்திரராசா** அவர்கட்கு

எம் இனிய நல் வாழ்த்துக்கள்
''மக்கள் சேவையே மகேசன் சேவை''

**சங்கரத்தை கிராம சேவகரும்,**
**சங்கரத்தை துணவி வாழ் மக்களும்.**

(சி-6309)



## நல்லூர் பிரதேச சபை பதவிகள் வெற்றிடங்கள்

ஒப்பந்த அடிப்படையில்

## பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வசிக்கும் 18 வயதுக்கு குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் உள்ள ஆண், பெண் இருபாலாரிடமும் இருந்து கோரப்படுகின்றன.

1) மருந்துக் கலவையாளர்
2) வருமான மேற்பார்வையாளர்
3) காரியாலய காரிய சகாயர்
4) சாரதி (உழவு இயந்திரம்)
5) காவலாளர்

விண்ணப்பப்படிவம் யாவும் 10-02-1999 ஆம் திகதிக்கு முன்னர் ''தலைவர், நல்லூர் பிரதேச சபை'' என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். ஆட்சேர்த்தல் சம்பந்தமான மேலதிக விவரங்களை காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

**க. மணிபல்லவராஜன்**
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். 27-01-99. (சி/6303)


## மின்கம்பத்திலிருந்து விழுந்து காயம்

வடமராட்சி, ஜன. 30

மின் கம்பத்தில் ஏறி மின் இணைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒருவர் கீழே தவறி விழுந்து இரண்டு கால்களும் முறிந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் பொலிகண்டிப் பகுதியில் இடம்பெற்றது.

கரவெட்டி கிழக்கு கிழவித் தோட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை தவனேசன் (வயது 19) என்பவரே இரண்டு கால்களும் முறிந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15-173-7)

## கப்பல் மூழ்குகிறது

கொழும்புத் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட வெளிநாட்டுக் கப்பல் ஒன்று கடலில் மூழ்கிக்கொண்டு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நவபம்ர் மாதம் முதலாம் திகதி இக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் திருத்த வேலைகளுக்காக நங்கூரமிட்டிருந்தது.

நேற்று முன்தினம் காலை இந்தக் கப்பல் துறைமுகத்திலிருந்துபுறப்பட்டுச்சென்றதாகவும் 35 மைல் தூரத்தில் அது மூழ்கத் தொடங்கிவிட்டதாகவும் கடற்படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலை மீட்கும் பணியில் தற்போது கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். (இ-21)


## டாக்டர் தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல தனியார் வைத்திய சாலைக்கு MBBS தகைமையுடைய டாக்டர் உடன் தேவை.
முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

Director
**CENTRAL NURSING HOME**
**350, PALALY ROAD,**
**JAFFNA.**

[ 62598 ]



## மருத்துவமனை திறப்பு விழா

### யாழ். வைத்தியசாலை

என்னும் நிறுவனம் 30-01-99 சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு இலக்கம் 284, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மருத்துவமனை அரசாங்க அதிபர் உயர்திரு. க. சண்முகநாதன் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

* கண் சத்திரசிகிச்சை
* மகப்பேற்று மருத்துவம்
* சத்திர சிகிச்சை
* நோயாளர் தங்கும் வசதி
* வைத்திய நிபுணர் ஆலோசனைகள்
* வெளி நோயாளர் பரிசோதனை
* மருத்துவப் பரிசோதனை
* குழந்தை மருத்துவம்
* பல், தோல் சிகிச்சை இவற்றுடன் மருத்துவ ஆய்வுகூடம், ஈ. சி. ஜீ. டிஸ்பென்சறி வசதிகள்

**இரவு பகல் MBBS வைத்தியரின் சேவை**

குறைந்த கட்டணம்!
நிறைந்த சேவை!

- நிர்வாகத்தினர்

(62554)



## பாரம்பரிய கலைகள் 'மேம்பாட்டுக்கழக

**நிதிக்காக**

**13 ஆவது, 14 ஆவது மேடையேறுகிறது**

## செல்லையா மெற்றாஸ்மயிலின் நெறியாள்கையில்

தரமான கலைஞர்களுடன்

# வேழம்படுத்த வீராங்கனை

(ஆட்ட நாட்டுக்கூத்து)

மிக விரைவில்
வடமராட்சியில்
எதிர் பாருங்கள்



இடம்: **சுழிபுரம் விக்ரோரியாக்கல்லூரி மண்டபம்**
காலம்: **31 - 01 - 1999** ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10-00 மணி — 12-00 மணி வரை பி. ப. 2-30 மணி — 4-30 மணி வரை.
மாணவர்க்கு **20/-** ஏனையோர்க்கு **50/-**
**இரு காட்சிகள்**

**காலை**
பிரதம விருந்தினர்: **திரு. சு: கணபதிப்பிள்ளை**
(பிரதிக்கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)
சிறப்பு விருந்தினர்; **திருமதி அ. வேலுப்பிள்ளை** (அதிபர், விக்ரோரியாக் கல்லூரி)

**மாலை**
பிரதம விருந்தினர்: **கா. சந்திரராசா**
(பிரதேச செயலர். சங்கானை.)

**தவறாது சமுகம் தரவும்**

**பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்**

விளம்பர அன்பளிப்பு:

உரிமையாளர்: செ. ஸ்ரீ. சந்தனராசா
**பபித்தா நகைத் தொழிலகம்**
**அம்பிகாவத்தை வீதி, சங்கானை.**

உரிமையாளர்: மு, ஜெயச்சந்திரன்
**உதயா பேக்கரி**
**வல்லை றோட், சங்கானை.**

**அ. ச. ஆறுமுகம் அன் சன்ஸ்**
81, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(சி/6294)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் தொழில் நுட்ப நிறுவனத்துக்கு அதிகாரசபை மூலம் ரூ. ஒரு கோடி நிதி

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாண உயர் தொழில் நுட்ப நிறுவன அபிவிருத்திப் பணிகளுக்காக வட பகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை ஒரு கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

இந்த நிதியில் இருந்து 20 லட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

அத்துடன் இந்த நிதியில் இருந்து நிறுவனத்துக்கு ஒரு கணனி ஆய்வு கூடம் அமைக்கப்படும். இந்த ஆய்வுகூடம் 40 கணனிகளைக் கொண்டு இயங்கும். இதற்கான 40 கணனிகளையும் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இதேவேளை—

கடந்த பல மாதங்களாக கப்பல் வசதி இன்றி கொழும்பில் வைக்கப்பட்டிருந்த மேற்படி நிறுவனத்துக்கான தளபாடங்கள் 'மாஹோ' கப்பல் மூலம் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன. 'மாஹோ கப்பல் பொருள்களை ஏற்றியபடி நீண்டகாலம் கொழும்புத் துறை முகத்தில் தரித்து நின்றதனால் கடல் நீர் பட்டு கணனிகளுக்கென பிரத்தியேகமாக கொள்வனவு செய்யப்பட்ட மேசைகள் நீரில் ஊறி முற்றாகச் சேதமடைந்துள்ளன. இவற்றின் பெறுமதி சுமார் ஒரு லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-6)

## நாளை

யாழ்ப்பாணம், ஜன. 30

'அன்பு, திருமணம், பாலியல்— ஓர் உளவியல் நோக்கு' என்ற தலைப்பிலான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அகவொளி இயக்குநர் அருட்திரு. எஸ். ஜே. இராஜநாயகம் கருத்துரை வழங்குவார். (ஐ-க)

# 3 சிறுவர் பூங்காக்கள் நெடுந்தீவில் அமையும்

முதலாந்தர மாணவர்களுக்கென நெடுந்தீவில் மூன்று சிறுவர் பூங்காக்கள் அமைக்கப்படும்.

மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை, மத்தி சிக்கிரியான் பன்னம் றோ.க பாடசாலை, மத்தி றோ.க பெண்கள் பாடசாலை ஆகியவற்றில் அமையவிருக்கும் மேற்படி சிறுவர் பூங்காக்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதம் 30 ஆயிரம் ரூபாவை நெடுந்தீவு பிரதேச சபை வழங்கவுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் அ. வெ. அரியநாயகம் தெரிவித்தார். (ஐ-111)


நிதுஷா ஸ்ருடியோ

வீடியோ & கறுப்பு, வெள்ளை வர்ணப்புகைப்படச்சேவை

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

(62600)



ENGLISH / SINHALA

ENGLISH — சகல தரங்களுக்கும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

சிங்களம் — புதிய பிரிவு ஆரம்பம்.

30 - 01 - 99 — சனிக்கிழமை பி. ப. 2. 00 மணி

T. SAGATHEVAN B. A (Lond.)

46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [62568]


சிவமயம்

இணுவில்

## கந்தசுவாமி கோயில் தைப்பூசப் பெருவிழா திருமஞ்சத் திருவிழா

காலை, சண்முகப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும், மாலை 3 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று, சண்முகப் பெருமான் விசேட மேளக் கச்சேரி சகிதம் திருவீதியுலா வரும் அருட்காட்சியும் இடம்பெறும்.

அடியார்கள் யாபேரும் எம்பெருமானின் இஷ்ட சித்தி பெற்றுய்வார்களாக!

குறிப்பு:

அருள்மிகும் இணுவில் கந்தசுவாமி கோயிலின் திருமஞ்சம் வரலாற்றுச் சிறப்பும், சிற்ப நுணுக்கங்களும் நிறைந்த பழம்பெரும் தெய்வீகப் பொக்கிஷம் ஆகும். இது தற்போது திரு கந்தையா சுந்தரலிங்கம் அவர்களினால் புதுவர்ணம் தீட்டப்பட்டுள்ளது.

- நிர்வாக சபை

இணுவில் கந்தசுவாமி கோயில்.

(சி/6300)

யாழ்/ பல்கலைக்கழகம்

## கேள்விப்பத்திர அறிவித்தல் சீருடை வழங்கல்

யாழ்/ பல்கலைகழகத்திற்கு 550 மீற்றர் கருஞ்சாம்பல் நிற காற்சட்டைத் துணி வழங்குவதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரதாரர், மீளளிக்காதவைப்புப் பணமாக ரூபா 250 பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற் கட்டளை, நிதியாளர், யாழ்/ பல்கலைக் கழகம் என்ற பெயரில் இணைக்கப்படல் வேண்டும்.

6'' x 6'' அளவுடைய மாதிரித் துண்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விப் பத்திரதாரர், உறுதி செய்யப்பட்ட கட்டளை வழங்கப்பட்டு மூன்று (3) வாரங்களுக்கு இடையில் யா/ பல்கலைக் கழக பண்டக சாலையில் இவற்றை வழங்க தயாராக இருக்க வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் ஏதாவது ஒரு விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

1. நிதியாளர், யாழ்/ பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
2. நிதியாளர், யாழ்/ பல்கலைக்கழகம், மே/பா வரையறுக்கப்பட்ட

யாழ்ப்பாண கூட்டுறவுச்சங்கஸ்ரோர்,
154, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு 13,
(தொ. இல. 435620)

கேள்விப் பத்திரங்கள் 15 - 02 - 1999 பிற்பகல் 2-30 மணிக்கு முன்பாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ சமர்பிக்கப்படல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்/ பல்கலைக்கழகம்
(சி-6201)

லயன்ஸ் கழகம் மானிப்பாய் வட்டம்

## இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் வைபவம்

இடம்: மானிப்பாய் இந்துக் கல்லூரி

காலம்: 31 - 01 - 1999 (ஞாயிறு) காலை 9-00 மணி

பிரதம விருந்தினர்: லயன் பேராசிரியர் கா. குகபாலன் அவர்கள்

கண் பரிசோதனைகளில் தெரிவானோர்களுக்கு அறிவித்துள்ளோம்.

லயன் C. செயநாயகம்,
தலைவர்,

லயன். S. S. தங்கராஜா,
செயற்திட்ட தலைவர்.

சேவை பிரசுர உதவி:

V. K. RAJARATNAM,
95, STANLEY ROAD,
JAFFNA.

(சி/ 6310)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
23 — 06 — 1925

ஆண்டவன் அடியில்
05 — 02 — 1993

அமரர்

### வேலுப்பிள்ளை முத்துக்கிருஷ்ணர்

(மாயவர்)

திதி: 30 - 01 - 1999

ஐயா!

அன்பும் பண்பும் கொண்டு
ஆளுமையில் உயர்வு கொண்டு
இல்லறத்தில் நல்லறம் கண்டு
ஈகையில் நிறைவு கண்டு
உலகம் உவப்ப வாழ்ந்தீர் – வற்றாத
ஊற்றது போல் உம் நினைவு
எப்போதும் நிறைந்திருக்கும்
எம் மனதில்.

மனைவி. மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

காளிகோயிலடி,
மல்லாகம்.

(சி/6308)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
12 — 03 — 1929

மறைவு
31 — 12 — 1998

அமரர்

### பிள்ளையார் இராசையா

அன்புடனே எம்மருகே காத்திருந்து
அணையாத ஒளிவிளக்காய் ஒளி வீசி
பாசமுடன் உணவளித்து வளர்த்தெடுத்து
பாரினிலே புகழ் பரப்பி நின்ற எங்கள் ஐயா!
இடையினிலே பிரிவுத்துயர் தந்து விட்டு
எட்டவே சென்று விட்டீர் எங்கள் ஐயா!
விழித்திரையிலிருந்து நீங்கினாலும்
மனத்திரையில் என்றும் வாழ்ந்திடுவீர்!

அன்புத் தெய்வம் ஐயாவின் ஆத்ம சாந்திக்காக இறைவனை இருகரம் கூப்பி நிற்கின்றோம்.

30 — 01 — 99 இல் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் உறவினர், நண்பர்களைக் கலந்து கொள்ளும்படி வேண்டுகிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

1 ஆம் குறுக்குத் தெரு,
இணுவில் றோட்,
மானிப்பாய்.

(62565)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று நடப்பவை

பருத்தித்துறை, ஜன. 30
வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் ஒன்பது வகுப்புக்ளில் விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப்பயிற்சி வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இதே வேளை—

தரம் ஒன்பது, தரம் ஆறு கணித பாடமும் தரம் ஒன்பது, தரம் ஆறு சமூகக்கல்வியும் வரலாறும் ஆகிய பாடங்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளதென வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார்

ஏற்கனவே 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்ட சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன. இவைபற்றிப் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார், (ஐ-118)

★ ★ ★

கோண்டாவில், ஜன. 30
யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழக சிறு வணிக முகாமைத்துவ ஆண்டிறுதிப் பரீட்சை இன்று காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறாத மாணவர்கள் இன்று பரீட்சை நிலையத்தில் மாணவர் பதிவுப் புத்தகங்களை ஆதாரமாகக் காட்டி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என பிராந்திய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ-ரீ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 30
அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் 35 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பாரதிதாசன் நூலகத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவும் இன்றுசனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சனசமூகநிலையத்தலைவரும் உடுப்பிட்டி அ. மி. கல்லூரி அதிபருமான கி. நடராசா தலைமையில்நடைபெறும்இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக 'போரூட்' நிறுவன திட்ட முகாமையாளர் திருமதி அனிஅங்கிலட்விட் கலந்து கொள்வார். (ஐ-15)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 30
கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் மகாகுருபூசையும், 'ஞானநிட்டை' நூல் வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆச்சிரமத்தில் தலைவர் இ. குழந்தைவடிவேலு தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலாளர் பு.சுந்தரம்பிள்ளையும், கௌரவ விருந்தினராக யாழ். அம்பிகை களஞ்சிய உரிமையாளர் த. குகனேசனும், ஆச்சிரம பீடாதிபதி அருள் நோக்கு சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையாரும், ஸ்ரீ சச்சிதானந்த ஆறுமுக சுவாமிகளும் பங்குபற்றவுளனர். (ஐ-30)

★ ★ ★

யாழ் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தின் சமூக ஒளி நூல் வெளியீட்டு நிதிக்கான கவிஞர் இ. முருகையனின் 'எல்லாம் சரிவரும்' நாடகம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கும், மாலை 3 மணிக்கும் இரு அமர்வுகளாக பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேறவுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் 'முயற்சி' திறன் விருத்தி மையத்தின் நிதி சேகரிப்பிற்காகவும் இந்த நாடகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்கும் வேம்படி பெண்கள் உயர்தரக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (ஐ-க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 30
மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் 50 ஆவது வருடாந்த கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 5மணியளவில் நிலையத் தலைவர் அ. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் செயற்பாடுகள் தொடர்பாக வங்கியில் உறுப்புரிமை பெற்ற ப. நோ. கூ. சங்கங்களின் நெறியாளர் குழு உறுப்பினர்களுக்கான செயலமர்வு இன்று காலை 10மணிக்கு சுன்னாகம் ப. நோ. கூ. சங்க அலுவலக மண்டபத்தில் நடைபெறும். (17)

## இளைஞனுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன. 30
திருட்டுக் குற்றச் சாட்டுக் காரணமாக யாழ். நீதிமன்றத்தில் கடந்த புதனன்று ஆஜர் செய்யப்பட்ட இளைஞர் ஒருவரைபெப்ரவரி 9 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.


## அப்பலோ வைத்திய நிலையம்
## திறப்பு விழா

இல 16, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்திக்கும் இலுப்பையடிச் சந்திக்கும் இடையில்)

இன்று (30-01-99) சனிக்கிழமை காலை 9-00 மணிமுதல் 9-35 மணிவரையுள்ள சுப நேரத்தில் வைத்திய நிலையத்தை

உயர்திரு து. வைத்திலிங்கம் அவர்கள்
(மேலதிக அரசாங்க அதிபர்)
திறந்து வைப்பார்.

மேற்படி வைத்தியசாலையில்:
கண்வைத்திய ஆலோசனையும் சத்திரசிகிச்சையும்
ஏனைய சத்திரசிகிச்சையும் ஆலோசனைகளும்

### 24 மணிநேர சேவை

★ சிறந்த வைத்திய நிபுணர்களால் வழங்கப்படும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

- நிர்வாக இயக்குநர்கள்

(62631)


## வெள்ளைக் கொடியை...

(முதலாம் பக்கத் தொடர்)
இரத்தப்போக்கினாலும் பீதியினாலும் நடுநடுங்கிக் கொண்டிருந்த அவர் இச்சம்பவம் பற்றி மேலும் விவரிக்கையில் கூறியதாவது:-

இடம்பெயர்வுக்குப் பின்னர் மல்லாவிப் பகுதியில் தஞ்சமடைந்திருந்த நானும் என்னைப்போன்ற பலரும் எமது சொந்த இடத்தில் மீளக்குடியேறும் நோக்கத்துடன் உயிராபத்தான இந்தப் பயணத்தை மேற்கொண்டோம்.

நேற்று முன்தினம் இரவு 9 அல்லது 10 மணியளவில் அங்கிருந்து — எனக்கு அது எந்த இடம் என்று தெரியாது — படகொன்றில் ஏறினோம் என்னுடன் 15 பேர் வரையில் இந்தப்படகில் பயணம் செய்தோம்.

கடும் குளிரின் மத்தியில் நிலாவெளிச்சத்தில் மெல்ல மெல்ல எமது படகு ஊர்ந்து வந்தது.

குருநகர் கரையிலிருந்து சிலமைல் தூரமுள்ள மண்பிட்டியொன்றில் படகிலிருந்து இறங்கி, குருநகருக்கு வருவதற்காகக் காத்து நின்று கொண்டிருந்தோம்.

அப்பொழுது நேரம் காலை 7 மணியிருக்கும். ஹெலிகொப்டரொன்று நாமிருந்த பகுதியை நோக்கி வந்து பல தடவைகள் வட்டமிட்டது.

ஹெலிகொப்டரின் இரைச்சலினால் அச்சமடைந்த நாம் வெள்ளைச் சீலை ஒன்றை உயர்த்திக்காட்டி நாம் அகதிகளாக வந்திருக்கிறோம் என்று சைகை மூலம் தெரிவித்தபோது, வெள்ளைச் சேலையை உயர்த்திப் பிடித்தவர் மீது சரமாரியாக ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிச் சூடு நடந்தது. இதனால் அவர் அங்கேயே துடிதுடித்து விழுந்தார். உடனே நாங்கள் எல்லோரும் கீழே விழுந்து படுத்துவிட்டோம்.

ஹெலி சென்றபின் எழுந்து பார்த்தபோது எனது இடது பக்க கையிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்ததைக் கண்டேன். என்னைப்போல இன்னுமோர் இளைஞனும் காயமடைந்திருந்தார். ஒருவர் இறந்திருந்ததையும் கண்டேன்.

சில மணித்தியாலங்களின் பின் எமது நிலையை அறிந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் கரையில் இருந்து படகுகளையனுப்பி எம்மைக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தனர்— என்றார்.

## ஹெலித் தாக்குதலில்...

(முதலாம் பக்கத் தொடர்)
வன்னியில் இருந்து படகு மூலம் குருநகர் நோக்கிவந்து கொண்டிருந்த இவர்கள் குருநகருக்கு அண்டிய பகுதியில் மண்பிட்டி ஒன்றில் தங்கியிருந்த சமயமே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்ததாக்குதலில் முத்திரைச் சந்தைப்பகுதி நற்சுவிஷேச சபையின் போதகரான ஞானப்பிரகாசம் அலோஷியஸ் (வயது 38) அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்,

இறந்தவரின் ஒன்றுவிட்ட சகோதரரான சிவகணேசன் சிவகுமார் (வயது 24-நாயன்மார்கட்டு), இராமு கனகம்மா (வயது73-கொக்குவில் மேற்கு) ஆகியோர் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இறந்தவரின் சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இறந்த மற்றும் காயமடைந்தவர்கள் தவிர்ந்த எஞ்சிய 10 பேரும் குருநகர் சீநோர் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டு விசாரிக்கப் பட்டு வருகின்றனர்.
(உ-3-5-15-17-51 -139-180)

## குருநகர்க்...

(முதலாம் பக்கத் தொடர்)
நேற்று முன்தினம் இரவும், நேற்றுக் காலையிலும் அச்செழுப் பகுதியிலிருந்து குருநகர் கடற்பகுதியை நோக்கி ஏவிவிடப்பட்ட ஷெல்கள் மற்றும் பீரங்கிகளால் யாழ். நகரப்பகுதி அதிர்ந்தது. இரவிரவாக ஹெலிகள் பறந்தன. மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது. (உ-3-7-15-51)

## 6 ஈழத்...

(முதலாம் பக்கத் தொடர்)
இவ்வாறு மரணமடைந்தவர்கள் அனைவரும் 30 வயதுக்கும் 32வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும்—

இவர்கள் அனைவரும் அரசியல் தஞ்சம் கோரி ஸ்லேவாக்கியாவில் தஞ்சம் அடைந்த தமிழர்கள் எனவும் அந்த நாட்டுப்பொலீஸாரால் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## செம்மணியைத் தோண்டுவது...

[முதலாம் பக்கத் தொடர்]
போது பிரசன்னமாகி இருப்பதற்கு தற்போது பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள சட்ட மருத்துவ நிபுணர், அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் ஆகியோருடன் மேலதிகமாக தேர்ந்த மண்ணியல் நிபுணர் ஒருவரின் பெயரையும் சிபார்சு செய்யும்படி கடந்த தவணையின் போது நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது தெரிந்ததே.

நேற்று இரகசியப்பொலீஸ் திணைக்கள சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஜே. ஆர். ஜெயவர்த்தனா நீதிமன்றில் ஆஜராகி மண்ணியல் நிபுணர் தொடர்பான விவரங்களைச் சமர்ப்பித்தார்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 1979 ஆம் ஆண்டு முதல் மண்ணியல் துறையில் பணிபுரியும் பேராசிரியர் கே. ஏ. நந்தசேன இப்பணியில் ஈடுபட இணக்கம் தெரிவித்துள்ளார் என்று அவர் சொன்னார்.

மண்ணியல் நிபுணர் தொடர்பான அவரது கல்வி நிலை சேவைக்காலம் ஆகியவற்றை ஆராய்ந்த நீதிவான் செம்மணி புதைகுழி தோண்ட முன்பும் தோண்டும் போதும் தோண்டியபின்பும்நேரடியாக சமுகம் கொடுத்து நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று அவரைப் பணிக்கும் உத்தரவைப் பிறப்பித்தார்.

பேராசிரியர் கே. ஏ. நந்தசேன மற்றும் சட்டமருத்துவத்துறை பேராசிரியர் நெரியல்லகே சந்திரசிறி, அரசாங்கப் பகுப்பாய்வாளர் எம். ஜே. மெண்டிஸ் ஆகியோரை நீதிமன்றத்தில் பிரசன்னமாக நோட்டீஸ் பிறப்பிக்கும்படி இரகசியப் பொலீஸ் அதிகாரி நீதிவானிடம் விண்ணப்பித்தார்.

செம்மணிப் புதைகுழியைத் தோண்டக் கூடிய தளநிலை உள்ளது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கும்போது இவர்களுக்கு நீதிமன்றம் நோட்டீஸ் பிறப்பிக்கும் என்று நீதிவான் தெரிவித்தார்.

செம்மணியில் மனிதபுதைகுழி இருப்பதாகக் கருதப்படும் பகுதியில் இன்னமும் மழைவெள்ளம்வடியாததால், தோண்டும் பணியை உடனடியாக ஆரம்பிக்க முடியாது என்றும்—

ஆகவே அதற்குக் கால [illegible]

என்றும்—

இரகசியப் பொலீஸ் தரப்பில் நேற்று நீதிமன்றத்துக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட நீதிவான் மார்ச் மாதம் 5 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

செம்மணிப் புதைகுழியைத் தோண்டும் பணி ஆரம்பிக்கப் படும் வரை அந்தப் பிரதேசத்துக்குள் எவரும் நுழையவோ, அங்குள்ள நிலத்தில் எந்தவித செயற்பாடுகளைச் செய்யவோ அனுமதிக்க முடியாதவாறு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதிக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

புதைகுழிகள் தோண்டப் படும் போது—

கைதாகிக் காணாமற் போனோரின் உறவினர்கள் அங்கு பிரசன்னமாக இருக்க அனுமதிக்க முடியும் என்று நீதிவான் தெரிவித்தார்.

கைதானோர், காணாமற் போனோர் ஆகியோரின் நலன்களைக் கவனிக்க ஆஜரான சட்டத்தரணிகள் தோண்டும் பணிகள் நடைபெறும்போது, காணாமற் போனவர்களின் உறவினர்கள் அங்கு பிரசன்னமாக இருக்க அனுமதிக்க வேண்டும் என்று நீதிமன்றில் கோரினார்.

''தோண்டும் பணி நடைபெறும் போது நூற்றுக்கணக்கில் அங்கு மக்களை அனுமதிப்பது கஷ்டமாக இருக்கும். அத்துடன் அங்கு புதைக்கப்பட்டிருக்கக் கூடிய கண்ணி மற்றும் மிதிவெடிகளால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படலாம்.

எனவே காணாமற் போனோரின் உறவினர்கள் தமது சத்தியக் கடதாசிகளைச்சமர்ப்பிக்கலாம். அதை ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்கள் அங்கு பிரசன்னமாக இருக்க அனுமதிக்க முடியும்'' —என்று நீதிவான் தெரிவித்தார்.

வழக்கைப் பார்ப்பதற்காக நேற்று காணாமற் போனோரின் தாய், மனைவி, உறவினர் என ஏராளமானவர்கள் நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தனர். (உ-3-5)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 13 — 12 — 1923



உதிர்வு: 10 — 02 — 1998

அமரர்
### சின்னையா திருநாவுக்கரசு

திதி: 30 — 01 — 99

அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்பதோடு அவர் நினைவாக நடைபெறும் நிகழ்வில் கலந்து மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— மனைவி

71, அம்மன் வீதி,
கந்தர்மடம்.

(சி/6313)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநெறி கல்வி நிலையம்

(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அண்மையில்)

**A/L 2000, 2001**

இரசாயனவியல்:- திரு. மகேஸ்வரன் [B. SC (HONS)]

ஆரம்பம்:- 03 - 01 - 99 பிற்பகல் 4 மணி

(அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன் கூட்டியே பெறவும்) (சி-6284)



# சுனில் ஆட்ஸ்

சில தினங்களில் கலர்படச் சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும். உங்கள் கலர்படச் சுருள்களை நீங்கள் விரும்பிய லாப்பில் (Lab) கழுவிப் பெற்றுக் கொள்ள

**சுனில் ஆட்ஸ்**

272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/6311)



# DCS
# COLLEGE OF COMPUTER TECHNOLOGY

## (BRITISH ACP RECOGNIZED TRAINING CENTRE

ஏழாவது முறையாக வழங்கப்படும் 1000 புலமைப்பரிசில் திட்டம் 1999/2000

### COMPETITIVE EXAMINATION FOR COMPUTER STUDIES 1999/2000

இத் திட்டத்திற்கு நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் பரீட்சைப் பெறுபேறு மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர். டிபோட்டிப்பரீட்சைக்கு 15வயதுக்குமேற்பட்ட இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சிறந்த பெறுபேறு பெறும் பரீட்சார்த்திகளுக்கு இலவச புலமைப்பரிசில் மூலம் கணனி செய்முறை தொடர்பான பின்வரும் பாட நெறிகள் கற்பிக்கப்படும்:

### பயிற்சி நெறிகள் நடைபெறும் நிலையங்கள்

* கொழும்பு * மட்டக்களப்பு * திருகோணமலை
* வவுனியா * யாழ்ப்பாணம் *கிண்ணியா

### நுழைவுத் தேர்வுப் போட்டிப்பரீட்சை

(i) பொது அறிவு, நுண்ணறிவு (I. Q)
(ii) பரீட்சை நிலையங்கள் நாடளாவிய ரீதியில் ஒழுங்கு செய்யப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை

எமது ஏதாவது கிளை நிறுவனத்தில் அல்லது தலைமைக்காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப்படிவத்தில் அல்லது இதில் உள்ள விண்ணப்பப்படிவத்தில் அல்லது போட்டோ பிரதியில் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்படிவங்களை ரூபா 100/- பரீட்சைக் கட்டணத்துடன் காரியாலயத்தில் நேரடியாகவும் ஒப்படைக்க முடியும். அல்லது ரூபா 100/- காசுக் கட்டளை Director D C S என்றும் பணம் பெறும் நிலையம் Colombo GPD எனக் குறிப்பிட்டு மேற்படி முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**DCS**
DATA CONNECTION SYSTEM
( PRIVATE) LTD.

Director (Ad.)
DCS (Pvt.) Ltd.
College of Computer Technology,
124/2, Palaly Road,
P. O. Box. 144,
Jaffna.

### விண்ணப்பிக்கும் நிலையங்கள்

| | | |
|---|---|---|
| (1) | கொழும்பு | 399 1/1, காலிவீதி கொழும்பு-04 |
| (2) | மட்டக்களப்பு | 171, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. |
| (3) | யாழ்ப்பாணம் | 124/2, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். |
| (4) | திருகோணமலை | 156. கிறீன் வீதி, திருகோணமலை. |
| (5) | வவுனியா | M. P. C. S. Building புகையிரத வீதி, வவுனியா. |
| (6) | கிண்ணியா | 89, பிரதான வீதி, கிண்ணியா-2 |

### I. Diploma In Electronic Data Processing

( 8 Months )

* Computer Fundamentals
* Operating System
  Windows 98
* Database Management System
  Using foxpro with Advance Commands
  Visual Dbase
* Structured query Language
  SQL An Introduction
* Spread sheet
  Excel
* Option
  Internet
  E-mail
* Word Processing
  Word

### 2. Diploma in Computer Technology (Software)

( 12 Months )

* Computer Fundamentals
* Computer Programming
  Using Pascal
* Operating System
  Windows 98
* Database Management system
  Using Foxpro
* Structured query Language
  SQL An Introduction
* Global Networking
  Internet E - mail
* Spread sheet/Word Processing
  Excel Word
* Graphical Presentation
  Power Point
* Web Design
  HTML Introduction

### DCS COLLEGE OF COMPUTER TECHNOLOGY

(BRITISH ACP RECOGNIZED TRAINING CENTRE)

SCHOLARSHIP SCHEME - 99/2000

**Application Form**

Official Use [ ]

PLEASE USE BLOCK CAPITALS

01. Last name with initials:
Last Nama [ ]
Initials [ ]
Names denoted by initials [ ]
[ ]

02. Sex
Male [ ]
Female [ ]

03. Address of which the admission card should be posted [ ]
[ ]
[ ]

DD MM YY

04. Date of Birth [ ]

05. Identity Card No. [ ]

06. Course you like to follow: 1 [ ] 2 [ ]

07. Money Order No. [ ]

08. Issued Office [ ]

09. Date of issue [ ]

I Certify that the idformation given by me is correct and accurate. I do hereby agree to be bound by the requlation of this examination and the rules for candidates issued by Board of Directors of DCS.

........................ ........................
Date Signature

Closing Date: 21 - 02 - 99

(62555)


## கைதானவர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

சந்தேகத்தின் பேரில் யாழ். சப்பல் வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினரால் கைது செய்யப்பட்ட யோசெப் சில்வஸ்ரர் லக்ஸ்ரல் என்பவர் விசாரணையின்பின்னர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

512 பிரிகேட்டினால் விடுவிக்கப்பட்ட இவர் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி எஸ். சிறீதரன், கிராம சேவையாளர் ஆகியோர் முன்னிலையில் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார். (இ-5)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்)

துள்ளார்.

தேர்தலின் போது இடம்பெற்ற சட்டவிரோத நடவடிக்கைகளைக்காரணமாகக் கொண்டு தேர்தலை ஒட்டுமொத்தமாக ரத்துச் செய்யும் அதிகாரம்தனக்கு இல்லை எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

சுமார் 200 வாக்களிப்பு நிலையங்களில் பலாத்காரமாக வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன எனத் தனக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் பல வாக்களிப்பு நிலையங்களில் பல்வேறு குளறுபடிகள் இடம்பெற்றுள்ளன எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் சுமார் 47ஆயிரம் வாக்குகளை நிராகரிக்க நேர்ந்தது எனவும்—

இவற்றை விட சுமார் 10 ஆயிரம் வாக்குகள் தீவைப்பு மற்றும் காணாமல் போன காரணங்களால் ரத்துச் செய்யப்பட்டன எனவும்—

வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக தனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும்—

வாக்களிப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புக் குறித்து தான் திருப்தியடையவில்லை எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (உ-10)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர் )

காப்புத்துறையுடன் கலந்தாலோசித்தே மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆளுநர் அரச அதிபர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்தார்.

சிவில் அதிகாரிகளும் பாதுகாப்புப் படையினரும் தனித்தனியே தீர்மானங்கள் எடுப்பதால் மக்கள் பாதிக்கப்படும் நிலை உருவாகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குக் கடலில் மீன்பிடிப்பதற்கு எட்டுக் குதிரைச் சக்தியிலும் விட வலுக் குறைந்த இயந்திரங்களை மட்டுமே அனுமதிக்கும் தற்போதைய நடைமுறை மாற்றப்பட்டு 12 குதிரைச்சக்தி வரை வலுவுள்ள இயந்திரங்களைப் பாவிக்க அனுமதிப்பது என்றும் இந்த மாநாட்டில் முடிவு செய்யப்பட்டதாக அறியவந்தது. (உ-3-21)


எமது ஒறிஜினல் வீடியோ CD வெளியீடு!

அஜித்குமார், தேவயானி

**தொடரும்**

(பிரமிட் CD)

அடுத்த வெளியீடு!

ராஜசேகரின்

**தலைவா**

(புதிய போஸ்டர்களும் விற்பனைக்குண்டு)

**வீடியோ விமல்**

யாழ்ப்பாணம். (சி/6312)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30 - 01 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சஞ்சீவி

# சஞ்சிகை

30 - 01 - 1999 சஞ்சீவி

எம். ஜி. எம்

♥♥♥♥♥♥♥♥

திருமணச் சேவை

♥♥♥♥♥♥♥♥



மணமகனுக்குத் தேவையான கோட்—சூட்.
சர்வாணி—சூட், தலைப்பா வாடகைக்கு விடப்படும்.

**163, மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(பஸ்நிலையம் முன்பாக) (சி/6266)

## கருத்துக் கலசம்

மயூரா

### பண்பாடு பேணல்

**"தமிழர் இயல்பாகவே திட மனதுள்ள பண்பாட்டை உடையவர்கள். இலட்சிய வாழ்வைக் கடைப்பிடித்து அதற்கு ஒப்ப நடக்குந் தமிழர்களை நன்னெறினின்றும் திருப்ப ஒருவராலும் முடியாது."**

யாழ்ப்பாணத்தில் — எமது சமூகத்தில் — வாழ்ந்த அறிஞர்களில் ஒருவரான கலாநிதி சு. நடேசபிள்ளையின் கருத்து இது. சுமார் 45 வருடங்களுக்குமுன்னர் குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

எங்களுடைய பண்பாடு குறித்து அவர் கொண்டிருந்த நம்பிக்கையினையும் அது குறித்து அவர் மனம் பெருமை கொண்டதனையும் —

இன்று அவை உடைந்து போகும், உருக்குலைந்து போகும் ஆபத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதையும் — ஒப்பிட்டுப் பார்க்கவே மனம் விரைகிறது.

மேற்குறிப்பிட்ட அறிஞர் மட்டுமென்ன, எல்லோருமே பெருமைப்படும் பண்பாடுகளைக் கொண்டிலங்கியது எமது தமிழர் சமூகம். ஆனால் அவை இப்போது மறக்கப்பட்டவையாக, ஒதுக்கப்பட்டவையாக மாறிவருகின்றன.

பழம்பெருமைகளை வெறுமனே பேசிக்கொண்டிருப்பதால் அவை பேணப்படமாட்டா. அவற்றை வாழ்க்கையில் கைக்கொள்வதன் மூலமே, பின்பற்றுவதனாலேயே அழியாது பாதுகாக்கலாம்; வளர்க்கலாம்.

தமிழர்களுடைய மொழி காலத்தால் மூத்தது மட்டுமன்றிக் கருத்தாலும் மூத்தது. அதே போன்று அவர்களுடைய நாகரிகமும் பண்பாடுகளும் மூத்தவை.

தமிழர்களின் நாகரிகத்தின் அடித்தளமாக விளங்குவது சமய நெறிகளே. அதே போன்று தமிழர் பண்பாடுகளும் சமய நெறிகளை அண்டி வளர்ந்தவையே.

மாற்றார் நாகரிகத்திலும், பண்பாடுகளிலும் நாட்டம் கொண்டு அவற்றையே பின்பற்றும் போக்கே இன்று மலிந்து காணப்படுகிறது.

சமய நெறிப்படி வாழும் முறை பின்னரங்குக்குத் தள்ளப்படுகிறது. அதற்கான போதனையும் இல்லை; வழிகாட்டுதலும் இல்லை.

ஆலயங்கள் வெறும் கிரியைக் கோயில்களாக இருப்பது இதற்கான பிரதான காரணங்களில் ஒன்று. அங்கு சமய நெறி — வாழ்க்கைமுறை — போதனையும் நடைபெற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து இப்போதே சிந்தித்துச் செயற்படுவது நல்லது.

# வள்ளுவரும் காந்திஜியும்!

காந்திஜி வாழ்வு கீதை வாழ்வு. அவர் வழி கீதை வழி.

போர்க்களத்தில் எழுந்தது கீதை. அதற்கு மாறுபட்ட உரைகள் பல மலிந்து கிடக்கின்றன. காந்திஜி, கீதையில் அஹிம்சையின் அடிப்படையைக் காண்கிறார்.

திருக்குறள் தமிழ்க் கீதை. இது தமிழர் தம் வாழ்க்கைப் போரிடையே மலர்ந்தது. எப்படி விளக்க முயன்றாலும், திருக்குறள் அஹிம்சையை அடியாகக் கொண்டதாகும்; ஆராய்ந்தோர் ஆர்வமுடன் இதனை ஏற்றுக் கொள்வர்.

ஆகவே, வள்ளுவர் காந்திஜியின் ஆசிரியர்; வழிகாட்டல்களில் ஒருவர்.

காந்திஜிக்கு ஆசிரியர் பலருளர். ருஷ்யநாட்டு டால்ஸ்டாய் முதன்மையான அஹிம்ஸை ஆசிரியர். ஆனால் வள்ளுவரை விட காந்திஜி இன்று உலகில் விளக்கமடைந்திருக்கிறார். ஆசிரியரை விட மாணவன் மிகுந்த அறிமுகமும், புகழும் உடையவனாகக் கூடாதா? இல்லையானால் மாணவனுக்கென்ன பெருமை? ஆசிரியனை விடச் சிறந்து நிற்காத மாணவன் மாணவனல்லன்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வள்ளுவர் அறிவு, இன்று எவ்வளோ கடந்து முன்னேறிப் பெருகியுள்ளது; தெளிந்துள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளில் அடைந்த அறிவு வள்ளுவர் அறிவுடன் சேரவேண்டாமா? அப்போது எவ்வளவு பெருகும்; பெருமையுறும்! அன்று வள்ளுவரைத் தமிழுலகம் மட்டும் அறியும் இன்று காந்திஜியை உலக முற்றும் அறியும். அறிவின் விளக்கம் உலகையே அணைத்துக்கொண்டது.

உலகை நடத்துவன மூன்று ஒளிகள். அவை:- ஞாயிறு, திங்கள், தீ என்பன.

மக்களை வாழ்விப்பன மூன்று; அவை:- மொழி, சமயம்; அரசியல் என்பன.

மொழி அறிவினாலும், சமயம் நல்ல கொள்கைகளாலும், அரசியல் காவலினாலும் நாட்டைக் காப்பன. இந்த மூன்று துறைகளிலும் ஒளியைக் கொண்டு வருவோர் உயர்ந்தோரல்லவா? அறிவொளியைத் தமிழ்நாட்டிற்கும் சிறப்பாக உலகிற்கும் அளித்தவர் வள்ளுவர்; திங்கள் போன்றவர். சமயவொளியை ஆசியாவிற்கருளியவர் புத்தர்; ஞாயிறு ஆவார். அரசியல் உரிமையொளியை உலகிற்களித்தவர் காந்திஜி; தீ, அனையவர்.

நிலவொளியை யாவரும் உணர்வதில்லை; இன்புற முடிவதில்லை. குழந்தைகளும், கலைஞரும், காதலருமே அதனால் இன்புறுகின்றனர். ஆகவே, அது விளங்கும் போதும் சிலர்தான் அதனைக் காண்கின்றனர். வள்ளுவரும், குறளும் அப்படித்தான். அறிவை விழைவோர் உலகில் சிலர்தானே! படித்தோரும், அறிஞரும், தமிழன்பருமே அவரையறிவர்.

சூரியனது ஒளியைக் குகையிலும் புதரிலும் வாழ்வோர் தவிர அனைவரும் அறிவர்; ஆர்வங்கொள்வர். பகலை உணராதோர் பலர் இருக்கமாட்டார். புத்தரும் அப்படியே. சமயமில்லாத மனிதர் உலகில் உண்டா? ஆசியா முழுவதும், இந்தியாவும் அவரையறியும்.

தீ, எல்லோருக்கும் தேவை. குகை வாழ்வோர்க்குங்கூட. ஆகவே அதனை விரும்பாதாரே இல்லை. காந்திஜி, தீ போன்றவர். உரிமையை விரும்பாதோர் யார்? அரசியலை அணுகாதோர் யாவர்? ஆகவே அவரை உலகமெல்லாம் அறியும். அவரது ஒளி உலகம் முழுவதற்கும் பயன்படுகின்றது. நிலவும், ஞாயிறும் இல்லாவிடத்தும் தீ வேண்டப்படுகிறது; பயன்படுகிறது. அறிவும், சமயமும் அற்றவரும் அரசியலை விரும்புவரல்லவா?



இவர்கள் கொண்டு வந்த மூன்று ஒளிகளையும் உள் நின்று விளக்கும் ஆற்றல் (கடவுள்) அஹிம்ஸை (அன்பு) தான். ஆகவே இவர்களை ஒப்பிட்டுப் பேசுகிறோம்.

மனித உடலின் இயல்பு 'துன்பம்' என்கிறார் வள்ளுவர். மனித இயற்கைதானே மலர்ந்த உலகின் இயற்கை. அந்த துன்பத்தைப் போக்குவதுதான் மனிதனின் மாண்புடைய செயற்கை; அதற்கே அவனுக்கு அறிவு கிடைத்திருக்கின்றது. துன்பம் நீக்கி இன்பங் காண்பதே வாழ்க்கைப் போராட்டம்; மனிதனின் நாகரிகம்.

மடமை, கொடுமை, அடிமை இவைதானே மக்களுக்குத் துன்பந்தருவன? இவற்றிற்கு மாறான அறிவு, பண்பு, உரிமை இவைதானே இன்பத்தைக்கொண்டு வர முடியும்? இவற்றால், உலகை இன்பநிலையமாக்க முயன்ற ஒளிகளே வள்ளுவரும், புத்தரும், காந்திஜியும், மற (பலாத்காரம்) நெறியில் இன்பத்தைக் காண உலகந் தோன்றி இன்றுவரை மக்களும், ஏன், பல அறிஞரும் முயன்றுதான் வருகின்றனர். அம்முயற்சிதான் புரட்சியாக போராக— வலுக்கின்றது; ஆனால் அன்பு வழியில்தான் காணும் இன்பம் நிலைக்கும் என, அன்று முதல் கூறி வரும் மெய்யறிஞர்தாம் வள்ளுவர், காந்திஜி போன்றோர். இவர்கள் கண்டதும் புரட்சிதான்; பெரும் புரட்சி; உண்மைப் புரட்சி அது தான் மனதில் புரட்சி!

உலகில் தத்துவ அறிஞரெல்லாம் 'நன்மை' (Good), தீமை (Evil) என்பவற்றை ஆராய்வதிலேயே காலங் கழித்துள்ளனர். வள்ளுவரும் காந்திஜியும் மெய்யறிஞர் (Philosophers) ஆவர்.

> காந்திஜியின் நினைவு தினம் இன்றாகும். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

வாழ்வில் நன்மை அளிப்பனவற்றுள் முதன்மையானது கொல்லாமை: மற்றொன்று பொய்யாமை (உண்மை) என்கிறார் வள்ளுவர். இவற்றைத்தான் காந்திஜி அஹிம்ஸை, சத்தியம் என அழைக்கிறார். வாய்மை, இன்னாசெய்யாமை, அன்பு என்ற தலைப்புகளில் (திருக்குறளில்) வள்ளுவர், சத்தியம் — அஹிம்ஸையைத் தெளிவாய் விளக்குகிறார். உயிரும் உடலுஞ்சேர்ந்ததே மனிதன்; உயிர்தான் உண்மை, உடல்தான் அன்பு. உண்மையற்றவன் உயிரற்றவன். உயிரற்ற உடல் அழிந்துபோகிறது, உண்மையற்றவன் உயிர் வாழ்வு, உலகத்திற்கு தெரியாமலே மறைந்து வீணாய் விடுகிறது. ஏன்? உண்மைதானே மனிதனுக்குப் புகழையும் அதன் வழி எல்லோருக்கும் அறிமுகமும் செய்கிறது.

உடல் இல்லாவிடில் வாழ்வில்லை. அன்பில்லா விட்டாலும் வாழ்வில்லை. அன்பு என்பது உடலைப் பற்றிய தொடர்பு, இரத்தத் தொடர்பு.

**- மு. கோவிந்தசாமி -**


அறிவும், பண்பும், உரிமையும், இன்பந்தருவன என்றோம். இன்பம், அன்பு செய்தால்தான் ஆகும் என்கிறார் வள்ளுவர். இன்பமின்றி வாழ்வதிலும் இறப்பதே மேன்மை. அன்பில்லாத உடல் அழிந்த உடல் என்கிறார். ஆகவேதான், அன்பற்ற வீண்உடல் நடமாடுவதைவிட அன்பை (அஹிம்ஸை)க்காத்து நிறுத்த அவ்வுடலையும் கொடுக்க வேண்டும்.

அன்பைக்காக்க எலும்பை (உடலை)யும் ஈந்துவிடுக என்பது வள்ளுவர் மொழி. இனி வரும் கோடிக்கணக்கான மக்களின் அன்புவிளைக்கும் இன்ப வாழ்விற்காக இன்றைக்குப் பலர் உடலையுந் தந்துதான் ஆகவேண்டும் என்பதனைக் காந்திஜியும் கூறுகிறார்.

துன்பம் வேண்டாமென்றால் நாம் பிறர்க்குத் துன்பம் செய்யலாகாது. உலகு நம்மிடம் அன்பில் உறவாட வேண்டும் என விழைந்தால் நாம் அதனிடம் அன்பு கொள்ள வேண்டும். துன்பஞ் செய்துவிட்டு மாறாக அன்பை எதிர்பார்ப்பது அறிவுடைய மனிதனுக்காகாது. பகைமை கொண்ட உள்ளமுடையவன், நன்றியாகப் பிறர் தன்னிடம் அன்பு செலுத்த வேண்டும் என எதிர்பார்ப்பது அடாது.

ஆகவே அஹிம்ஸை என்பது பிறர்க்கு மனதிலும் துன்பம் நினையாமை என்பதே இருவர் கருத்தும். இதுவே வள்ளுவர் உரைக்கும் தவம். பிறரால் வரும் துன்பம் பொறுப்பதும், தான் பிறர்க்குத் துன்பஞ் செய்யாமையுமே தவம் என்கிறார் வள்ளுவர். காந்திஜி, பிறர் மனம் புண்படப் பேசாதவர்; இன்னும், பிறர் அவர் மனம் நோகப் பேசினாலும் துன்புறுத்தினாலும் ஆத்திரப்படாமல் பொறுத்துக்கொள்பவர். இந்நிலை மக்களிடை மலரும் போதுதான் 'மனிதத் தன்மை' உலகில் மலருகிறது.

பொறுத்துக்கொண்டால் போதுமா? எதிரியைத் திருத்தித் தன்வழிக்கு நல்வழிக்குக் கொண்டுவர வேண்டும்;



அழும்படி, இடித்துந் திருத்தலாம்; ஆனால் அன்புநெறியில் திருத்த வேண்டும். அதுதான் புரட்சி, மாறுதல். உண்மை (சத்தியம்) உடையவனுக்கே அந்த உறுதியிருக்கும். மற்றவர் கூறியமையால் அடக்குமுறையால் — அடிமைத்தனத்தால் — பின்வாங்குவர். அவர் வாழ்வு பொய் வாழ்வு; அது உலகில் புரட்சியைக்கொண்டு வராது; உரிமையைக் கொண்டு வராது.

உண்மை விளங்க உரிமை விளங்கும். உரிமை விளங்க இன்பம் விளங்கும். உண்மையொளி அடிமை, அடக்குமுறையால் மறைக்கப்பட்டு விடும்; அணைக்கப்பட்டு விடும். அறிஞர் நினைத்த உண்மை (நன்மை)களை அடிமை நாட்டில் செயலுக்குக் கொண்டுவர முடிவதில்லை. அப்படியே உண்மைக் கொள்கைகளை, அடக்குமுறையும் பாதுகாப்புச் சட்டமும் உடைய அரசாங்கத்தில் பேசக்கூட முடிவதில்லை. செய்யமுடியாத உண்மை மறைந்துவிடுகிறது; பேசமுடியாவிடில் அணைந்து விடுகிறது. அடிமையும்அடக்குமுறையும் அற்ற உரிமை நாட்டில்தான் உண்மை விளங்கும்; அன்பு பரவும்; இன்பஞ் செழிக்கும்.

ஆகவேதான், காந்திஜி சத்திய சோதனை நடத்தினார். அவர் நெறி சத்திய நெறியாயது. வள்ளுவரும் வாழ்வை ஆராய்ந்தார். 'உலகில் உண்

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் மார்ச் மாதத்தில் குடிசனமதிப்பீடு; அதுவரை நிவாரண வெட்டு மறுபரிசீலனை இல்லை?

'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் செகத்தினை அழித்திடுவோம்' — என்று சிம்மக் குரல் எழுப்பியிருந்தான் மகாகவி பாரதி.

ஆனால் வளம் மிகுந்த, நிலம் கொழிக்கும், நீர் நிறையும் வன்னி மண்ணில் வாழும் மக்கள் — நாடோடிகளாக அடிக்கடி இடம்பெயர்ந்து அகதிகளாக அவலமுறும் மக்கள் — பல்லாயிரக் கணக்கில் ஒரு வேளைச் சாப்பாட்டுக்கும் வழியின்றி வாடுகிறார்கள்.

அரசாங்கம் இடம்பெயர்ந்த மக்களுக்கென வழங்கும் உணவு நிவாரணத்தை நிறுத்திய பின்னர் ஆங்காங்கே, அடிக்கடி பட்டினிச் சாவுகள் இடம் பெறுகின்றன.

உணவுக்கு வழியின்றி, வசதியின்றி அல்லிக் கிழங்கு உண்ட குடும்பத்தைச் சேர்ந்த இருவர் மாண்ட சம்பவம் முல்லைத்தீவு மாவட்டம் மாவடிப்புலவு என்ற இடத்தில் இந்த மாதத்தில் நடைபெற்றிருக்கிறது.

மடுவில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு, வெள்ளைக் கொடியுடனும் தமது ஐந்து பிள்ளைகளுடனும் நடந்து சென்று கொண்டிருந்த ஒருவர், மேற்கொண்டு நடக்க முடியாமல் இளைப்புற்று மயக்கமுற்று இடைவெளியில் விழுந்து இறந்துள்ளார்!

கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற — கல்நெஞ்சனின் மனதையும் கலங்க வைக்கும்; — கசிய வைக்கும் இச்சம்பவத்துக்குக் காரணம் வறுமையும் பட்டினியுமே!

இந்தப் பட்டினிச் சாவுகள் ஒன்று இரண்டுதானே என்று எண்ணி மனதைத் தேற்றிக் கொள்ள இயலாது. இவற்றைப் போன்று இன்னும் பல சாவுகள் நிகழப்போகின்றன என்பதற்குக் கட்டியம் கூறுபவையாகவே இவை அமைகின்றன.

வன்னிப் பகுதி மக்களுக்குப் போதிய உணவுப் பொருள்கள் கிடைப்பதில்லை என்பது ஒன்று: தொழில் இன்மையால் கிடைக்கும் பொருள்களைத் தானும் வாங்கக் கூடிய பணவசதி அங்கு வாழும் தொண்ணூறு சத மக்களிடம் இல்லை என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து சென்று பத்துப் பன்னிரண்டு தடவைகளுக்கு மேல் வாழ்விடங்களை மாற்றிக் கொண்டவர்களின் நிலை மட்டுமன்று இது.

வன்னி மண்ணில் பிறந்து அதன் வளத்தில் வளர்ந்தவர்களின் நிலையும் வறுமை, வறுமையே. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களில் 99 சத வீதமானோரின் பிரதான வருவாய் விவசாயத்தில் இருந்தே கிடைத்து வந்தது.

பரந்தன் கிளிநொச்சிப் பிரதேசங்களைக் கைப்பற்றும் உண்மை வெற்றி (''சத்ஜய'') இராணுவ நடவடிக்கை 1997 ஜூலையில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கிளிநொச்சிமாவட்டத்தில் விவசாயம் வீழ்ந்தது. மக்கள் வெவ்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்ததால் அவர்களது சொந்தக் காணிகள் காடு மண்டத் தொடங்கின.

### நாளாந்தம் சாகிறார்கள்

இதே போன்று 1997 மே மாதத்தில் வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டதும் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும் மக்கள் தமது உயிரைக் காப்பாற்ற இடத்துக்கு இடம் ''ஓடித்திரிந்ததால்'' விவசாயம் வீழ்ந்தது.

1998 பிற்பகுதியில் தொடங்கப்பட்ட சூரியசக்தி (''ரிவிபல'') இராணுவ நடவடிக்கையினால் வன்னியில் விவசாயம் செய்யப்படும் நிலப்பரப்பு மிக மிகச் சுருங்கியது.

தங்கள் சொந்த இடத்தை — விவசாய நிலத்தை — விட்டு வேறு இடம் சென்றவர்களால் எவ்வாறு தொழில் செய்ய முடியும்? அவர்களில் மிகப் பெரும்பாலானோர் தமது தொழிலைக் கைவிட நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இதன் காரணமாக குடாநாட்டிலிருந்து சென்றவர்கள் மத்தியில் மட்டுமன்றி, வன்னி வாழ் மக்களிடமும் தொழில் இன்மை பரவியது. அதன் விளைவு வறுமையே; பட்டினியே!

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்ட காலத்திலிருந்து கணக்குப் பார்த்தால் கடந்த முப்பது மாதங்களாக வன்னியின் மூன்று மாவட்டங்களிலும் — கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் — விவசாயம் பரந்த விஸ்தீரணத்தில் இல்லாமற்போயிற்று!

ஒரு மனிதன் போசாக்கின்மை, இரத்தசோகை மற்றும் நோய்களால் பாதிக்கப்படாமல், சராசரிச் சுகதேகியாக வாழ்வதற்கு நாளாந்தம் 2,750 கலோரி அளவு சக்தி உடலுக்குக் கிடைக்க வேண்டும். அதன் பொருட்டு நாளாந்தம் 750 கிராம் உணவை உட்கொள்ள வேண்டும் என்று வைத்தியர்கள் ஆலோசனை கூறுவதுண்டு.

ஆனால் அரசாங்கம் வழங்கும் நிவாரண உணவுப் பொருள் ஆகக்குறைந்த உணவுத்தேவையைப் பூர்த்தி செய்வதில்லை. குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கும்போது வைத்திய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட அளவை உட்கொள்ள முடியாதநிலை உண்டாகிறது: இது தொடரும்போது உடலின் ஆரோக்கியம் குறைகிறது; பலவீனம் வருகிறது; நோய்களை எதிர்க்கும் சக்தியைக் கூட

## பட்டினிச் சாவுகள் ஆரம்பித்தும் அரசு கண் திறவாதிருக்கிறது

இழக்க நேரிடுகிறது:

இதன் விளைவு — நிவாரண உணவுப் பொருள்களை மட்டுமே நம்பியிருக்கும், அதில் தங்கியிருக்கும், வன்னி மக்கள் நாளாந்தம் வைத்திய ரீதியாகச் செத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதே!

முப்பது மாதங்களாக இந்த நிலை நீடித்தால் எந்தப் பலசாலியும் ஆரோக்கியமானவரும் உடல் நிலை குன்றுவார்; அவரது சுகநலம் நாளாந்தம் அரிக்கப்பட்டுக்கொண்டே இருக்கும். சாவை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பார்!

வன்னி மக்களுக்கு வழங்கப்பட்ட உணவுப் பொருள் நிவாரணம் குறைக்கப்பட்டதால் பல குடும்பங்களின் நிவாரணம் முழுமையாக நிறுத்தப்பட்டது. நிவாரணத்தையே நம்பியிருந்தவர்கள் என்ன செய்வர்? தொழிலின்மை ஒருபுறம், உணவின்மை மறுபுறமுமாக பட்டினியோடு கிடக்கின்றனர். அல்லிக் கிழங்கு போன்ற உணவுகள் தானும் எல்லோருக்கும் கிடைக்க வாய்ப்பில்லை.

**உள்ளும் புறமும் — குறுமுனி**

இதனால் நிலைமை மேலும் மோசமடைந்து பட்டினிச் சாவுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஆபத்து உருவாகியுள்ளது. ஆனால் அரசாங்கம் இது குறித்து சிறிதும் கவலைப்படுவதாக இல்லை. நிலைமை மோசமடையப்போகிறதே என்ற பரிதாபம் தானும் அதற்கில்லை.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு அனுப்பப்படும் உணவுப் பொருள்களிலும் சரி, அரச திணைக்களங்களுக்கென அனுப்பப்படும் நிதியிலும் சரி, பெரும் பகுதி விடுதலைப் புலிகளின் கைகளுக்குப் போய்ச் சேருகிறது —

எமது உணவைச் சாப்பிட்டு எமது பணத்தை [illegible] விடுதலைப் புலிகள் எமக்கு எதிராகப் பலத்துடன் நின்று தாக்குதல்களை நடத்துகிறார்கள் —

எமக்கு எதிராகப் போராடும் அமைப்புக்கு நாமே உதவி செய்வது போலல்லவா இது இருக்கும்? — என்று வாதம் புரிவதிலேயே அரசுகாலத்தை விழுங்கி வருகிறது.

விடுதலைப் புலிகளைத் தண்டிப்பதாக நினைத்துக்கொண்டு நிவாரணத்தை நிறுத்தி, ஏனைய பொருளாதாரத் தடைகளை விதித்து, மக்களைச் சாகடிக்கிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளின் அரச அதிகாரிகள் வழங்கும் புள்ளி விவரங்களை நம்பாது இராணுவ அதிகாரிகள் அனுமானம் செய்து தயாரிக்கும் புள்ளிவிவரங்களின் அடிப்படையிலேயே வன்னி மக்களின் தேவைகளை நிறைவேற்ற முனைகிறது.

### புலிகளின் அனுமதி

பலரின் வற்புறுத்தலின் பேரில் பல தரப்பாரும் இடித்துரைத்ததின் விளைவாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமும் வடமாகாண புனர்நிர்மாண, புனர்வாழ்வு அதிகாரசபையின் தலைவருமான என். ஒபடகேயை அரசுவன்னிப் பிரதேசத்துக்கு அனுப்பியது.

அவர் நேரில் சென்று நிலைமையை அறிந்தார்: அறிக்கை சமர்ப்பித்து நிறுத்தப்பட்ட நிவாரணத்தை குறிப்பிட்ட சத வீதத்தினருக்கு வழங்கச் சிபார்சு செய்தார்: எனினும் இன்னும் பல்லாயிரக் கணக்கானோருக்கு வெட்டப்பட்ட நிவாரணம் திரும்ப வழங்கப்படவில்லை: அதனால் பட்டினி நிலை நீங்க வாய்ப்பில்லை:

வடமாகாண புனர்நிர்மாணம், புனரமைப்பு அதிகார சபையின் தலைவர் உண்மை நிலையை — சரியான மக்கள் எண்ணிக்கையை அறிந்து கொள்ளட்டும் என்ற நோக்கோடு, திறந்த மனதோடு ஒபடேகே வன்னிக்குள் செல்வதற்கு விடுதலைப் புலிகள் கடந்த டிசம்பரில் அனுமதி வழங்கினர்: அதனால் விடுதலைப் புலிகளின் பிரதேசத்திற்குள் கொழும்பிலிருந்து சென்ற முதலாவது அரச உயர் அதிகாரி என்ற சாதனையை ஒபடகேயே நிலைநாட்டினார்.

### வன்னியில் மார்ச்சில் குடிசன மதிப்பீடு

அவரோடு, அனர்த்த வேளை முகாமைத்துவம் குறித்த குழுவின் தலைவரான டாக்டர் டேவிட் ரத்னவேலும் வன்னிக்குச் சென்றிருந்தார்.

இவர்களது விஜயத்தின் நோக்கம் வன்னியின் உணவு மற்றும் பாவனைப் பொருள்கள் பொதுமக்களுக்குக் கிடைப்பதில் உள்ள தடங்கல்களை நேரில் கண்டறிவதாகவே இருந்தது:

இவர்கள் இருவரும் தமது விஜயத்தின்போது விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனையும் சந்தித்து பொதுமக்களுக்கான உணவுப் பொருள் விநியோகத்தில் நிலவும் குறைபாடுகளைக்கேட்டறிந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களை மட்டுமன்றி குடிசன மதிப்பீடு, புள்ளிவிவரத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் வன்னி செல்லுவதற்குவிடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளார்கள்.

1981 ஆம் ஆண்டின் பின்னர் எதிர்வரும் மார்ச் மாதத்தில் வன்னியில் குடிசன மதிப்பீடு நடைபெற இருக்கிறது. குடிசன மதிப்பீடு செய்தால் அதன் அடிப்படையில் பொதுமக்களுக்கான உணவு விநியோகம் மற்றும் நிவாரணம் என்பன தொடர்பான முடிவுகளை — அளவுகளை — நிர்ணயிப்பதே அரசின் எண்ணம் என்று அறியப்படுகிறது.

வன்னியில் குடிசன மதிப்பீட்டை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதியளித்ததைத் தொடர்ந்து குடிசன மதிப்பீடு புள்ளிவிவரத் திணைக்கள அதிகாரிகள் அதற்கான ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

இந்த வாரத்தில் வன்னியில் குடிசன மதிப்பீட்டை நடத்துவது சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றுக்கு திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது: வன்னி மாவட்டங்களில் பணிபுரியும் குடிசன மதிப்பீட்டுப் பகுதி அதிகாரிகளும் இந்தக் கருத்தரங்குக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய ஒரு பின்னணியில் — வன்னிப் பிரதேசத்தில் உள்ள நான்கு மாவட்டங்களிலும் நிறுத்தப்பட்ட நிவாரணத்தை இடைக் காலத்தில் வழங்காது மார்ச்சில் குடிசன மதிப்பீட்டை நடத்திய பின்னரே வழங்குவதற்கு அரசு முடிவு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது:

நிவாரணத்தை இழந்த மக்களின் உண்ணா விரதப் போராட்டம் நான்கு மாதங்களைக் கடந்த போதிலும், பட்டினிச் சாவுகள் அடுத்தடுத்து நடைபெற்றுக் கொண்டிருந்த போதிலும், அரசு நிவாரண வெட்டை மறுபரிசீலனை செய்யாது இருப்பதற்கு உத்தேச குடிசன மதிப்பீடும் காரணமாக இருக்கலாம் என்று அவதானிகள் கருதுகின்றனர்:

இதனைப் போன்ற முட்டாள்தனம் வேறு எதுவும் இருக்க முடியாது. ஐயர் வரும் வரையும் அமாவாசையை பிடித்து இழுத்துக் கட்டி வைத்துக் காத்திருக்கச் செய்யும் முயற்சி இது!

குடிசன மதிப்பீட்டு முடிவு கிடைத்து உணவு மற்றும் நிவாரண விநியோகம் சீராக்கப்படுவதற்கிடையில் பட்டினிச் சாவுகளின் எண்ணிக்கை உயரும் என்பதனை அரசு உணராவிடில் வன்னி மக்களின் நிலைமை அனலாக வேகும்:

★ ★ ★

### நீதியின் வெற்றி

வயம்பவில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஆளுங் கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமோக வெற்றி பெற்றதாக அரச தரப்பு வட்டாரங்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றன: அரச சார்பு ஊடகங்களும் தேர்தல் முடிவுகளை அதே தொனியிலேயே ''பேசின''!

வயம்ப — வடமேல் மாகாண — மக்கள், ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசின் கொள்கைகளையும் அபிவிருத்தி வேலைகளையும் அங்கீகரித்துள்ளதையே தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தி உள்ளதாகவும் அரச சார்பு அவதானிகள் கணக்குக் காட்டுகின்றனர்.

வடமேல் மாகாண ஆட்சி அதிகாரம் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் கையிலேயே இருந்தது. தேர்தல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும், வன்முறைகள், காடைத்தனங்கள், மோசடிகள் இன்றியும் நடைபெற்றிருந்தால் அரச தரப்பினர் கூறுவது பொருத்தமானதாக இருக்கும்.

ஆனால் தேர்தல் களம் வன்செயல் களமாக மாறி இருந்ததாகவும் சுதந்திரமான — நேர்மையான — முறையில் — வாக்களிப்பு நடைபெறவில்லை என்றும் சுயேச்சை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன:

வாக்கு மோசடி, கள்ள வாக்குப் போடுதல், வாக்காளரை விரட்டல், வாக்குப் பெட்டிகள் அபகரிப்பு, தேர்தல் முகவர்கள் பயமுறுத்தப்படுதல், ஆயுதங்கள் சகிதம் தாக்குதல்களில் ஈடுபடுதல், பொலீஸாரைக் கடமையை நேர்மையாகச் செய்ய விடாது தடுத்தல் என்ற தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றதாகவும் —

இவற்றில் பலவற்றை தமது தேர்தல் அவதானிகள் நேரில் கண்டதாகவும் தேர்தல் கண்காணிப்புக் குழுவான சி.எம்.ஈ.வி. தெரிவித்திருந்தது.

தேர்தல் கடமைகளில் 15 ஆயிரம் பொலீஸார் ஈடுபட்டிருந்த போதிலும் நாட்டின் தேர்தல் வரலாற்றிலேயே இல்லாதவாறு — முன்னர் எப்போதும் நிகழாத வகையில் — அடாவடித்தனங்களை அரச ஆதரவாளர்களும், குண்டர்களும் நடத்தியதாக ஏனைய

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மிகவும் பரிதாபத்துக்குரிய ஈழத் தமிழ்க் கட்சி எதுவோ?

## வித்துவான் பதில்கள்

**சண்டிலிப்பாய். என். ரி. மிலன்.**

● டியர் வித்துவான் ஸார்! தங்களுக்கு திருமணம் முடிந்து விட்டதா?

✱ அந்த சோகக் கதையை ஏன் கேட்கின்றீர்கள்? என் சுதந்திரம் பறிபோய் பல ஆண்டுகளாகிவிட்டன. சுதந்திரம் வேண்டிப் போராட ஆசைதான். ஆனால் முதுகுத் துணிவில்லையே! என் செய்வேன்?

★ ★ ★

**சுதுமலை. க. விஜி.**

● அதிகமாகக் கிண்டல், கேலி செய்பவர்களைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

✱ கிண்டல், கேலி செய்வதற்கு — சவாரி விடுவதற்கு — என்னையும் உம்மையும் போல் பலர் இருக்கின்ற போது அவர்களுக்கு என்ன குறை?

★ ★ ★

**இணுவில். செ. அற்புதன்.**

● 'பெண் புத்தி பின் புத்தி' என்கிறார்களே! அது உண்மையா?




✱ முற்றிலும் உண்மை. 'பின்' போல கூரான புத்தியுடையவர்கள் அவர்கள். குத்தும் போதுதான் தாங்க முடியாமல் இருக்கின்றது!

★ ★ ★

**இணுவில். செ. நவநீதன்.**

● படிக்கவென்று கூறிவிட்டு சிலர் யாழ். முற்றவெளி, யாழ். பழைய நூலகம் ஆகிய பகுதிகளுக்குச் செல்கிறார்களே! எதற்காக?

✱ மறைந்து கிடப்பவற்றை அக(ழ்வு) ஆராய்ச்சி செய்வதற்காக இருக்கலாம்.

★ ★ ★

**உடுவில். சு. குமரன்.**

● வித்துவான் ஐயா! மொனிக்கா என்னைக் காதலிப்பாரா?



✱ வெள்ளை மாளிகை மன்மதன் என்ற நினைப்போ உமக்கு?

★ ★ ★

**வட்டு. தெற்கு. பொ. வரதராஜா**

● பல பாடசாலை அதிபர்களை பாடசாலைகளில் சந்திக்க முடிவதில்லையே......?

✱ எதற்கும் பாடசாலை ரீச்சர்களின் நடமாட்டத்தை அவதானித்துப் பாரும்.

★ ★ ★

**சண்டிலிப்பாய். மா. தவலிங்கம்.**

● காதலித்துத் திருமணம் செய்வதா? அல்லது பேசிச் செய்வதா? — எது சிறந்தது?

✱ எப்படியோ நீர் வாங்கிக் கட்டப் போவது நிச்சயம். அது கட்டிப் போட்டு அடித்தால் என்ன? அடித்துப் போட்டுக் கட்டினால் என்ன?

**நாவற்குழி. வி. உதேஸ்.**

● ஐயா வித்துவானாரே! உமது வீட்டுச் சாவிக்கொத்து எல்லாம்உமது மனைவியின் முந்தானையில்தானே இருக்கின்றதாமே! உண்மையா?



✱ எஜமானியிடம் சாவிக் கொத்து இருப்பது ஒன்றும் ஆச்சரியமில்லையே! சாவிக்கொத்தை எடுக்கத்தான் முந்தானையை நாடுகிறேன் என நீர் நினைப்பதுதான் தவறு.

★ ★ ★

**பருத்தித்துறை பா. சுதன்.**

● காலையில் வேளைக்கு நித்திரை விட்டு எழும்ப வழி சொல்வீர்களா?

✱ உமது கேள்வியே நீர் திருமணம் செய்யாத — கொடுத்து வைத்த — மனிதர் என்பதைக் காட்டுகின்றது. Early morning eight thirty-க்கு எழும்பும் சுகானுபவத்தை திருமணமானதும் நீர் இழக்கப் போவது சர்வ நிச்சயம். அதன் பின்னர் 'பின் தூங்கி முன் எழப்போகும் மணாளனே!' இப்போதாவது கிடைக்கக்கூடிய சுகத்தை அனுபவிக்கத் தவறாதே!

★ ★ ★

**வட்டுக்கோட்டை. க கோகிலரமணன்.**

● வித்துவான் ஸார்! நான் மேசையிலிருந்து பொறுமையாகப் படிப்பதற்கு ஒரு வழி கூறுங்களேன்?

✱ காதல் பாடத்தைப் புரட்டி, கனவுலகில் சஞ்சரிப்பதை நிறுத்தும். படிப்பும் தானாகவே வரும்.

★ ★ ★

**நீராவியடி. ரி. குமார்.**

● மினிசினிமாவில் தினசரி படம் பார்க்கும் நமது சிறார்கள் குறித்து...?

✱ அவர்கள் (மி/சி)னி மேதைகளாவது சர்வ நிச்சயம்.

★ ★ ★

**அல்வாய். வி. எஸ். ரவி.**

● இப்போதுள்ள நிலையில் பரிதாபத்துக்குரிய ஈழத்தமிழ்க் கட்சி எது?

✱ கட்சி அல்ல; மக்களே!

★ ★ ★

**அராலி. என். விவேகி.**

● வெளிநாட்டுக்கு வேலை தேடிச் சென்றவர்களால் அந்நிய செலாவணி வந்து பெருமளவில் குவிகின்றதே?

✱ செலாவணி வருவது மகிழ்ச்சி. எய்ட்ஸும் அல்லவா சேர்ந்து வந்து குவிகின்றது?

★ ★ ★

**திருநெல்வேலி. வி. நரேன்.**

● மலரைத் தேடி வண்டு வரும் காலம் போய் வண்டைத் தேடி மலர் வரும் காலம் உருவாகியுள்ளதே?

✱ யார் யாரைத் தேடினாலும் வண்டின் ரீங்காரத்தில் "குவா! குவா!!", எதிரொலிக்கா விட்டால் சரி.

★ ★ ★

**கோப்பாய். நா. மகேந்திரலிங்கம்.**

● விதண்டாவாதம் செய்பவர்கள் குறித்து......?

✱ முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா!

★ ★ ★

**மறவன்புலோ. எஸ். ரவிராஜ்.**

● விஞ்ஞானமும் நோய்களும் போட்டியிட்டால் வெற்றி எந்தப் பக்கமோ?

✱ ஓட்டத்தில் இப்போது முந்திக் கொண்டு நிற்பது நோய்தான். (எய்ட்ஸ் தான்.)

★ ★ ★

**ஈவினை. [illegible]**

● நவீன சினிமாப் பாடலில் "உசிலம்பட்டி பெண்குட்டி முத்துப்பேச்சி; நீ ஓரக் கண்ணால் பார்த்தாலே நான் பிள்ளைத்தாச்சி" — என்று பாடுகின்றார்களே! இது சாத்தியமா?

✱ நவீன 'குளோனிங்' முறையின் கீழ் இது சாத்தியமாகுமோ என்னவோ தெரியவில்லை. ஆனால் திருமணமாகாத குந்திதேவி சூரிய பகவானின் கண் பட்டதும் கருத்தரித்து, கர்ணனை வயிற்றில் சுமந்து குழந்தை ஈன்ற கதை நமக்குத் தெரியாதா என்ன? இதிகாசக் கருத்தை நவீன சினிமாப் பாடல்களில் புகுத்தி தமது அதீத திறமையை அம்பலப்படுத்தியிருக்கின்றார்கள் இந்தச் சினிமா (சி/எ)த்தர்கள்!

**துன்னாலை. ச. சனற்குமார்.**

● சந்திக்குச் சந்தி நின்று பெண்களுக்குத் தொல்லை கொடுக்கும் ஆண்கள் குறித்து...?

✱ முற்காலத்தில் பெண்கள் சந்திகளில் பேய் நிற்குமெனப் பயந்து தனியாகப் போவதில்லை. இப்போது அந்த இடத்தை அரட்டைப் பேய்களும், சீருடை தரித்தவர்களும் எடுத்திருப்பதுதான் மாற்றம்.

★ ★ ★

**பளை. கணபதிப்பிள்ளை.**

● கிளிபோல் மனைவி வீட்டில் இருக்க காகம்போல் 'சின்னவீடு' வைத்திருக்கும் ஆண்களைப் பற்றி உமது அபிப்பிராயம் என்னவோ?

✱ கிளிக்குத் தெரியாத தொழில் நுட்பம் காகத்துக்குத் தெரிந்திருக்குமோ என்னவோ? அதுதான் காக்கா பிடிக்கின்றார்கள் போலும்.

★ ★ ★

**கரவெட்டி. ரி. பைரவி.**

● இங்கிலாந்தில் கணவன் குறட்டை விட்டதற்காகப் பெண்கள் விவாகரத்துக் கேட்கின்றார்கள். இப்போது ஒரு பெண் கார் 'ஸ்டாட்' செய்வதற்கு கணவன் காரைத் தள்ளிவிடவில்லையே என்ற கோபத்தில் விவாகரத்துக் கோரியிருக்கின்றாராமே?

✱ கணவன் 'தள்ளாத' வயதுக்காரனாக இருந்தால் மன்னிக்கத்தான் வேண்டும்:

★ ★ ★

**வியாபாரிமூலை. என். நித்தி.**

● எனது மகள் பல்கலைக்கழகத்தில் புதிதாக அனுமதி பெற்றுள்ளாள். இரவில் அடிக்கடி கனவு கண்டு திடுக்கிட்டு அலறுகின்றாள் என்ன செய்யலாம்?




✱ ராகிங்கில் எதையாவது பார்த்துப் பயந்திருப்பாள். போகப் போக எல்லாம் சரியாகி விடும்.

★ ★ ★

**இடைக்காடு. வி. சுந்தா.**

● 'தன் கையே தனக்குதவி' என்ற பழமொழி ஆண்களுக்கு மட்டும்தான் பொருந்துமா?

✱ ஏன் அப்படி மட்டுப்படுத்துகின்றீர்கள். (மா) இடித்தல், (அரிசி) குற்றுதல் போன்றவை முதல் (அப்பளம்) தட்டுதல் வரை பல இறுகைத் தொழில்களை பெண்கள் செய்கின்றார்களே!

★ ★ ★

**[illegible]ல். ரி. ஜெயபாலன்.**


● "நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ?" எனக்கேட்ட பாரதியார் இன்றிருந்தால்.........?

✱ "நாமங்களையாவது தமிழிலே கொண்டிருங்கள்" என்று தமிழர்களைப் பார்த்துக் கெஞ்சியிருப்பார்.

★ ★ ★

**சங்கத்தானை. வீ உமா.**

● பல் விழுந்தவர் முறுக்குக்கு ஆசைப்படலாமா?




✱ முறுக்குக்கு மட்டும் ஆசைப்பட்டால் குற்றம் சொல்ல முடியாது.

★ ★ ★

**வேம்பிராய். த. சாந்தன்.**

● மனைவிக்குக் கணவன் நன்றியாக இருக்க வேண்டுமா?



✱ நிச்சயமாக! அது தானே கணவன் பிறப்பு.

★ ★ ★

**கொக்குவில். வி. சிந்தியா**

● கணவனை மனைவி அடிக்கலாமா?

✱ திருமணத் (அடிமைத்) தளை விழுந்த காலத்தில் மனைவியின் செல்லத்தட்டு இன்பமாகத்தான் இருக்கும். பின்னர் அந்தத் தட்டுத்தான் அடியாக மாறும் என்பது அப்போது புரியாது. ஹி...ஹி...என்ன அனுபவம் பேசுகின்றது எனக் கேட்கின்றீர்களா?

★ ★ ★

**நல்லூர், கே. ராஜ்.**

● சில நிறுவனங்களில் உழைப்பைப் பார்க்காமல் எல்லோருக்கும் ஒரே சமனாகப் 'போனஸ்' கொடுக்கிறார்களே?

✱ அது ஊக்க போனஸாக இருக்காது; தூக்க போனஸ் போலும்.

★ ★ ★

**நீர்வேலி. ஆர். ஜனனி.**

● இன்றைய காதலின் ஆரம்பம் என்ன?

✱ இன்றைய காதலென்ன? என்றைய காதலின் ஆரம்பமும் அழகுதான். ஆனால் அது உள அழகா, உடல் அழகா என்பது அவரவரைப் பொறுத்தது.

பழைய பாடல் ஒன்றும் இக் கேள்விக்கு நல்ல விடை தருகின்றது. திருமணம் பேசும் மணப் பெண்ணின் தந்தை, தனக்கு வரப்போகும் மருமகன் கல்வியுடையவனாக இருக்க வேண்டும் என்று விரும்புவாராம். தாயோ மருமகன் பணம் உள்ளவனாக இருக்க வேண்டும் என விரும்புவார். சுற்றத்தவர் குலத்தைப் பார்ப்பர். ஆனால் மணமகள் இவற்றைக் கருத்தில் கொள்ளாது தனக்கு வரப்போகும் மணாளனின் அழகைத்தான் முதலில் விரும்புவாள் என்கிறது அப் பாடல்.

★ ★ ★

**மிருசுவில். இ. ரஞ்சன்.**

● வித்துவானே! நீர் தேர்தலில் நின்றதால் உமக்கு கிளிச் சின்னம் தரலாம் என நினைக்கிறேன்...!

✱ எனது கிளி மூக்கை நீர் இப்படிக் கிண்டல் செய்வது நல்லதல்ல. இந்தக் கிளி மூக்கில் மயங்கித்தானே என்னவள் என்னைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டாள்! தான் வாழ்க்கையில் செய்த மகா தப்பு அதுதான் என்று அவள் இப்போது தலையில் (அவ்வப் போது என்தலையிலும் சேர்த்துத் தான்) அடித்துக் கொள்வது வேறு விடயம்.

★ ★ ★

**கல்வியங்காடு. ஜி. காந்தன்.**

● திருமண வாழ்க்கை பூந்தோட்டமா? போராட்டமா?

✱ புதிதில் பூந்தோட்டம். போகப் போக போராட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாது

மந்த மாருதம் மனதில் வீசிடும்
வந்த நாழிகை நொடியிற் கரைந்திடும்
சொந்தக் காரிகை கையணைத்திடும்
சிந்து தேமொழிக் குரலு மனுங்கிடும்.

பஞ்சுபொதி விஞ்சியது வஞ்சியிவள் தேகம்
விஞ்சுகுளிர் நெஞ்சினிலே எழுந்ததொரு மோகம்
கொஞ்சுமொழி செவ்விதழ்கள் கன்னமதில் மோதும்
மஞ்சமிட கெஞ்சியவள் பல்லவ மனுங்கும்.

மின்னற்கொடி யன்னஇடை என்னும்
அன்னநடை சின்னஅடி உன்னும்
கன்னமொடு கண்ணும் உடுக்களென மின்னும்
சொன்னகவி போக வேண்டும் பலஇன்னும்.

கட்டவிழ கார்மேகமென விரியும் கூந்தல்
வட்டவிழி மொய்த்துவர குவிந்துவிழும் காந்தள்
கிட்டவர பூமணந்து மொட்டவிழும் கூந்தல்
தொட்டவழி துவண்டுவிழும் சீறடியின் ஏந்தல்.

— பிஷ்மன் —

# அமுதூட்டு தமிழே!

பாடும் கவியையெல்லாம் பாகாய் இனிக்கவைக்கும்
ஆடும் தமிழே அமுதுயிரே — கூடுவிட்டுக்
கூடுபாய்ந் துன்னுள் குடியிருக்கும் ஓர்வரந்தா!
வாடாத மல்லிகையே வா!

குன்றா அழகாய்க் கொலுவிருக்கும் தேவீ! நின்
கண்ணோக்கம் பெற்றால்... கலியிடையும் — பொன்றாக்
கவியுரைப்பேன்! வந்து கடைக்கண்நல் காய்! ஊர்ச்
செவி இரசிக்க வைப்பாய் சிறிது!

புற்றீசல் போல புறப்பட்டுச் 'சொற்சிலம்பம்'
விற்போர் நடத்தும் வெருளிகளால் — பொற்பழிந்து
போனாலும்... ஓராள் புறப்பட்டுப் பாரதிபோல்
சீராட்டின் பூப்பாய் சிரித்து!

நாலு வரிசும்மா நாட்டிவிட்டால் ''பாவலன் யான்
ஆகா'' 'எனக்குலைக்கும்' வாய்களினால் — நீ இன்று
நீர்த்துக் கிடக்கின்றாய்! நேர்ந்தபிழை மாற்றவல்ல
பாத்துவக்கு வேண்டும்கண் பார்!

கச்சை அழகும், கழுத்தழகும், காமனாடும்
எச்சில் அழகும் எழிலென்று — பச்சை
உடல்காட்டி; உன்னைச் சினிமாவா காக்கும்?
அடிப்பிடித்துப் போச்சுன் அழகு!

பூக்காடாய்ப் பார்த்தாய் அரசியலை! இன்றதுவோ
சாக்கடையாய் ஆச்சு; சனிப்பிடித்த — வாக்குரிமை
வந்ததனால் உன்னை மலிவுப் பதிப்பாக்கி
வென்றெடுத்தார் ஆட்சி விருது!

சபையோரை ஆண்டு; தமிழுன் தயவால்
தரையாள வந்து, தலைமை — அடைந்து
வெறும்புளுகால் உன்பேரைப் 'பப்பாவில்' ஏற்றும்
அறிவுலகை மாற்று அழித்து!

எப்படி வாழ்ந்தவள்நீ எப்படி ஆண்டவள் நீ
இப்படித் தாழ்ந்திழிந்தாய்! ஏற்றமிகு — சொப்பனமுன்
வீட்டில் நனவாக வேண்டும் — வரந்தா நான்
மீட்டெடுப்பேன் உன் மாண்பை வென்று!

— த. ஜெயசீலன் —

# கிலி கொடுத்த வலி!

நள்ளிரவு நேரம்; நம்வீட்டின் நாற்புறமும்
கும்மிருட்டின் ஆட்சி; கூதலதன் மாட்சி — எங்கோ
''கள்ளன்'' என்றருகில் கத்தல் கேட்டவுடன்
கையில் கிடைத்தொரு கழியுடனென் வீட்டு
கதவின் பின்னாலே ''கவரெ''டுத்திருந்தேன்!
ஏலவே எம்மயல்வாழ் இல்லத்தரசிகளின்
மாலைநேர மாதாந்தக் கூட்டத்தில் — ஏகமனதாய்
எடுத்த முடிவாக—தகர ''டப்பாக்கள்'' தாளம் பிசகாமல்
தொடுத்து முழங்கின; தூக்கம் கலைத்தன!
அடுத்து என்ன, அயல்வீட்டுக் கதவுகளும்
''வெடு''க்கென்று திறக்க, வீட்டுப் பெண்களெல்லாம்
''அரிக்கன் லாம்'' பேந்தி அணிவகுத்துச் செல்ல
ஆண்களெல்லோரும் அவர்பின்னே தடிகளுடன்
ஓலம் கேட்டவழி ஓட்டம் பிடித்தார்கள்!
''ஊரே செல்கிறது; ஒருக்கால் நீங்களுந்தான்
ஆருக் கென்னவென்று...'' என்மனைவி முடிக்கு முன்பே
நான்பார்த்த பார்வையவள் நாவையடக்கியது
ஐந்தாறு மனைதள்ளி — அயலவர்கள் ஒருமித்தால்
வந்தேறி விடுகின்ற வாய்வீச்சுக் கேட்டிடவே
தொந்தரவு இன்னும் தொலையவில்லைப் போலும்
இந்த இரவினிலே ஏனிறைவா சோதனைகள் — என்றே
ஏங்குகையில் எம்மயல்வாழ் கமலத்தின்
சிங்கக் குரல் கேட்டுச் சிலிர்த் தெழுந்து விட்டேன்!
எட்டி யன்னலினால் ''என்னக்கா நடந்தது'' என
வெட்டி எனைப்பார்த்து வீறாப்பாய் முழித்துவிட்டு
''ஒன்றுமில்லையடா! உவன்ராசன் வீட்டில்தான்
கதவைத் தட்டியேதோ கதைத்துக் கேட்டதுவாம்!''என்ற
கமலமக்கா கங்குலியே கரைந்துவிட
கம்பீரமா யெந்தன் கழியைக் கீழ்போட்டு
''பார்த்தாயா இதுவெல்லாம் 'பம்மாத்து'த் தானெந்தன்
ஆர்த்தெழும் வீரமெலாம் அசல் கள்ளன் முன்னாலே!''
என்றெந்தன் மனைவியிடம் எடுத்தே யுரைத்து விட்டு
குன்றைப் போலுடம்பைக் கட்டில்தனில் கிடத்தி
நன்றே சிலநிமிடம் நலமாகப் போகுமுன்பே
என் வீட்டுக் கூரையிலே எவரோ ஓடினாற்போல்......
''ஐயோ! கள்ளன்'' என அலறிநான் கூச்சலிட — அதே
சத்தங்கள் — ஆம் தாளம் பிசகாத தகரச் சத்தங்கள்!
தடிகளுடன் அயலவர்கள்!!

— அனலையூர்ச் சேந்தன் —

# என்செய்வேன் நானினிமேல்..?

(அடையாள அட்டையைத் தொலைத்து விட்டுத் தேடித்திரிந்த வேளை மனதில் எழுந்த கவிதை இது.)

திக்கெட்டும் நானலைந்து
தேசமெல்லாம் தேடியிங்கு
நாதியின்றித் தவிக்கையிலும்
நீதியின்றி என்னுயிரே! நீ
நீண்ட தூரம் சென்றாயோ?

நோயினிலே மெய் மெலிந்து
பாயினிலே படுத்துறங்கி
பரிதவிக்கும் வேளையிலும்
சொந்தமெனச் சொல்லியிங்கு
சீர் தருவாய் என்றிருந்தேன்..!

கட்டழகுக் காரிகையே!
தொட்டு எனை எப்பொழுதும்
சிட்டெனவே சுற்றி வரும்
சீதையுனை நானிழந்து
அனாதையென ஆகிவிட்டேன்!

துயிலின்றி நான் தவிக்க
மயிலே நீ எங்கு சென்றாய்?
நீயின்றி நானசையேன் —
நிதம்
நிலை மாறித் துடிக்கின்றேன்!

காக்க எனை வந்திடுவாய் —
உனை
நோக்க விழி சிந்துகிறேன்!
அடையாள அட்டையுனை
படை கேட்டால்...
என்செய்வேன்?
நானிமேல்...!

—பொலிகையூர்
சுக சிந்துதாசன் —

# பாத்துமிகள்

## நுகர்வோர்!

குறைந்த விலையில்
வாங்கிட விரும்புவர்!
குறைவிலா அளவையில்
வாங்கிட விரும்புவர்!!

## வாழும்

தன்னை மறந்தால்
பொதுநலம் வாழும்!
தன்னை நினைந்தால்
பொதுநலம் சாகும்!!

## மறப்பரோ?

இலட்சிய வாழ்க்கை
வாழ்ந்தாரை மறப்பரோ?
அலட்சிய வாழ்க்கை
வாழ்ந்தாரை
நினைப்பரோ?

## (அ/பா)ம்பு!

அன்பிலாச் சொற்கள்
அம்பினைப் போலாம்!
பண்பிலாச் சொற்கள்
பாம்பினைப் போலாம்!!

## உழைப்பவன்-?

உழைப்பவன் உழைப்பிற்
திளைப்பதும் இல்லை!
திளைப்பவன் உழைத்துக்
களைப்பதும் இல்லை!!

## விற்பனையாளர்!

வாங்கும் பொருள்களின்
அளவையில் விழிப்பு!
விற்கும் பொருள்களின்
அளவையில் சுழிப்பு!!

## பட்டம்

கற்றுத் தேர்ந்து
பெறுவதோர் பட்டம்!
காற்றிற் சுழன்று
பறப்பதோர் பட்டம்!!

# ஆனந்தம் வந்திடும் ஆடுங்கடி

வானம் சிரித்திட பூமி செழித்திடும்
கானம் படித்துமே ஆடுங்கடி
ஈனர்கள் ஓடிட இம்சை அகன்றிடும்
ஆனந்தம் வந்திடும் ஆடுங்கடி

காலை பிறந்திட, காரிருள் ஓடிடும்
வேளையும் வந்தது பாடுங்கடி
கர்மம் போய்இனி நன்மை விளைந்திடும்
தர்மமே வெல்லுமென் றாடுங்கடி

வெள்ளை முழுமதி அள்ளிப் பொழிந்திடும்
துள்ளியே ஆடுவம் வாருங்கடி
சோலை மலர்ந்தினி பூக்கள் குலுங்கிடும்
மாலை தொடுத்துமே ஆடுங்கடி

பொங்கும் கடலலை துள்ளிக்குதிக்குது
எங்குமே ஆனந்தம் ஆடுங்கடி
வீசிடும் காற்றதும் நல்லதோர் சேதியை
பேசியே போகுது கேளுங்கடி.

ஆழக் கடலிலும் ஆட்சி நடத்திடும்
சோழக் கொடியினைப் போற்றுங்கடி
வானிலும் ஏறிய வல்லவர் வெல்லுவர்
ஆனந்தம் ஆனந்தம் ஆடுங்கடி.

— அருண்மொழி

# விற்கவேண்டாம் விலைக்கு!

('பெண் வேண்டும்' என்ற பொருளோடு 'கவிதை முற்றத்தில்' அடிக்கடி வெளியான கவிதைகளைக் கண்டு சீற்றத்துடன் வரையப்பட்ட பதில் கவிதை இது.)

வாழ்க்கையிலே ஒருமுறையே வருகின்ற வசந்தமெனும்
வார்த்தெடுக்கும் திருமணத்தை வானுயர விலைபேசும்
நோய்பிடித்த மனிதர்களே, நுவலுகின்ற சங்கதிகள்
நாய்தெளித்த தீர்த்தமென நாறுவதை மூடிக்கொள்க!

கண்டபடி சுற்றிவிட்டுக் கல்யாணம் எனும்பேரில்
பெண்டாளக் கேட்கிறதோ? பேதையரே, பேய்க்காட்டும்
சண்டாளப் பாவிகளே, சந்தியிலே வைத்து உம்மைத்
துண்டாடிச் சுட்டாலும் தூக்கினிலே இட்டாலும்

நன்றென்பர் இங்குள்ள நாடறிந்த நல்லறிஞர்!
ஒன்றுதன் மனையென்று உடனிருந்த ராமனைநாம்
மன்றேறிப் பாடவரும் மனமகிழ்வு எல்லாமே
கொன்றாயே தமிழ்மகனே, குணங்கெட்ட தரமுடனே!

அழகான வாலிபனே — ஆனாலும் களவெடுத்துப்
பிழையான எல்லாமும் பெரிதாகப் புரிவோனை
அழையாதீர் மருமகனாய், அவள்வாழ்வு அழிகின்ற
நிலைகாண வேண்டாமேல், நினைவாலே தூயவனாய்ச்

சொந்தத்தில் காலூன்றிச் சுமைதாங்கிக் காசுழைக்கும்
சந்ததியிற் பிறந்தவரை, தலைநரையைப் பாராது
வந்தனையாய் மணமுடிப்பின், வருங்காலம் உமதாகும்!
சிந்தனையில் வைத்திடுக, சிறுகுணங்கள் திருத்திடுக!

சாப்பாடு கேட்கவரின், 'சமைக்கேல்லை இன்னு'மென்று
கூப்பாடு போட்டுநிதம் கூத்தாடும் காளிகளை,
பேயாடும் பிடாரிகளை பிணையாகின் வாழ்வினிலே
நாயாகப் படநேரும், நனிகவனம், ஐயாமார்!

அரிவையர் அழகோடு அன்புடன்நல் லறிவு, குணம்
தெரிந்தொழுகு இங்கிதங்கள் தெரிபவளாய் திகழ்வதுடன்
உரிமையுடன் கணவனுடன் உறவாடி உண்மையுடன்
கரிசனையாய் இருப்பவளைக் கைப்பிடித்தல் நன்மைதரும்

அதுவிடுத்துச் சஞ்சிகையில் அடிக்கடி— இவ்விண்ணப்பம்
தொடுப்பீரேல் தெருக்கூட்டும் துடைப்பங்கள்பதில்பேசும்
பொதுவாகக் கல்யாணம் பொய், புரட்டில் உருவாகுங்
கதைமாற்ற நாமெல்லாம் களத்தினிலே கால்பதிப்போம்!

— கி. குருபரன் —

# உச்சிக் கணபதியை யோது

எச்சிலிலைக் கிச்சையுறும் பிச்சைநர மாந்தரை
இச்செகத்தி லில்லையென நிச்சயித்து — அச்சமற்ற,
பிச்சையற்ற, பீடுதரும், பேரொளி வாழ்வினை
வச்சிரம்போற் காண்போம் வரித்து.

ஆசாபா சங்க ளனைத்தையு முள்ளத்தில்
சூசகமாய்க் கொண்டதோர் மும்மலத்தார் — பேசா
மடந்தையாய்ப் பின்னோர் மறைதிரையுள் போதிக்
குடந்தையா யூதுகிறா ரொத்து.

உறைக்கப் புகட்டியு முள்ளுணர் வில்லா
விறைத்த மனிதமோர் விந்தை! — விறுவிறுத்துக்
கூட்டங்கள் போட்டுக் குரல்கிழியக் கூவுவதோர்
வோட்டெடுக்க வீசும் வித்து.

கச்சை களையுங் கலையிற் களிகொள்ளுந்
துச்சன், துரியோ தனர்போல் — மொச்சைதரு
மிச்சனி தோஷங்க ளெம்மவரை விட்டகல
உச்சிக் கணபதியை யோது.

ஈரா யிரமாண் டெடுத்ததடி வைப்பதற்
கோரொரு வாண்டே யுளதிங்கே! — சோராது
வாராது வந்த வளமார் தமிழ்த்தாயைப்
பாராள வைப்பதே பாங்கு.

— அங்குசன் —

கவிதை முற்றம்
௪௫௫

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் ... நூலகம்

# துடுப்பாட்டம் அன்றும் இன்றும்

1

இன மத மொழிக்கு அப்பாற்பட்டு......

பாமரர் முதல் பணக்காரர் வரை......

விரல் இடுக்கு முற்றம் முதல் விளையாட்டு மைதானங்கள் வரை... எங்கும்...எவரும்...

கிரிக்கெட்! கிரிக்கெட்! கிரிக்கெட்!

வயது, பால் வித்தியாசமின்றி அனைவராலும் இரசிக்கப்படுகின்ற இந்தக் கிரிக்கெட் என்ற துடுப்பாட்டத்தை ஒரு பிரதான விளையாட்டாகக் கொள்கின்ற நாடுகள் குறைவுதான். துடுப்பாட்டங்கள் நீண்ட நேரத்தினை எடுப்பதாலோ என்னவோ ஐந்து நாள்களில் ஆடப்படும் Test ஆட்டங்களில் ஒன்பதே ஒன்பது நாடுகள்தான் பங்குபற்றுகின்றன. மேலதிகமாகச் சில நாடுகள் சர்வதேச ஒருநாள் ஆட்டங்களில் (One Day Internationals) கலந்து கொள்கின்றன.

> இக்கட்டுரையாளர் கோபி பதினாறு வயது பூர்த்தியான மாணவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து கடந்த மாதம் ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றிவிட்டு பெறுபேறுகளுக்காக காத்திருப்பவர். அடித்தல், திருத்தலின்றி முத்து முத்தான கையெழுத்தில் நல்ல வசன அமைப்புடன் அவர் வரைந்த இக்கட்டுரைத் தொடர் மாற்றம் ஏதுமின்றி அப்படியே இங்கு பிரசுரமாகுகின்றது.
>
> (ஆ-ர்)

மொத்தத்தில் உதைபந்து போன்றவை போல உலக ரீதியில் முக்கியத்துவம் பெறாவிட்டாலும் துடுப்பாட்டம் நம்மவர் மத்தியில் — அதாவது இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலே—முக்கிய இடம் பெறுகிறது. அதிலும் இலங்கை அணி 1996 இல் வில்ஸ் உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்ட பின்னர் எமது நாட்டில் பரபரப்பாகப் பேசப்படுவது இந்தக் கிரிக்கெட்.

துடுப்பாட்டத்தின் தாயகம் இங்கிலாந்து தேசம். இங்கிலாந்தில் தோன்றி அங்கிருந்துதான் இங்கிலாந்தின் குடியேற்றப் பிரதேசங்களுக்குத் துடுப்பாட்டம் பரவியது. துடுப்பாட்டத்தைப் போலவே துடுப்பாட்டம் தோன்றிய கதையும் சுவையானதுதான்!

## துடுப்பாட்டத்தின் கதை

சுமார் ஐந்நூறு ஆண்டுகளின் முன்னர் இங்கிலாந்திலே இருவகையான ஆட்டங்கள் விளையாடப்பட்டன. முதல்வகை ஆட்டத்தில் ஒரு தோற்பந்து வீசப்பட ஆட்டக்காரர் அதனைத் தடியொன்றால் அடித்தார். பந்துத் தடுப்பாளர்களும் இருந்தனர். ஆனால் பந்து வீசுபவருக்கான இலக்கு (Wicket) பயன்படுத்தப்படவில்லை.

மறுவகை ஆட்டத்திலே ஒரு ஸ்டூல் ; Stool இலக்காயிருக்க ஆட்டக்காரர் பந்தினை வெறுங் கைகளால் தடுத்து அடித்தார். ஒருமுறை தடுத்தால் ஒரு எண்ணிக்கை கிடைத்தது. பந்து Stool இனை மோதினாலோ அல்லது அடிக்கப்பட்ட பந்தை அது நிலத்தில் விழமுன்னர் தடுப்பாளர் பிடித்தாலோ (Catch) ஆட்டக்காரர் ஆட்டமிழந்தார்.

காலப் போக்கிலே இவ்வகை ஆட்டத்திலும் தடுத்தாடுவதற்குத் தடிகளைப் பயன்படுத்தும் முறை அறிமுகமானது. இருவகை ஆட்டங்களும் இணைந்தே கிரிக்கெட் உருவானது. இலக்காக ஸ்டூலிற்குப் பதிலாகத் தடிகள் நடப்பட்டன. இரண்டு தடிகள் நடப்பட்டு அவற்றின் மேலே மூன்றாவது தடி (சுள்ளி) வைக்கப்பட்டிருந்தது. தடுத்தாடுவதற்குத் தடிகளுக்குப் பதிலாகச் சற்று அகலமான துடுப்பு (Bat) க்கள் அறிமுகமாயின.


நாளடைவில் பந்தினை அடித்துவிட்டு மைதானத்தின் இரு இலக்குகளுக்கிடையில் ஓடுவதன் மூலம் எண்ணிக்கையைப் பெறும் முறை வந்தது. ஓடுவதன் மூலம் எண்ணிக்கை பெறப்பட்டதால் அவை ஓட்டங்கள் (Runs) எனப்பட்டன. ஏறத்தாழ 22 யார் இடைவெளியில் நடப்பட்டிருந்த இலக்குகளின் இலக்குத் தடிகளுக்கிடையில் குழிகள் வெட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு ஓட்ட முடிவிலும் துடுப்பாளர் துடுப்பினைக் குழியுள் வைத்தார். அதன் முன் பந்து குழியுள் வைக்கப்பட்டால் அவர் 'ரன்—அவுட்' ஆனார்.

ஆனால் இம்முறையாலே பல விக்கெட் காப்பாளர்கள் தங்கள் கைகளைக் காயப்படுத்திக் கொண்டார்கள். அது தவிர வீசப்பட்ட பந்து தடிகளை விழ்த்தாமல் இடைவெளியினூடாகச் செல்லக் கூடியதாகவும் இருந்தது. ஆதலால் இலக்காக இரண்டு தடிகளுக்குப் பதிலாக மூன்று தடிகள் நடப்பட்டன. நடுவர் வேறொரு தடியினைக் கையில் வைத்திருந்தார். ஒவ்வொரு ஓட்ட முடிவிலும் துடுப்பினால் அத்தடியினைத் தொடவேண்டியிருந்தது. ஆனால் இம்முறையிலும் பலன் இல்லை; பலர் காயப்பட்டனர்.

இதனால் விக்கெட்டுக்கு முன்னே (Crease) (கோடு) வரையும் முறை அறிமுகமானது. இதுவே இப்பொழுதும் நடைமுறையிலுள்ளது.

ஆரம்பத்தில் பந்தாளர்கள் பல விதங்களிற் பந்து வீசினர். ஓர் இளம் பெண்தான் கையைத் தலைக்கு மேலாகச் சுற்றிப் பந்து வீசும் முறையினைத் (தற்போது பயன்படுத்துவது) தொடக்கி வைத்தார். காலக் கிரமத்தில் துடுப்பின் அகலம், ஓர் அணியில் இருக்க வேண்டியோர் எண்ணிக்கை, தொப்பியினாற் பந்து பிடித்தல் போன்ற பிரச்சினைகள் புதிய விதிகளின் மூலம் தீர்த்துக் கொள்ளப்பட்டன.

இவ்வாறு பல மாற்றங்களுக்கும் முன்னேற்றங்களுக்கும் துடுப்பாட்டம் உள்ளான பின்னர் 5 நாள்களில் ஆடப்படும் ரெஸ்ற் போட்டிகள் அறிமுகமாயின.




## ரெஸ்ற் ஆடும் நாடுகள்

ஒவ்வொரு அணிக்கும் தலா இரண்டு இனிங்ஸ்களைக் கொண்டதாக ஐந்து நாள்களில் ரெஸ்ற் போட்டிகள் ஆடப்படுகின்றன. உலகின் முதல் ரெஸ்ற் போட்டி 1877 இல் இங்கிலாந்து—ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்றது. 1890 காலப் பகுதியிலிருந்து தென்னாபிரிக்காவும் ரெஸ்ற் போட்டிகளில் பங்குபற்றத் தொடங்கியது. 1926 இன் பின் இந்தியா, நியூசிலாந்து மேற்கிந்தியத் தீவுகள் போன்றனவும் ரெஸ்ற் ஆட்டங்களில் ஈடுபடத் தொடங்கின.

வெஸ்ற் இன்டீஸ் (West Indies) எனப்படுவது ஒரு நாடல்ல. வெஸ்ற் இன்டீஸ் எனப்படும் மேற்கிந்தியத் தீவுகள் அணியிலே பார்படோஸ், ஜமெய்க்கா, ட்ரினிடாட், அன்ரிகுவா போன்ற கரீபியன் கடற் பிரதேசத்துத் தீவுக் கூட்ட நாடுகளிலிருந்து வீரர்கள் பங்கேற்கிறார்கள்.

பாகிஸ்தானுக்கு 1952 இல் ரெஸ்ற் விளையாடும் அந்தஸ்து வழங்கப்பட்டது. இலங்கைக்கு 1981 ஆம் ஆண்டில் ரெஸ்ற் விளையாடும் உரிமை கிடைத்தது. தென்னாபிரிக்காவின் கறுப்பின ஒதுக்கல் நடவடிக்கைகள் காரணமான 1971 இல் அதன் ரெஸ்ற் அந்தஸ்து நீக்கப்பட்டு பின்னர் 1992 இல் மீண்டும் வழங்கப்பட்டது. இறுதியாக ரெஸ்ற் அந்தஸ்து பெற்ற நாடு ஸிம்பாப்வே. ஸிம்பாப்வேயிற்கு 1992 இல் ரெஸ்ற் அந்தஸ்து கிடைத்தது.

மொத்தத்தில் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, சிம்பாப்வே ஆகிய 9 அணிகள் ரெஸ்ற் போட்டிகளில் ஆடுகின்றன. இப்போது ரெஸ்ற் உரிமை கோரி நிற்கும் நாடு பங்களாதேஷ் ஆகும்.

இப்போது வருடந்தோறும் பெருமளவு ரெஸ்ற் போட்டிகள் நடைபெறுகின்றன. ஆனால் வரலாற்று முக்கியத்துவம் மிக்க ரெஸ்ற்



பிரெய்ன் லாரா

போட்டி என்றால் உலகின் முதல் ரெஸ்ற் போட்டிதான். அவ்வகையில் திரும்பிப் பார்த்தால்......

1877 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி காலை.

ஆம்! அப்போதுதான் உலகின் முதல் ரெஸ்ற் போட்டி ஆஸ்திரேலிய—இங்கிலாந்து அணிகளுக்கிடையில் ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் (Melbourne) நகரில் ஆரம்பமானது. பூவா, தலையா சுண்டிப் பார்த்ததில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடியது.

Charles Bannerman அற்புதமாக ஆடி 165 ஓட்டங்கள் பெற்று இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார். ஆஸ்திரேலிய அணி 245 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் ஆடிய இங்கிலாந்து அணியினரால் 196 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. ஆனால் இரண்டாவது இனிங்ஸில் ஆஸ்திரேலியா தடுமாறியது. Bannerman 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அணி 104 ஓட்டங்களுடன் துவண்டது.

154 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நம்பிக்கையுடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி முதல் 22ஓட்டங்களுக்கு 4 இலக்குகளைஇழந்தது. பின் 8 இலக்குகள் இழப்பிற்கு 98 ஓட்டங்களுடன் தடுமாறி, இறுதியில் 108 ஓட்டங்களுடன ஆட்டமிழந்தது.

ஆஸ்திரேலியாவுக்கு 45 ஓட்டங்களால் வெற்றி!

## தம் முதல் ரெஸ்ற்றில் சதம் பெற்றவர்கள்

ஆஸ்திரேலியர்கள் இன்றும் மகிழ்வுடன் நினைவு கூரும் இந்தப் போட்டி Bannerman ஐப் பொறுத்த வரையில்ஒரு சாதனை நிறைந்த ஆட்டம்.

அவர் ஆட்டமிழக்காது பெற்ற 165 ஓட்டங்கள் ரெஸ்ற் வரலாற்றின் முதற்சதம். அதுமட்டுமல்லாமல் அப்போதைய காலகட்டத்தில் ஓர் இனிங்ஸில் தனியாள் ஒருவர் பெற்ற அதி கூடிய ஓட்ட எண்ணிக்கையும் அது தான். (இது இப்போது லாறாவிடம்) மேலும் தான் ஆடிய முதல் ரெஸ்ற்றிலேயே சதம் பெற்றவர்களில் முதலாமவராகவும்Bannerman ஆனார்.

Bannermanக்குப் பின் இங்கிலாந்தின் W.G கிறேஸ் 1880 இல் ஓவல் மைதானத்தில் ஆஸ்திரேலியாவிற்கு எதிராக 152 ஓட்டங்கள் பெற்றார். இவர்களின் பின் இன்னும் ஏறத்தாழ 60 பேர் தாம் கலந்து கொண்ட முதல் ரெஸ்ற் போட்டியிலேயே சதம் பெற்றுள்ளனர்.

தம் முதல் ரெஸ்ற்றின் இரண்டு இனிங்ஸ்களிலும் சதம் பெற்ற ஒரே வீரர் மேற்கிந்தியத் தீவுகளின் லோறன்ஸ் றோ (Lawrence Rowe. அவர் நியூசிலாந்திற்கு எதிராக கிங்ஸ்ரன் மைதானத்தில் 1972 பெப்ரவரியில் முறையே 214, ஆட்டமிழக்காது 100 ஓட்டங்கள் பெற்றார். தம் முதலாட்டத்தில் இரட்டைச் சதம் பெற்ற மூவரில் றோவும் ஒருவர். மற்றையவர்கள் இங்கிலாந்தின் R. E. Foster (ஆஸ்திரேலியாவுக்கு எதிராகச் சிட்னியில் 1903 டிசம்பரில் 287), இலங்கையின் பிறன்டன் குறுப்பு (நியூசிலாந்திற்கு எதிராகக் கொழும்பில் 1987 ஏப்ரலில் ஆட்டமிழக்காது 201) ஆகியோர்.

தன் முதலாட்டத்தில் ஒரு துடுப்பாளர் பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை பொஸ்ரறின் 287 ஆகும்.

முதலாட்டத்தில் சதம் பெற்ற இலங்கை வீரர்கள் இருவர்தான். ஒருவர் பிறன்டன் குறுப்பு. மற்றவர் யார் தெரியுமா? இன்றைய விக்கெட் காப்பாளரான றொமேஷ் களுவிதாரண. களுவிதாரண ஆஸ்திரேலியாவுக்கு எதிராகக் கொழும்பில் 1992 ஒகஸ்ற்றில் ஆட்டமிழக்காது 132 ஓட்டங்கள் பெற்றார்.

தன் முதலாட்டத்தின் முதல் இனிங்ஸில் ஓட்டமேதும் பெறாது இரண்டாவது இனிங்ஸில் சதம் பெற்றவர் (0,137) இந்தியாவின் குண்டப்பா விஸ்வநாத். இது ஆஸ்திரேலியாவிற்கு எதிராகக் கான்பூரில் நவம்பர் 1969 இல் நடந்தது.

தன் முதலாட்டத்தில் ஓர் இனிங்ஸில் ஒரு சதம் அடித்ததுடன் 5 விக்கெட்களையும் கைப்பற்றிய ஒரே வீரர் நியூசிலாந்தின் Bruce Taylor ஆவார். (1965 மார்ச்சில் இந்தியாவிற்கு எதிராகக் கல்கத்தாவில்)

- கோபி -

முதலாட்டத்தில் சதம் பெற்ற பத்து இந்தியர்களில் முதலாமவர் லாலா அமர்நாத் (1933 இல்). அவரது மகன் சுரீந்தர் அமர்நாத் தன் முதலாட்டத்தில் 1976 ஜனவரியில் நியூசிலாந்திற்கு எதிராகச் சதம் பெற்றார். இச்சாதனையைத் தந்தையும் மகனும் சாதித்த ஒரேயொரு சந்தர்ப்பம் இதுவாகும்.

### தற்காலச் சிறந்த துடுப்பாளர்களில்....

இன்றைய இந்தியத் தலைவரான மொகமட் அஸாருதீன் தன் முதல் ரெஸ்ற்றில் 1985 ஜனவரியில் கல்கத்தாவில் இங்கிலாந்திற்கு எதிராக 110 ஓட்டங்கள் பெற்றார். பின் அடுத்து வந்த இரு ரெஸ்ற்களிலும் சதம் அடித்தார். இவ்வகையில் தன் முதல் மூன்று ரெஸ்ற்களிலும் சதம் பெற்ற ஒரே வீரர் அஸார் தான்.

அஸாருதீன் 1998 — 99 காலப் பகுதியின் இந்திய — நியூசிலாந்து ரெஸ்ற் தொடரின் இரண்டாவது ரெஸ்ற்றில் ஆட்டமிழக்காது பெற்ற சதம் அவருடைய 21 ஆவது நூறு ஆகும்.

இந்தியாவின் இன்னொரு முக்கிய வீரரான சௌரவ் கங்குலி தன் முதல் இரு ரெஸ்ற்களிலும் சதம் பெற்றவர் ஆவார். (1996 ஜூனில் இங்கிலாந்துக்கு எதிராக லோட்ஸில் 131, ஜூலையில் ட்ரென் பிறிட்ஜ் இல் 136)

மேலும் இப்போது சிறந்த துடுப்பாளர்களாக விளங்கும் ஆஸ்திரேலியாவின் மார்க் வோ (இங்கிலாந்துக்கு எதிராக 1991 ஜனவரியில் அடலெயிட் மைதானத்தில் 138), இங்கிலாந்தின் கிரஹாம் தோர்பே (ஆஸ்திரேலியாவிற்கு எதிராக 1993 ஜூலையில் ட்ரென்பிறிட்ஜ் மைதானத்தில் 6, ஆட்டமிழக்காமல் 114) ஆகியோரும் தம் முதல் ரெஸ்ற்றில் சதம் பெற்றவர்களே.

தன் முதற் ரெஸ்ற்றில் Bannerman செய்த இன்னொரு சாதனை ஓர் இனிங்ஸில் அதிகபட்சமாக 165 ஓட்டங்கள் பெற்றமை ஆகும். அச்சாதனை பலரிடம் கைமாறி இப்போது மேற்கிந்தியத் தீவுகள் அணியின் லாறாவிடம் இருக்கிறது.

லாறாவிடம் அச் சாதனை வந்த விதம்...... அடுத்த இதழில்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரப்பான் பூச்சி

செங்கை ஆழியான்

மழை பெய்து ஓய்ந்திருந்த ஒரு மாலைப் பொழுதில் அவன் என் அறை வாசலில் நின்றிருந்தான். நீண்ட நேரம் அவன் நின்றிருக்க வேண்டும். அறையைத் திறந்து மின் சுவிச்சினைத் தட்டியதும் பிரகாசமான என் அறையின் தரையில் அந்த அருவருப்பான பூச்சி கண்களிற் பட்டது. நான் அதை நெருங்குவதற்கு முன் அது என் மேசை மீது படபடவென ஏறி மறைந்து போனது. அந்தப் பூச்சியின் தட்டையான உடலும் மழமழப்பும் மேசையின் இடுக்கொன்றில் புகுந்து மறைய உதவியுள்ளது.

எனக்கு கரப்பான் பூச்சிகளைப் பிடிப்பதேயில்லை.

இன்று இதனை விடவே கூடாது. மேசை லாச்சிகளை இழுத்து அந்தப் பூச்சியைத் தேடிக்கொண்டிருக்கும்போது தான் அவன் வந்திருக்க வேண்டும். இடுக்கொன்றில் மறைந்து போன அந்தப் பூச்சியைக் கண்டு பிடிக்க முடியாமல் தலை நிமிர்ந்தபோது அவனைக் கண்டேன்.

''வாரும் தம்பி.''

அவன் தயக்கத்துடன் உள்ளே வந்தான்.

''மன்னிக்க வேண்டும். உங்களுடைய முக்கியமான வேலைகளைக் குழப்பி விட்டேன் போலிருக்குது.''

வார்த்தைகள் சங்கடத்துடன் வெளிவந்தன. இருபத்தாறு வயது மதிக்கத்தக்க ஆஜானுபாகுவான ஓர் இளைஞன் இப்படி இங்கிதத்தோடு பேசுவது எனக்குப்பிடித்திருந்

''இல்லை.. இல்லை. அப்படியொன்றுமில்லை. கரப்பான் பூச்சியொன்றைத் தேடினேன். மேசை லாச்சிக்குள் புகுந்து விட்டது.''

''வீடு சுத்தமாகவிருந்தால் கரப்பான் குடிவராது...''

என் முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தை அவன் உணர்ந்திருக்க வேண்டும்.

'சாந்தி அகத்தையா' அவன் துப்பரவில்லாத வீடு என்கிறான்?

''நான் பொதுப்படையாசச் சொன்னேன்.'' என்றான் அவன் பரிதாபத்துடன்.

''அப்படியொன்றுமில்லைத் தம்பி. இந்தச் சாந்தியகம் பாதிக்கப்பட்ட மக்களைப் பேணுவதற்காகக் கட்டப்பட்ட புதிய சட்டடம். மூன்றாண்டுகள் கூடக் கழியவில்லை. நீரே பாரும் துப்பரவாக இந்தக் கட்டிடத்தைப் பேணி வருகின்றோம். அப்படியிருந்தும் எப்படி இந்தக் கரப்பான் பூச்சிகள் குடியேறின என்பது தான் புரியவில்லை.''

''அவை நீங்கள் வாங்கிய பொருள்களுடன் வந்திருக்கும். ஒன்றிரண்டு வந்தாலே போதும். பல்கிப் பெருகிவிடும். ஏனெனில் அவை இருப்பதைக் கண்டுபிடிக்க முடியாது. சந்து பொந்துகளில் நுழைந்துவிடும்.''

''மருந்துகள் தெளித்துப் பார்த்தன். ஒன்றிற்கும் அசையவில்லை. பொல்லாத பீடைகள்.''

''பைரித்திரம் பாவித்தியளா?

''குளோர்டன், சோடியம் புளோரைட், தயோசயனேட் எல்லாம் பாவித்துப் பார்த்து விட்டேன். ஏச். ஐ. வி. வைரஸ் மாதிரி ஒழியிறமாதிரியில்லை...''

அவன் என்னை வியப்புடன் பார்ப்பதாகப் பட்டது. சற்று நேரக் கழிவில் அவன் வாய் விட்டுச் சிரித்தான். இப்பொழுது நான் அவனை வியப்புடன் பார்த்தேன்.

''உங்கள் உதாரணம் எனக்கு மிகவும் பிடித்து விட்டது...''

''கரப்பானை ஒழிப்பதற்கு வீட்டைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்கிறீர்...''

இருவரும் வாய் விட்டுச் சிரித்தோம். அந்தக் குறுகிய சந்திப்பில் அவன் என்னை நெருங்கி வந்துவிட்டான்.

''என் பெயர் தவநாதன். முல்லைத்தீவு என் சொந்த விடம். சாந்தியகத்தில் பணியாற்ற விரும்பி வந்திருக்கிறன்.''

நான் என் கதிரையில் நிமிர்ந்து அமர்ந்து கொண்டேன்.

''இந்த மனையில் முப்பத்திரண்டு பாதிப்புற்றோர் இருக்கின்றனர். அண்மைக் கால யுத்தத்தினால் பாதிக்கப் பட்டவர்கள், மிதிவெடியில் கால்களைப் பறிகொடுத்தவர்கள் நால்வர். பெற்றோரைப் பலிகொடுத்து அனாதைகளாகத் தவிக்கும் பிள்ளைகள் பன்னிருவர், எய்ட்ஸுடன் வெளிநாட்டிலிருந்து வந்திறங்கிய இருவர், எவரும் பராமரிக்க இல்லாத வயோதிபர் எழுவர், யுத்த அனர்த்தத்தால் மனம் பேதலித்துப் போன நால்வர்...''

நான் பேசுவதை நிறுத்தி விட்டு அவனைப் பார்த்தேன். அவன் மௌனமாக என்னை ஏறிட்டான். நான் தொடர்ந்தேன்.

''மற்ற மூவர் நான், காவற்காரச் சுப்பையா, சமையற்காரக் கிளி, இவர்களை விட வந்து பணியாற்றிவிட்டுச் செல்கின்ற தொண்டர்கள் பலர் உள்ளனர்...''

''அந்த மூவரோடு என்னைச் சேர்த்துக்கொள்ளுங்கள்...''

''இங்கு பணியாற்றுவதற்குச் சம்பளம் கிடையாது.''

''தெரியும் ஐயா. நான் வசதியானவன். சொத்துப் பத்துள்ளவன். அவற்றோடு என்னையும் இப்பணியில் ஈடுபடுத்த வந்திருக்கிறன். எனக்குச் சாந்தி தேவை. நிம்மதி தேவை. எனக்கு அவற்றைத் தாருங்கள்...'' என்றபடி அவன் என்னிரு கரங்களையும் பற்றிக் கொண்டான். விழிகள் துளிர்க்கத் தயார் நிலையில் இருந்தன.

அறையில் அமர்ந்த நிலையில் ஜன்னலூடாகப் பார்க்கிறபோது, விரிந்து கிடந்த முற்றத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிறிதொரு உலகம் பரிணமிப்பதாகத் தெரிந்தது. இந்த மண்ணின் அவலத்தைச் சுட்டிக் காட்டிக்கொண்டு பலர் அங்கு நடமாடினர். மிதிவெடியில் கால்களை இழந்தவர்கள், பொம்பர் குண்டு வீச்சுக்களால் உறவுகளை இழந்து அனாதையானவர்கள், பராமரிக்கஎவருமற்ற வயோதிபர்கள்... எல்லாரும் தங்களது துயரங்களை மறந்து மகிழ்ச்சியாக இருப்பதாக எனக்குப்படுகிறது. அவ்விடத்தில் நிலவுகின்ற ஆரவாரம், சிரிப்பலைகள் மெல்லக்காற்றில் மிதந்து வந்து என் அறையில் சேர்கின்றது. ஆனால் அந்த வேப்ப மரத்தின் சீமெந்துத் திண்ணைக் குந்தில் உலகத்தின் துயரமெல்லாம் தன்மீது படிந்திறங்கி விட்டதாக மாதவன் அமர்ந்திருக்கிறான். அவனைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.

அவன் தன்னைத் தனிமைப் படுத்திக் கொண்டதாக எனக்குப் படுகின்றது. அவனைப் போலவே வசந்தகுமாரும் இங்குள்ளான். அவன் அறையை விட்டு வெளியில் வருவதே குறைவு. அவன் வெளியுலகத்திலிருந்து தன்னை மறைத்துக் கொண்டிருப்பதாக எனக்குப் பட்டது.

இருவரும் இளமையில் வாழ்க்கையைப் பறிகொடுத்தவர்கள் எனக்கூறிய மனம் அவசரமவசரமாக அதனைத் திருத்தி கொண்டது.

தவநாதனுக்கு அவர்கள் இருவரையும் அறிமுகப்படுத்தியபோது இப்படியொரு தடவை கூறிவிட்டேன்.

''என்ன ஐயா, நீங்களே இப்படிக் கூறுகிறீர்கள்? அவர்கள் வாழ்க்கையைத் தொலைத்தவர்களல்லர்.''

''அவர்கள் எய்ட்ஸ் நோயாளிகள்.''

தவநாதன் மிக ஆழமாக என்னை ஊடுருவிப்பார்த்தான். அப்படி நான் கூறியதை அவன் விரும்பவில்லைப் போலப் பட்டது. அவன் வித்தியாசமான மனிதன். இந்தச் சாந்தியகத்திற்கு வந்து ஆறுமாதங்களாகின்றன. உண்மையில் அவன் வருகைக்குப் பின்னர் எனது வேலைப்பளு எவ்வளவோ

சஞ்சீவி சிறுகதை

குறைந்து விட்டது. சாந்தியகத்தில் சற்று வித்தியாசமான ஒரு மலர்ச்சி ஏற்பட்டிருப்பதை நான் அவதானித்தேன். அங்கு அடைக்கலம் புகுந்திருந்த ஒவ்வொருவரையும் அவன் அக்கறையோடும் அரவணைப்போடும் கவனிப்பது தெரிந்தது. அவனைச் சுற்றி எப்போதும் ஓரிருவர் நின்று கொண்டிருந்தனர். அல்லது ஓரிருவரின் குறைநிறைகளைச் கேட்டு நிவர்த்தி செய்பவனாக நின்றிருப்பான்.

அவன் தனது நேரத்தில் கணிசமான பகுதியை வசந்தகுமாரின் அறையிலும் மாதவனுடன் பேசுவதிலும் கழித்தான்.

''எய்ட்ஸ் நோயாளிகள் வாழ்க்கையைத் தொலைத்தவர்களல்லர். வாழ்க்கையென்பது செக்ஸ், பாலியல் மட்டுந்தான் என நீங்கள் நினைக்கிறீர்கள் போலும்''

''அதனால்தானே அவர்கள் இந்த நிலைக்கு ஆளானார்கள்? கட்டுப்பாடாக ஒருவனுக்கு ஒருத்தியெண்டு இருந்திருந்தால் இப்படி வந்திருக்குமா?''

''நீங்கள் சொல்வதும் சரிதான். எண்டாலும் இந்த உலகின் வாழ்வியலை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களின் நோயை மறக்கச் செய்ய வாழ்வியலின் மற்றக் களங்களில் அவர்களை வாழச் செய்ய வேண்டும். இருட்டிலிருந்து அவர்களை வெளிக் கொணர வேண்டும்.''

நான் அவனைக் கவலையுடன் பார்த்தேன்.

''மாதவனுக்கு ஒரு குடும்பம் இருக்கிறது. அவனுக்கு இந்த வியாதி என்றதும் மனைவியும் பிள்ளைகளும் அவனை ஒதுக்கிவிட்டனர். சாந்தியகம் அவனை இரக்கத்தோடு ஏற்றிருக்கின்றது. வசந்தகுமாரின் குடும்பமும் அவனை ஏற்றுக்கொள்ளவில்லை. இருவரும் சாந்தியகத்திற்கு வந்து இருட்டுடன் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டனர். அவர்களால் மரண பயத்தை வெல்ல முடியவில்லை. மரணம் அவர்களுக்கென எழுதப்பட்டுக் காத்திருக்கின்றது. தாமாகவே தேடிக்கொண்ட மரணக் கயிறு இது...''

''மரணம் என்பது யாருக்குத்தான் வராது ஐயா? எத்தனை வடிவங்களில் அது வரும்? எய்ட்ஸ் ஒரு வடிவம் அவ்வளவுதான். அவர்களைப் பார்த்துப் பரிதாபப்படுவதிலும் அவர்களை அரவணைத்துக்கொள்ளவேண்டும்.''

வேப்பமரத்தின் கீழிடப்பட்டிருக்கும் சிமேந்துக் குந்தில் அமர்ந்திருக்கும் மாதவனைப் பார்க்குப்போது அவன் இப்பொழுது தெளிவாக இருப்பதாகப்பட்டது. அவன் அருகில் அமர்ந்திருக்கும் தவநாதன் சிரிக்கச்சிரிக்க என்ன தான் பேசுவான்?

''மாதவா, இந்த உலகம் எங்கள் யாவருக்குந்தான். நீயும் உன்னைப் பிடித்திருக்கும் நோயும் இந்த உலகத்திற்குத்தான். சதா அதைப் பற்றி யோசியாது எப்பொழுதும் உன்னை உற்சாகப்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்.''

அவர்கள் இருக்குமிடத்தை நோக்கி வசந்தகுமார் வருவது தெரிகின்றது. இருட்டறையில் முடங்கிக்கிடந்தவன் வெளியில் வருகின்றான். அவனை முற்றத்தில் நின்றவர்கள் ஏதோ விசாரிப்பதும் அவனின் தோளில் தட்டிச் சிரிப்பதும் எனக்கு வியப்பினைத் தருகின்றது. மாதவனையும் வசந்தகுமாரையும் இந்த மனையில் இருந்தவர்கள் அருவருப்புடன் பார்த்திருக்கிறார்கள். அஞ்ஞான பயம் நீங்கிவிட்டது. அதற்குக் காரணம் தவநாதனாகத் தான் இருக்கும்.

அவர்கள் மூவரும் சிரித்துப் பேசியபடி வெளியே புறப்படுவது எனக்கு அதிர்ச்சியாகவில்லை. மகிழ்ச்சியைத் தருகின்றது. வெளியில்போய்வருதாக அவர்கள்எனக்கு சைகை மூலம் தெரிவிக்கின்றார்கள்.

அவர்கள் வாழ்க்கையின் ஏனைய களங்களில் வாழப் பழகிவிட்டார்கள்.

மாதவன் இங்கு வந்து எவ்வளவு காலம் இருக்கும்? அவனுடைய பெயர்வழிக் கோவையைப் பார்க்க விரும்பி எழுந்து அலுமாரியைத் திறந்து கோவைகளைக் கிளறியபோது அதற்கடியிலிருந்து மூன்று, நான்கு கரப்பான் பூச்சிகள் தம்மை மறைத்துக்கொள்ள வேகமாக ஓடிமறைந்தன. அருவருப்புடன் சற்று விலகிக்கொண்டேன். ஒரு கரப்பான் விர்ரெனப்பறந்து என் சேர்ட்டில் தரித்தது. பட்டெனத் தட்டி விட்டேன். அருவருப்பான நாற்றம் நாசியில் ஏறியது.

வீட்டில் புகுந்துவிட்ட கரப்பான்களை அகற்ற முடியவில்லை. எவ்வளவு துப்பரவாக வைத்திருக்கமுயன்றும் பயனில்லை. அவை வந்து குடியேறுவதற்கு முன் நாம் அவதானமாகவும் கண்டிப்பான கவனத்துடனும் இருந்திருக்க வேண்டும். கண்ட குப்பைகளுக்கு இடம் கொடுத்து விட்டோம்.

கரப்பான் பூச்சிகளுக்குச் சாக்கடைகள் என்றால் பிரியம்.

நான் கோவைகளை எடுக்காமல் கதிரையில் வந்து துயரத்துடன் அமர்ந்தபோது, ''உள்ளே வரலாமா சேர்?'' என்று இனிமையான குரல் கேட்டது.

அவள் நின்றிருந்தாள். இருபத்தைந்துவயது மதிக்கத்தக்க உருவம். ஒரு தடவை பார்த்தால் மறுதடவை பார்க்கத் தூண்டும் கவர்ச்சி. சேலை அணிந்து அடக்கமாகத் தென்பட்டாள். முகத்தில் சோகம் அப்பிக்கிடந்தது.

''வாம்மா...''

''நான் சாந்தி...''

''எந்தச் சாந்தி.........?''

நான் அதிகநேரம் மண்டையைக்குழப்பவில்லை. நினைவு வந்துவிட்டது. தவநாதனுக்கு வாராவாரம் மறக்காது கடிதம் எழுதிக் கொண்டிருக்கும் ஒரே பெண். என்ன தவறினாலும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் அவள் கடிதம் வருவது தவறாது. கடித உறையில் பெரிதாக முகவரியும் எழுதியிருப்பாள். அனுப்புபவர் ''த.சாந்தி'' எனக் குறித்தும் இருப்பாள்.

''தெரிகிறது. தவநாதன் இங்கில்லை இப்பத்தான்வெளியில் சென்றார்.''

''அவர் வருவதற்குமுன் உங்களுடன் கொஞ்சம் பேச வேண்டும் சேர்'' அவள் விழிகள் என்னிடம் இரந்தன.

''என்னிடமா?''

இவள் மௌனமாகச் சற்று நேரம் அமர்ந்திருந்தாள்.

நான் தட்டிவிட்ட கரப்பான்பூச்சி சுவரில் ஏறுவது தெரிகின்றது. என் கவனம் அதில் திரும்பியது. அவளும் இதனைக் கவனித்து விட்டாள். நான் அவளைத் திரும்பிப் பார்க்கும்வரை காத்திருந்தாள்,

''சொல்லம்மா நான்உனக்கு எப்படி உதவலாம்?''

''நீங்கள் அவரிடம் எடுத்துச்சொல்லக்கூடாதா?''

நான் அவளை வியப்புடன் பார்த்தேன். தவநாதனுக்கும் இந்தப் பெண்ணுக்குமான தொடர்பு என்ன என்பது

(X ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவல்



**சேது** மாமா என்கின்ற சேதுபதி மாமாவை நீங்கள் அறிந்திருக்க நியாயமில்லை. நம் ஊரில் அறுபதாகியும் இன்னும் இருபது வருடங்கள் வாழும் எண்ணத்துடன் இருக்கும் வல்ல சீவன்.

உமக்கு போற, வாற, இருக்கின்ற, நிற்கின்ற கிடக்கின்ற எல்லோரும் மாமா முறையாமோ?

கேள்வி மிக நியாயம்.

நம்மூரில் ஒரு ஐதிகம். கொஞ்சம் வயது, கொஞ்சம் தூரத்து உறவு, இத்தியாதி... இருந்தால் சும்மா ஒரு மரியாதையாக மாமா. அம்முட்டும்தான். அப்படி நீவிர் சந்தேகப்பட்டாலும் அதற்கு நான் ஒரு பத்து வருடம் முந்திப் பிறந்து சேது மாமாவின் கடைசி மகளையாவது நீவிர் நினைக்கும் செயல் புரிந்து லண்டனில் அல்லது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும். எனவே உங்கள் சந்தேகத்துக்குஇடமே இல்லை.

இந்த சேதுமாமா தெய்வ கடாட்சம் யாவும் பெற்று சீரும் சிறப்புமாய் வாழும் சமூகப் பிராணி. ஆரம்ப நாளில் கொழும்பு வியாபாரம் — புகையிலை, வெங்காயம், மிளகாய், தேங்காய் என்று—பெரிதாகச் செய்து, நிறைவாக உழைத்து ஆதியும் அந்தமும் அடைந்து, வீடு கட்டி, கிணறு கட்டி, கக்கூஸ் கட்டி, வீட்டுக்கு முன்னால் மாட்டுக்கு தண்ணீர் தொட்டி கட்டி இன்னும் என்ன எல்லாம் கட்டவேண்டுமோ அவையனைத்தும் கட்டி முடித்து, பெற்ற புத்திர, புத்திரி சிகாமணிகள் எல்லீரையும் நாட்டுக்கு வெளியே அனுப்பி, ஆங்கு அவர் தம் தொழில்சிறப்பைப் பற்றிச் சிறிதும் கவலை கொளாது நான் பெற்ற மக்கள் கனடா, லண்டன் எனப் பெருமை கொண்டு 'ஈஸிச் செயாரில்' சாய்ந்திருக்கக் காண்பீர்.

பொழுது போகாமல் விறாந்தையிலிருந்துகொண்டு தெருவால் போவோர், வருவோரை 'கூக்' காட்டிக் கூப்பிட்டு, அருகில் இருத்தி பில்கிளின்ரனின் மொனீக்காவையும், மண்டேலாவின் திருமணத்தையும் ஒரு நமுட்டுச் சிரிப்புடன் அங்கலாய்த்தும் ஒருவாறு அன்றைய பொழுது போக அடுத்த நாள் கூப்பிட ஆளில்லாமல் வாடிக்கிடக்கின்ற போது—

விஜயம் மாமி—

நம்ம சேதுமாமா ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தைந்தாம் வருடம் பதினோராம் மாதம் ஐந்தாம் திகதி பொன் கிடைத்தாலும் கிடையா புதன் கிழமை சரியாக 9.55 இற்கு அமிர்த யோகம் கூடிய வேலை தொடாமல் தாலி கட்டிய இல்லக் கிழத்தி, அன்று இணைந்துஇன்றுவரை ஒரு வித மாசு மறுவும் இல்லாது வாழ்ந்து, சேதுமாமாவின் ஆசாபாசங்களுக்கு இடம் கொடுத்து, ஏழு ஆண் வர்க்கமும், மூன்று பெண் வர்க்கமும் பெற்று, இப்போது ஐந்தாறு வருடமும், இரண்டு மாதமும் ஐந்துநாளும் வயதை தாண்டிய பின்னரும் கம்பு மாதிரி ஓடியாடி சேதுமாமாவின் சகல கைங்கரியங்களையும் தீர்த்து வைக்கும் இல்லாள்—அல்லது இனியாள்.

சேதுமாமா பொழுது போகாமல் ஈஸிச் செயாரில் பாரமாய் இருக்க விஜயம் மாமி என்றும் ஓய்ந்தவரல்ல. உழைப்பும் கையுமாய் இருப்பவ. அவவின் தேசியத் தொழில்...வேறென்ன கோழி வளர்ப்புத்தான். முட்டை, கோழி வியாபாரம் எப்பவும் அமோகம். தீபாவளி, சாமத்திய வீடு, பிள்ளைப்பெறு என்றால் விஜயம் மாமி வீட்டை நோக்கி படையெடுப்பு நிகழும். தொழில் செழிக்கும். வீட்டுக்குப்பின்னால் ஒரு வீடு போட்டு விஜயம் மாமி ஏராளமாய் கோழி வளர்த்தார். கோழிகளுடன் போராடிப்பொழுது போகும்.

சேதுமாமாவிற்கு முட்டை இறைச்சிக்குப் பஞ்சமில்லை. அன்றுங் கூட இறைச்சியுடன் ஒரு வீமவெட்டு வெட்டி விட்டு ஓய்வாகப் படுத்திருந்தவர் தற்செயலாய் முற்றத்தில் மேய்ந்து கொண்டு இருந்த கோழிகளுள் நின்ற ஒரு விடலைப் பருவ சேவலைப் பார்த்து அதன் அழகினில் மயங்கிப் போனார். அப்பதான் அதற்கு வெடிவால் கிழம்பி இருந்தது. பச்சை வண்ண செட்டைகளும் கழுத்தடியில் பொன்வண்ண செட்டைகளும், வாற்பகுதி மஞ்சளும் இளஞ்சிவப்புக் கலந்ததுமாய் ஒரு மயில் வண்ணத்தில் நிமிர்ந்து நின்று நாளைய இராஜா என்று செட்டை அடித்துக் கூவ முனைந்தது.

''இஞ்சை விஜயம் என்னப்பா, இந்தச் சாவலை நான் ஒருநாளும்காணேல்லை எங்கை நிண்டது? இவ்வளவு நாளும் என் கண்ணில் சந்திக்காமல் என்ன வடிவப்பா...இது மயில் மாதிரி எல்லே இருக்குது...''

அதன் அழகினில் சொக்கிப்போனார்.

''இதை விக்கவோ காச்சவோ வேண்டாமப்பா. நெடுக வளர்ப்பம். நிக்கட்டும்''

சேதுமாமா சொன்னா சொன்னதுதான். நிருபித்துக் காட்டுவதில் ஆள் விண்ணன்.

நாளடைவில் அச்சேவல் நன்றாகப் பெருத்து நல்ல வடிவாக மயில் மாதிரி இருந்தது.

சேதுமாமா அதற்கு 'மயிலன்' என்று பேரும் வைத்து விட்டார். மயிலன் விஜயம் மாமியை விட்டுவிட்டு சேதுமாமாவுடன் ஒட்டிக்கொண்டது. மயிலனுடனான உறவின் பின் சேதுமாமா கோழி இறைச்சி சாப்பிடுவதை விட்டும் விட்டார். முட்டை மாத்திரம் சாப்பிடுவார்.

சேதுமாமாவுக்கு இறைச்சி என்றால் தேவர்களுக்கு அமுதம் மாதிரி.

பறப்பனவற்றில் விமானத்தையும் ஊர்வனவற்றில் பாம்பையும் தவிர மிச்சம் எல்லா வகை இறைச்சிகளையும் பதம் பார்த்தவர்.

**- கோகுலராகவன் -**

அந்நாளில் ஊரில் விலாசமான, வேட்டை வெடிகாரன் 'வின்ஸ்செஸ்ரர்' ஷொட் கண் துவக்கினைத் தூக்கிக் கொண்டு சேனாதிபதி படை வீரர் புடைசூழ கலைப்பு வேட்டைக்குப் போனால் இரண்டு பன்றிக்குக் குறையாது சுட்டுவிடும் திறன் படைத்தவர்.

இந்தக் கலைப்பு வேட்டை ஒரு சுவாரசியமான வேட்டையாடல் முறை. ஒரு பத்துப் பேர் ஒரு வெடிகாரனுடன் காட்டுப் பக்கமாய் போய் வேட்டை நடக்கும்.

நாலுபேர் காட்டுக்குள் இறங்க, மிச்சப் பேர் ஒவ்வொரு இறக்கத்திலும் காவல் இருப்பர், இறக்கம் என்பது பன்றி காடுமாற, இரைதேடப் போகும் பாதைகள். இதில் பெரிய இறக்கம் —அதாவது பன்றி அடிக்கடி பாவிக்கும் பாதை—இதில் தான் வெடிகாரன் இருப்பார். காட்டிற்குள் இறங்கியவர்கள் கூக்காட்டிப் பன்றியைப் படுக்கையால் எழுப்பி விரட்ட மற்ற இறக்கத்திற்கு வந்தால் அதில் நிற்குமாள் திருப்பிக் கலைப்பார். குறைந்தது ஒரு பன்றியையென்றாலும் பெரிய இறக்கத்துக்கு போகும். சேதுமாமாவின் 'வின்ஸ் செஸ்ரர்' குறி தப்பாது.

இந்த வேட்டையை அடிக்கடி நினைவு கூர்ந்து கொள்வார். சேதுமாமாவின் வேட்டைச் சினேகிதர் ஒருவர்

(X ஆம் பக்கம் பார்க்க)

---

சஞ்சீவி

# சிறு கதைகள்

ஓய்வு என்பது அவருக்கு அரசாங்கம் அனுமதித்த கொடை. சாய்வு நாற்காலியில் சரிந்து கொண்டிருந்தாலும், எண்ணங்களின் எழுச்சிகளை எப்படி எடுத்தெறிவது? பொறுப்புக்களின் பொல்லாப்புக்களை எப்படி இல்லாதொழிப்பது? சிந்தனைகளை எப்படி சிறைப்படுத்திக்கொள்வது? இறக்கும் வரைக்கும் இருக்கிறது பொறுப்பு. அர்த்தமானது— ஆக்கபூர்வமானது என்பதை விட, அசிங்கங்களும் அருவெருப்புக்களும் தானே பொறுப்பின் போக்குகளில் மேலிடுகிறது. கதிராமரின் காத்திரமான சிந்தனைகள் கனக்கின்றன. சாக்கடைகளால் நிரம்பியிருக்கும் எம் சமூகம் அவருக்கு சர்ச்சைகளையே சமர்ப்பித்திருக்கிறது. அவர் வாழ்வு ஒன்றும் அந்தரங்கமானதல்ல. எமது சமூக அங்கங்களில் அல்லல்களை ஏற்படுத்தி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் அனைவர்க்கும் அம்பலமானது.

கதிரவனுக்கு ஓய்வில்லைத்தான். அவனின் ஆர்ப்பரிப்பில் அர்த்தமிருக்கிறது. இந்தக் கதிராமரின் கவனங்களில் கவலைகளோ கனதி.

அர்த்தநாரீஸ்வரம் இழந்து ஆறுவருடம் ஆகிவிட்டது. இப்போ அவரின் மாத ஓய்வூதியம் சாதம் கறிகளோடு சரியாகிவிடும். ஒரே ஒரு ஓய்யார மகள். வங்கிக்கணக்காளராய் வட்டமிடுகிறாள். பட்டதாரி. பட்டத்தை வைத்துக்கொண்டே பட்டமாய்ப் பறப்பவள். அவளின் மேனி எழிலுக்கு மெருகூட்டவே மாதச் சம்பளம் மறைந்துவிடும். சிக்கனம். சேமிப்பு என்ற சிந்தனைக்கே இடமில்லை. வேலைமுடிந்தால் வீடு. வீட்டிலிருந்து வேலை என்பதிலேயே அவள் வேளை கலைந்துவிடும். அப்பப்போ கருத்தாழப் புத்தகங்களே அவளின் கவனத்தை ஈர்க்கும். புத்தகங்களே அவளின் சொத்தான நட்பு. நண்பிகள்என்று எவளும் அவளை நாடியதுமில்லை; அவள் நாடுவதுமில்லை.

கதிராமரின் கவனங்கள் எல்லாம் மகள் கௌரியின் கலியாணம் பற்றித்தான். உறவினர் உதவிகள் ஏதுமில்லை. மகளுக்கென எஞ்சியிருப்பது மனை மட்டும் தான். நாடி வந்த பல நல்ல பொருத்தங்கள் காசில்லாமல் காணாமற் போயின. பேசிப் பேசி பெரும் அலைச்சலே கதிராமருக்கு.

★ ★ ★

அன்றுஉறக்கத்திற்கு போகமுன் நூல் ஒன்றுள் நுழைகிறாள் கௌரி...

'ஆடைகளைப் போர்த்த அரைகுறை மனிதர் தான் நாம். எம் சம்பிரதாயங்களும், சட்டங்களும் சீர்திருத்தமெனச் சிதைந்து கிடக்கின்றன. ஏய்ப்பும் எஜமானமும் தாராளமாய்த் தளைக்கிறது. சிதைவுகளுக்கு வழிகாட்டிவிட்டுத் தலைமைகள் தப்பித்துவிடுகின்றன. புத்தி பூர்வங்களைப் புதைத்துவிட்டு கத்திக்கு அப்பாற்பட்ட சர்ச்சைகளைச் சாதாரணமாக்குகின்றான் மனிதன். நாகரீகப் போர்வைக்குள் நரகத்தில்தான் நகர்கிறான் மனிதன்...'

புத்தகத்தின் இடைவரிகள் சில அவள் இதயத்தைக் கிளறின. ஆழ்ந்த கருத்துகள் அங்கே புதைந்தன. கருத்துக்கணைகள் இதயத்துள் கீறகண்ணயர்ந்தாள் கௌரி.

★ ★ ★

காலை.

''கதிராமையா...... கதிராமையா...''

கனகரின் சத்தம் காதைப் பிளந்தது.

''வாரும் கனகர். என்ன கனகாலம் காணேல்ல... உமக்கும் இப்ப ஊர் வேலை கூடிட்டுது போல. பணம் இருக்கிறவை பக்கம் போய் படுத்திடுவீர் ஆக்கும்..''



''இல்லை அண்ணை. நல்லா அமைஞ்சால்தானே நாடி வருவம். எல்லோரும் காசு எவ்வளவு கனகர் கறந்து தருவீர் எண்டெல்லே கதைக்கிறாங்கள்''

''சரி கனகர் அமைவாக ஏதாவது அகப்பட்டுச்சோ...'!

''ஒண்டிருக்கண்ணை ...... ஒண்டும் வேண்டாமாம். ஒழுங்கான பொம்புள வேணுமாம். படிச்சவன், பண்பானவன்...என்ன சொல்லுறீர்...?''

''ஒண்டும் வேண்டாமெண்டால், ஏதோ அவரில வீக் இருக்குப்போல...''

சந்தேகிக்கிறார் கதிராமர்.

''உதுதானே அண்ணை உங்களை முட்டையில ஏதோ புடுங்கி எண்டு ஊரில சொல்லுறவங்கள். இதோட எத்தினையாவதை இணைச்சிட்டன். ஒண்டுக்கும் நீங்கள் அணையேல்ல. நான் வாறன்...''

புறோக்கர் கனகர் புறுபுறுத்தவாறு புறப்பட்டார்.

கதிராமர் சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். 'பிள்ளைகளை படிக்க வைச்சு, பதவியில இருக்க வைச்சாலும் படுதுயரம்தான். படிப்புக்கும் பதவிக்கும் ஏற்ற மாப்பிளை எடுக்க எத்தனை இடத்தில மண்டியிடவேணும் மண்டையை உடைக்க வேணும்? பதவிகளை பக்குவப்படுத்துவதெண்டாலே பெரும் பரிதாபமாக இருக்குது.'

உற்றுச் சிந்தித்தபடி உறங்கினார் கதிராமர்.

★ ★ ★

இரவு —

வழமைபோல் தன் கருமங்களை முடித்துவிட்டு உறங்கப் போகுமுன் 'உறவுகள்' புத்தகத்தை கொஞ்சம் உற்றுப் பாக்கிறாள் கௌரி.

பூக்கள் அழகானவைதான். எல்லாமே பூசைக்குரியவை அல்ல. மணம் வீசுபவை சில; மயக்க வைப்பவை சில; எழிலாய் இருப்பவை சில; எழுத வைப்பவை சில. எங்கோ கண்ணின் ஸ்பரிசம் கிடைக்கும் போதுதானே மலருக்கும் இத்தனை காத்திரம், ஓரமாய் ஒளிந்து ஒளி விசாமல் மலர்ந்து மடியும் மலர்களுக்கு மகிழ்வு எப்படி......?

கௌரியின் மனம் கனதூரம் சென்றது. 'நான் ஓரமாய் ஒளிந்து கொள்ளவில்லையே? இந்த சமூக நிர்ணயிப்பில் நானுமொரு பங்காளிதானே? இந்த சமூக சதுராட்டத்தில் என்னுடைய அசைவுகளும் அங்கமாகின்றனவே. ஏன் எனக்கு மட்டும் இன்னும் ஒளியில்லை; திருமணவாழ்விற்கு வழியில்லை?' தனக்குள் குமைந்து குமுறினாள் கௌரி.

எனது நட்பை நாடிவந்தவர்களுக்கு என்னால் இடம் கொடுக்க இயலவில்லை. இதுவும் ஒரு சமூக அவஸ்தைதான். இன்றுவரை சமூகசர்ச்சைகளுக்கு நான் சரிப்பட்டு வராதவள், இதனால் எனக்கு சீரானவள், சிந்தை மிகுந்தவள், கள்ளமில்லாதவள், கற்பு நெறிதவறாதவள் என்றெல்லாம் வார்த்தை வர்ணனைகள் வந்துசேரும். இந்தப் போலி வர்ணனைகளையெல்லாம் போத்துக்கொண்டு ஒரு பொம்மையாக வாழ்ந்து மடிந்தால் இச் சமூகம் எவ்வளவு சந்தோசப்படுகின்றது. இத்துடன் ராசியில்லாதவள், காசில்லாதவள், வாய்ப்பில்லாதவள், வழியில்லாதவள் என்று வாய்கள் எத்தனையோ வந்தபடி சொல்லும்......

ஏமாற்றமே எண்ணங்களில் ஏறிட, கண்ணயர்ந்தாள் கௌரி.

காலங்கள் கழிந்தன.

★ ★ ★


மனிதன் எத்தனையோ அவஸ்த்தைகளை அனுபவிக்கிறான்; பிரசவிக்கின்றான். தான் காணும் உலகு ஒரு பூச்சியம் என்பதை அவன் புரிந்துகொள்வதில்லை. எல்லாக் கொட்டங்களும் ஒரு

(XV ஆம் பக்கம் பார்க்க)

**- மானியூர் ரட்ணேஸ் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டங்களை நிரப்புங்கள்!



இந்தச் சங்கிலித் தொடர் கட்டடங்களை நிரப்ப நீங்கள் சிரமப்பட வேண்டாம். மேலிருந்து கீழ் வரிசைக்கான குறிப்புகளை மட்டும் வைத்துக்கொண்டு உரிய சொற்களைக் கண்டுபிடித்து நீங்கள் நிரப்பினால் போதும். இடமிருந்து வலமான சொற்கள் தாமாகவே பொருந்தி விடுவதைக் காண்பீர்கள்! எல்லாமே மூன்றெழுத்துச் சொற்கள்தான் என்பதை மறந்து விடாதீர்கள்.

மேலிருந்து கீழ்:-

1. கூடுதல்.
2. நாள்.
3. தடி.
4. தொழில் நிலை.
5. வாழை நார்.
6. அம்பு எய்வது இதனால்.
7. குதிரை.
8. சோற்றுக்கு சேர்த்து உண்பது.
9. குழந்தை அழும்போது வருவது.
10. கோவலன் மயங்கியது இவளிடம்.
11. தரி.
12. பகு, பத உறுப்பில் ஒன்று.
13. வயிற்றுக்குப் பின்புறம்.
14. வெட்டினால் வருவது.
15. சிறுகலசம்.

விடை XV ஆம் பக்கத்தில்)

# நவரத்தினங்களைக் கண்டுபிடியுங்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வை | டூ | ரி | ய | ம் | கோ |
| ர | து | ம் | நீ | மா | மே |
| ம் | த் | ள | ல | ணி | த |
| க | மு | வ | ம் | க் | க |
| பு | ஸ் | ப | ரா | க | ம் |
| ம | ர | க | த | ம் | து |

இந்த அட்டவணைக்குள் இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, கீழிருந்து மேலோ, மேலிருந்து கீழோ, குறுக்காகவோ ஒன்பது (நவ) ரத்தினங்களின் பெயர்கள் ஒளிந்துள்ளன. அவற்றைக் கண்டு பிடித்து வட்டமிடுங்கள் பார்க்கலாம்.

— சா. இரஞ்சினி. —

(விடை XV ஆம் பக்கத்தில்)

# கணக்குப் புதிர்

சுரேஷின் வயது ரமேஷின் வயதைபபோல் இரு மடங்கு. பத்து வருடங்களுக்கு முன் இந்த வித்தியாசம் நான்கு மடங்காக இருந்தது. இருவருக்கும் இப்போது வயது என்னவென்று உங்களால் கூற முடியுமா?

(விடை XV ஆம் பக்கத்தில்)

# பலசாலி எறும்புகள்



சிறிய சில எறும்புகள் சேர்ந்து தம்மிலும் விட பாரமான சில பொருள்களை இழுத்துச் செல்வதைப் பார்த்திருப்பீர்கள். அது எப்படி?

எறும்பு தன்னைப் போல ஐம்பது மடங்கு எடையுடைய பொருள்களையும் சுமக்க வல்லது. ஆச்சரியமாக இருக்கின்றதா?


மனித உடலில் தசைகள் வெறும் எண்ணூறுதான். ஆனால் எறும்பில் அதைப் போல பலமடங்கு எண்ணிக்கையில் நுண்ணிய தசைகள் உள்ளன. அவை நமது தசைகளைப் போல எளிதில் களைப்பதில்லை.

எறும்புக்கு ஆறு கால்கள் இருப்பதால் அது இழுத்துச் செல்லும் எடை அதன் உடல் முழுவதும் பரவுகின்றது. மனிதனைப் பொறுத்தவரை நமது இரண்டு கால் அமைப்பே கனமான சுமையை நாம் சுமப்பதற்குத் தடையாக உள்ளது.

உருவம் பெரியதாக இருந்தால் பலம் அதிகமாக இருக்கும் என்பது நம் அனுபவம்; எதிர்பார்ப்பு. ஆனால் உடல் பருமன் கூடும் போது அதே விகிதத்தில் உடலின் எடை மட்டுமே கூடுகின்றது; ஆற்றல் அதே விகிதத்தில் கூடுவதில்லை.

எறும்பின் உடலோடு ஒப்பிடும் போது மனிதனின் அல்லது யானையின் எடை பல லட்சம் மடங்கு அதிகம். ஒரு கற்பனைக்கு மனிதன் அளவுக்கு — அல்லது யானை அளவுக்கு— எறும்பு வளர்ந்து விட்டால் இப்போது உள்ளது போல தன்னை விட ஐம்பது மடங்கு எடையுடைய பொருளை அதனால் நகர்த்த முடியுமா? நிச்சயமாக முடியாது.

உடலின் எடை ஒரு வரம்புக்கு மேல் அதிகரிக்கும் போது பலத்தின் அளவு கூடுவதில்லை. மாறாக குறையவே செய்கின்றது.




# தமிழ் பேசு!

தமிழ் பேசம்மா தமிழ் பேசு!
தமிழன் மகளே தமிழ் பேசு!
அமுதச் சுவைகள் குதிபோட
அனைவரிடத்தும் தமிழ் பேசு!

குழந்தை மழலைத் தமிழ் பேசு!
குறும்புப் பருவத் தமிழ் பேசு!
அழகுச் சிலையாய் நீ நின்றே
அள்ளி அள்ளித் தமிழ் பேசு!

பள்ளியில் நீயும் தமிழ் பேசு!
பாடம் அனைத்திலும் தமிழ் பேசு!
கல்வி நிலையம் சுடர் வீசக்
கருத்துச் செறிந்த தமிழ் பேசு!
தமிழ் பேசம்மா தமிழ்பேசு

—பா. வசிகரன்—
(மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.)

# எங்கள் வீட்டுப் பூனையார்

எங்கள் வீட்டுப் பூனையார்
எங்கிருந்தோ வந்தவர்
கறுப்பு நிறப் பூனையார்
கள்ள முழிப் பூனையார்

பானை சட்டி தட்டியே
பாலைக் குடிக்கப் பார்க்கிறார்
பாய்ந்து பரணில் ஏறியே
பாலை நக்கி சுவைக்கிறார்

நல்ல நல்ல பூனையார்
நான் வளர்க்கும் பூனையார்
நான்கு குட்டி போட்டுமே
நல்லாய் வாழ்ந்து வருகிறார்

—ச. உதயணன்—
(தரம் 7,
சாவகச்சேரி இந்துக்கல்லூரி.)

# சொற்றேடல்

கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை வைத்துக் கொண்டு 21 கட்டங்களிலும் உள்ள சொற்களை நிரப்ப வேண்டும். ஒவ்வொரு சொல்லிலும் வரவேண்டிய ''கு'' என்ற எழுத்து அந்தந்த பெட்டிக்குள் காட்டப்பட்டுள்ளது.

உதாரணமாக முதலாவது கட்டத்துக்குரிய சொல் 'குடித்தல்'. எங்கே உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கு | | | | |
| 2 | | கு | | | |
| 3 | | | கு | | |
| 4 | | | | கு | |
| 5 | | | | | கு |
| 6 | | | | கு | |
| 7 | | | கு | | |
| 8 | | கு | | | |
| 9 | கு | | | | |
| 10 | | கு | | | |
| 11 | | | கு | | |
| 12 | | | | கு | |
| 13 | | | | | கு |
| 14 | | | | கு | |
| 15 | | | கு | | |
| 16 | | கு | | | |
| 17 | கு | | | | |
| 18 | | கு | | | |
| 19 | | | கு | | |
| 20 | | | | கு | |
| 21 | | | | | கு |

1. அருந்துதல்.
2. பிரித்தல்.
3. குடித்தல்.
4. கைகூப்பு.
5. எண்ணெய் வித்து
6. பறவை.......
7. கரைதல்.
8. சொரிதல்.
9. பாய்தல்.
10. உட் செலுத்துதல்
11. இணக்கமாதல்
12. இடி......
13. கால்வாசி அளவு.
14. அவல அடையாளம்.
15. டக்கிப் பேசல்.
16. மேனகைக்கும் விசுவாமித்திரருக்கும் பிறந்தவள்.
17. பூசை செய்பவர்.
18. இராமனின்பெயர்.
19. உருவாக்குதல்.
20. பிரகாசிக்கும்.
21. தண்டிகை.



# மூளைக்கு வேலை!

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | | 1 | 1 | 2 | 4 | 6 | 5 | 2 |
| | | 0 | 3 | 7 | 8 | 1 | 9 | 1 |
| 2 | 1 | 9 | 2 | 1 | 2 | 2 | 0 | 4 |
| 7 | 3 | 1 | 5 | 6 | 1 | 2 | 3 | 2 |
| 0 | 2 | 2 | 1 | 4 | 3 | 6 | 1 | 9 |
| 4 | 1 | 9 | 2 | 8 | 2 | 4 | 2 | 8 |
| 2 | 3 | 2 | 0 | 1 | 7 | 3 | 1 | 2 |
| 1 | 2 | 1 | 7 | 5 | 9 | 2 | 6 | 1 |
| 2 | 5 | 2 | 3 | 2 | 1 | 5 | 3 | 2 |
| 1 | 8 | 6 | 1 | 0 | 2 | 8 | 2 | 1 |
| 3 | 0 | 2 | 2 | 1 | 9 | 1 | B | |
| 4 | 2 | 1 | 7 | 3 | 2 | 8 | | |

இங்கே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் சிறுவன் இருக்குமிடம் Aயிலிருந்து புறப்பட்டு சிறுமி இருக்குமிடம் B வரை ஒவ்வொரு எண்ணுள்ள கட்டத்தையும் தாண்டிச் செல்ல வேண்டும்.

மேலே, கீழே, குறுக்கே என்று எத்திசையிலும் செல்லலாம். ஆனால் தாண்டிச் செல்லும் பாதையிலுள்ள கட்டங்களினுள் காணப்படும் எண்களின் மொத்தக் கூட்டுத் தொகை 100 ஆக இருக்க வேண்டும். முயன்று பாருங்கள் பார்க்கலாம்!

(விடை XV ஆம் பக்கம் பார்க்க)

# மகத்தான மூன்றுகள்

★ மதிக்க வேண்டிய மூன்று:-
மூத்தோர், மார்க்கம், சட்டம்.
★ நோக்க வேண்டிய மூன்று:-
நேர்மை, தூய்மை, கடினஉழைப்பு.
★ போற்ற வேண்டிய மூன்று:-
அறிவு, அழகு, பண்பு.
★ பேணி வளர்க்க வேண்டிய மூன்று:-
திருப்தி, தைரியம், மனமகிழ்ச்சி.
★ தவிர்க்க வேண்டிய மூன்று:-
புகைத்தல், மதுவருந்தல், சூதாடல்.
★ அடக்கவேண்டிய மூன்று:-
நா, சோதனை, கோபம்.
★ கட்டாயம் கவனிக்க வேண்டியமூன்று:-
பேச்சு, நடைமுறை, செயல்கள்.
★ பேண வேண்டிய மூன்று:-
வாக்குறுதி, நட்பு, அன்பு.
★ தப்பித்துக்கொள்ள வேண்டிய மூன்று:-
தீயஎண்ணம், பொறாமை, பிடிவாதம்.
★ அஞ்ச வேண்டிய மூன்று:-
களவு, கொலை, பொய்.
★ ஒழிக்க வேண்டிய மூன்று:-
திருட்டு, சோம்பல், பயம்.
★ எதிர்கொள்ள வேண்டிய மூன்று:-
கவலை, பயம், மரணம்.
★ விரும்ப வேண்டிய மூன்று:-
கருணை, நற்குணம், மனஅமைதி.
★ வெறுக்க வேண்டிய மூன்று:-
பொறாமை, அநீதி, வாக்குமீறல்.
★ போரிட வேண்டிய மூன்று:-
தேசம், உரிமை, கண்ணியம்.

— பி. பார்த்திபன் —

# வீடு எங்கே?

வண்ணக் கிளியே வீடெங்கே?
மரத்துப் பொந்தே என்வீடு.

தூக்கணங் குருவியே வீடெங்கே?
தொங்குது மரத்திலே என்வீடு.

கறுப்புக் காகமே வீடெங்கே?
கட்டுவேன் மரத்தில் என்வீடு.

பொல்லாப் பாம்பே வீடெங்கே?
புல்லும் புதருமே என்வீடு.


கடு கடு சிங்கமே வீடெங்கே?
காட்டுக் குகையே என்வீடு.

நகரும் நத்தையே வீடெங்கே?
நகருதே என்னுடன் என்வீடு.

— சி. காஞ்சனா —

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆந்தையும் கழுகும்



பாழடைந்த கோபுரம் ஒன்றின் உச்சியில் ஓர் ஆந்தை வாழ்ந்து வந்தது. அதற்கு நிறையக் குஞ்சுகள் இருந்தன. அம்மா ஆந்தைக்கு எதையும் மிகைப்படுத்திப் பேசும் குணம். அதோடு தற்பெருமை வேறு.

ஒருநாள் அந்தக் கோபுரத்திற்கு ஒரு கழுகு வந்தது. அந்த இடம் அதற்குப் பிடித்து விட்டது.

''நண்பா, நானும் இங்கேயே தங்கிவிடுகிறேனே?'' என்று ஆந்தையிடம் கேட்டது.

''தாராளமாக இருக்கலாம். ஆனால், நீ என் குஞ்சுகளைக் கண்டால் இரையாக்கிக் கொண்டு விடுவாயே?'' என்றது ஆந்தை.

**ஈசாப் நீதிக்கதைகள்**

''நண்பனாகி, இங்கேயே தங்க ஆரம்பித்து விட்ட பிறகு, உன் குஞ்சுகளைத் தின்பேனா? உன் குஞ்சுகள் எப்படி இருக்கும் என்று கூறு. அவைகளைப் பார்த்தால் அடையாளம் கண்டுபிடித்து தீங்கு விளைவிக்காது காவலாக இருப்பேன்'' என்றது கழுகு.

''என் குஞ்சுகள் பேரழகு வாய்ந்தவை. அவைகளின் நெற்றி, மூக்கு, கண்கள், காதுகள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அத்தனை அழகு. அவை சுத்தினால் இன்று முழுவதும் கேட்டுக்கொண்டே இருக்கலாம்'' என்று வழக்கப்படி மிகைப்படுத்திப் புகழ்ந்தது ஆந்தை.

கழுகு வெளியே போய்விட்டு வந்தபோது ஆந்தைக் குஞ்சுகள் வெளியே வந்து விளையாடிக்கொண்டிருந்தன. அவைகளைப் பார்த்த கழுகு, ''இத்தனை அழகற்ற குஞ்சுகள் ஆந்தையின் குஞ்சுகளாக இருக்கா'' என்று எண்ணி அவைகளை அடித்து இரையாக்கிக் கொண்டது.

ஆந்தை வந்து கதறியது.

''உன் குஞ்சுகள் அழகற்றவை என்று கூறியிருந்தால் தின்றிருப்பேனா? தவறு என்னுடையதில்லை. நீ மிகைப்படுத்தி உன்குஞ்சுகள் அழகானவை என்று கூறினாய். மிகைப்படுத்தும் குணத்தின் விளைவே இது'' என்றது கழுகு.

எதையும் மிகைப்படுத்தினால் தீங்கில்தான் முடியும்! ★

## வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம்; அதை நழுவவிடாதீர்கள்.
வாழ்க்கை ஒரு பயணம்; அதை சென்று முடியுங்கள்.
வாழ்க்கை ஒரு விடுகதை; அதை விடுவியுங்கள்.
வாழ்க்கை ஒரு விளையாட்டு; அதில் ஈடுபடுங்கள்.
வாழ்க்கை ஒரு போராட்டம்; அதை வென்று காட்டுங்கள்
வாழ்க்கை ஒரு வெகுமதி; அதை ஏற்றுக் கொள்ளுங்கள்.
வாழ்க்கை ஒரு போட்டி; அதில் வெற்றி பெறுங்கள்.
வாழ்க்கை ஒரு கலை; அதை அழகுபடுத்துங்கள்.
வாழ்க்கை ஒரு வேதனை; அதை தாங்கிக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சவால்; அதை எதிர்நோக்குங்கள்.
வாழ்க்கை ஒரு சோகம்; அதற்கு மனம் தளராதீர்கள்.
வாழ்க்கை ஒரு பிரச்சினை; அதற்குத் தீர்வுகாணுங்கள்.

— மேனகா வேலும்மயிலும் —
(தரம் 11, பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் பாடசாலை)

## நொடிப்பொழுது

1 எட்டுக்கால் ஊன்றி, இருகால் படமெடுத்து, வட்டக் குடைபிடித்து, வாறாராம் வன்னியனார். அவர் யார்?
2. அடித்தால் வலிக்கும்; கடித்தால் இனிக்கும். அது என்ன?
3. ஆயிரம் பேர் அணிவகுப்பிலும் பொட்டுத்தூசி கிளம்பாது. அவர்கள் யார்?
4. ஈக்குப்போல தம்பிக்கு பந்துபோல தலை. அதுஎன்ன?
5. தங்கையின் தலையிலே பாம்பு. அது என்ன?
6, ஏறுவான்; இறங்குவான்; தாகத்தைத் தணிப்பான். அவன் யார்?

— சேபியா பரமானந்தம் —
(தரம் 5, உடுவில் மகளிர் கல்லூரி)

### விடைகள்

1. நண்டு. 2. கரும்பு. 3. எறும்பு. 4. தீக்குச்சி. 5. [illegible] 6. துலா.

## தகவல் துளிகள்

### காகிதத்தைக் கிழிக்கும் போது ஒலி எழுவது ஏன்?



பொதுவாக காகிதங்களைப் கிழிக்கும் போது ஒலி எழுகின்றது. ஆனால் நனைந்த தாளைக் கிழித்தால் சத்தம் எழுவதில்லை. இது ஏன்?

அனேகமாகக் காகிதங்கள் மரக் கூழிலிருந்து பெறப்பட்ட இழைகளாலோ அல்லது செயற்கை இழைகளாவோ உருவாக்கப்படுகின்றன. காகிதங்களைத் தயாரிக்கும் போது இவ்விழைகள் நெருக்கப்பட்டு ஒன்றின் மேல் ஒன்று வைக்கப்பட்டு ஐதரசன் இணைப்பினால் பிணைக்கப்படுகின்றன. காகிதத்தைப் பிடித்துக் கிழிக்கும் போது இழைகளைப் பற்றிக் கொண்டிருக்கும் ஐதரசன் பிணைப்பு துண்டாக்கப்படுகிறது. இதனால் இழைகள் அதிர்வடைந்து ஒலியை எழுப்புகின்றன.

ஆனால் நனைந்த காகிதத்தைக் கிழிக்கும் போது ஒலி எழும்பாது. ஏனெனில் நீர்ம மூலக் கூறுகளை இழைகள் உட்கவர்ந்து பெருக்கமடைந்து ஒட்டிக் கொள்கின்றன. இதனால் மூலக்கூறுகள் அதிர்வடைவதில்லை. ஆகவே ஒலி எழும்புவதில்லை.

### குழந்தைகளை பீடிக்கும் தடிமன்



பெரியவர்களைக் காட்டிலும் சிறியவர்களே அதிகம் தடிமனால் பாதிக்கப்படுகின்றார்கள். ஏன்?

தடிமனுக்கு 'வைரஸ்' என்னும் நுண்ணுயிர்க் கிருமிகளின் தொற்றுதலே காரணம். இத்தகைய நூற்றுக்கு மேற்பட்ட கிருமிகள் தடிமனை ஏற்படுத்த வல்லன.

நாம் வளரும்போது ஒவ்வொரு தடவையும் இவ்வுயிர்களால் தாக்கப்படும் போது அதற்கு ஏற்ப எதிர்ப்புச் சக்தியைப் பெறுகிறோம்.

நன்கு வளர்ந்த மனிதர் இதுபோன்ற பல வைரஸ்களின் எதிர்ப்புச் சக்தியைப் பெற்றிருப்பதால் தன்னைத் தற்காத்துக் கொள்கிறார். ஆனால் வளரும் குழந்தைகளிடம் அத்தகைய எதிர்ப்புச் சக்திகள் கிடையா. அதனால் அவர்கள் அடிக்கடி பாதிக்கப்படுகின்றார்கள்.

# ஊரும் உடும்பு

பல்லி, அறணை, ஓணான் போன்ற ஊர்வன பிரிவைச் சேர்ந்த பிராணி உடும்பு.

உடும்பைத் தெரியாதவர்கள் இங்கு இருக்க மாட்டார்கள் என்றே கூறலாம்.

ஆபிரிக்கா, அரேபியா, தெற்காசிய, சொலமன் தீவுகள், பப்புவா நியூகினி, ஆஸ்திரேலியா போன்ற இடங்களிலும் உடும்புகள் அதிகளவில் காணப்படுகின்றன.

உடும்பின் உடல் கருமையாகவோ அல்லது பழுப்புநிறமாகவோ இருக்கும். அத்துடன் உடலின் மேற்புறத்தில் மஞ்சள் நிறக்கோடுகள் அல்லது புள்ளிகள் காணப்படும்.



உடும்பின் உடல் சிறிய செதில்களினால் மூடப்பட்டிருக்கும். தலையும் கழுத்தும் நீண்டவையாக இருக்கும்: நாக்கு மிகவும் நீளமானதாகவும் வெளியே நீட்டக் கூடியதாகவும் பாம்பைப்போல இரு பிளவுகளைக் கொண்டதாகவும் இருக்கும். குட்டையான கால்கள் மிகவும் வலிமை பொருந்தியவை. அத்தோடு விரல் நகங்களும் உறுதியானவை.

**பிராணிகள் உலகம்**

உடும்பின் வால் நீளமாகவும் சவுக்குக்கு ஒப்பானதாகவும் காணப்படும்.

உடும்பு நீரிலும் நிலத்திலும் மரங்களிலும் சஞ்சரித்துத் திரிவதை காணமுடியும்.

நீரில் நீந்திச் செல்லக் கூடியவாறு அதன் வாற்பக்கங்கள் அழுந்தித் தட்டையாகக் காணப்படுகின்றது.

கிழக்கிந்தியத் தீவுகளில் சுமார் பத்தடி நீளமுடைய— இராட்சத — உடும்பு இனங்கள் காணப்படுகின்றன.

நம் நாட்டில் சஞ்சரிக்கும் உடும்புகள் பொதுவாக நான்கு அடி நீளம் வரை வளரக் கூடியவை. மரப்பொந்துகள், மண்புற்றுகள் போன்றவற்றில் இவை ஒளிந்திருக்கும்.

உடும்பு ஆபத்தில் சிக்கிக் கொண்டால் கால்களை நீட்டி, உடம்பை உயர்த்தி, உப்பிக் கொண்டு வாலைச் சவுக்குப் போல அசைத்துக் கொண்டு மற்றையோரைப் பயமுறுத்துவதுபோல் மிகவும் கெட்டித்தனமாக நடிக்கும்.

பல்லால் ஒன்றைக் கடித்தால் அரை மணித்தியாலம் வரை கடியைவிடாமல் பிடித்து வைத்திருக்கும் விடாப்பிடித்தன்மையும் அதற்கு உண்டு.

உடும்பு விஷங்கொண்டது எனக் கருதுவது தவறாகும்.

உடும்பு ஒருமாமிசப்பட்சணி. தன்னால் பிடிக்கக் கூடிய உயிருள்ள பூச்சிகள், புழுக்கள், வேறு ஊர்வன மற்றும் பறவைகள், சிறு பாலூட்டிகள் என்பவற்றுடன் இறந்த பிராணிகளின் உடலையும் இது உட்கொள்ளும். பறவைகளின் முட்டைகளையும் விழுங்கிவிடும்.

'உடும்புப் பிடி' எனும் வார்த்தை பிரயோகம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம் அல்லவா?

உடும்பின் கால் நகங்களுக்கு சுவர் முதலியவற்றைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ளும் விஷேட தன்மை உண்டு. இதனால் தான் போர்வீரர்களும், கள்வர்களும் சுவர் மற்றும் கோட்டை மதில்களில் ஏறுவதற்கு உடும்பை ஒரு கருவியாகக் கையாண்டு வந்திருக்கின்றார்கள். உடும்பின் இடுப்பில் கயிற்றைக் கட்டி மதில்மேல் அதனை ஏறவிடுவார்கள். மதிலின் உச்சியை உடும்பு உறுதியாகப் பற்றிக் கொண்டதும் அந்தக் கயிற்றின் வழியே ஏறி இலகுவாகச் சுவரைக் கடக்க முடியும். உடும்பு இறைச்சி மனிதருக்கும் உணவாகின்றது. அது மென்மையானதாகவும் சுவையானதாகவும் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

உடும்பு இறைச்சிக்கு 'ஊனொட்டி' என்ற தனிப் பெயரே தமிழில் உண்டு. இது 'கீல்' வாதம் முதலிய நோய்களுக்கு மருந்தாகவும் பயன்படுகின்றது.

முற்காலத்தில் உடும்பின் தோலில் ஆடை தயாரித்திருக்கிறார்கள். தற்காலத்தில் இதன் தோலினால் அழகிய கலையம்சம் கொண்ட சித்திரங்கள் மற்றும் கைப்பணிப் பொருள்கள் ஆக்கப்படுகின்றன.

கீழைத்தேய இசைக்கருவியான உடுக்கும் கூட இத்தோலினாலேயே உருவாக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரப்பான்பூச்சி...

(VI ஆம் பக்கத் தொடர்)

எனக்குத் தெரியாது. இந்தப் பெண் வாரத்திற்கு ஒரு கடிதம் எழுதுவதும் அக்கடிதத்திற்காக அவன் காத்திருப்பதும் எனக்குத் தெரியும். அவன் தன் அந்தரங்கங்களை எப்போதும் கூறியதில்லை. பிறரின் அந்தரங்கங்களையும் அறியும் ஆவலும் எனக்கில்லை.

''அவர் என் மாமி பிள்ளை சேர். நாங்க இருவரும் ஒருவரை ஒருவர் நேசித்தோம். எனக்கு மருத்துவத்துறைக்கு யூனிவேசிற்றி அனுமதி கிடைத்தும் நான் அவருக்காக அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருக்குக் கிடையாதது எனக்கேன்? அவர் வெளிநாட்டிற்குப் போனார். தன் சகோதரிகளுக்குக் கலியாணம் கட்டிவைத்தார். நான் அவற்றினைத் தடுக்கவில்லை, முல்லைத்தீவில் நிகழ்ந்த குண்டுவீச்சில் அவருடைய தாயும், தம்பிமாரும் பலியாகி விட்டினம். அதைக் கேள்விப்பட்டு அவர் ஓடிவந்தார். அந்த இழப்பால், அவர் மனமுடைந்து போனார். என்னுடன் மனந்திறந்து பேசுவதில்லை. ஒரு நாள் காணாமற்போனர். விசாரித்துப் பார்த்தோம். அவர் இங்கு இருப்பது தெரிந்தது. ஒன்றிற்கும் பதிலில்லை. கடிதங்கள் எனக்குத் திரும்பி வராமையால் அவை அவர் கையில் கிட்டுகின்றன என்பதைத் தெரிந்துகொண்டன்.''

அவள் நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். கண்களில் சோகத்தின் திரள் கவிந்திருந்தது.

''அவரை என்னிடம்தாருங்கள் சேர்...''

நான் துடித்துப்போனேன். அவள் விம்மியபடி தலையைக் குனிந்து கொண்டாள்.

தவநாதனும் ஏனைய இருவரும் வருவது தெரிந்தது.

''அதோ தவநாதன் வருகிறார். அவனிடமே பேசிக் கொள் அம்மா.''

அவள் ஆவலுடன் ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள். கதிரையை விட்டெழுந்து வெளியில் ஒடிச்சென்றாள்.

அந்தப் பெண்ணின் காதல் எனக்குப் புரிந்தது.

ஒரு பக்கச் சுவரிலிருந்த அந்தக் கரப்பான் மறுபக்கத்திற்குப் பறந்து சுவரைப் பற்றிக்கொண்டது. தன் உணர்கொம்புகளை வாயிலுள்ள தாடைகள் வழியாக உருவித் துடைத்துக்கொண்டது. அது என்னைக் கேலி செய்வதுபோலப் பட்டது. தொலைந்துபோ எனச் சபிப்பதைத் தவிர எனக்கு வேறு மார்க்கம் தெரியவில்லை.

இருந்தபடியே முற்றத்தைப் பார்த்தேன். சாந்தியும் தவநாதனும் வேப்பமரக்குந்தில்அமர்ந்திருப்பதும் அவன் தலையைக் குனிந்தபடி அமர்ந்திருக்க அவள் விம்மலுடன் ஏதோ பேசிக்கொள்வதும் தெரிகிறது. அந்தப் பெண்ணிற்காக நான் இரக்கப்பட்டேன். என்றாலும் தவநாதன் கல்நெஞ்சனாக இருக்கக் கூடாது. யுத்தம் என்பது எத்தனை குடும்பங்களைக் காவு எடுத்திருக்கின்றது? எத்தனை குடும்பங்களின் அமைதியைச் சுடுகாட்டிற்கு அனுப்பி வைத்திருக்கின்றது?

இழப்புகளை எண்ணியபடி வாழவேண்டியவர்கள்.

அந்தப்பெண் அழுதபடி எழுந்திருந்தாள். பின்னர் அவசரமாக வெளியேறுவது தெரிந்தது. தவநாதன் வெகுநேரம் அப்படியே அமர்ந்திருந்தான். அவனுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும்.

எழுந்து அவனிடம் வரப் புறப்பட்டபோது முகத்தில் வீசியடித்தபடி கரப்பான் மறுபக்கச் சுவரிற்குத் தாவியது. மூதேசி...சனியன்.

அவன் அருகில் சென்று அமர்ந்தேன். அவன் என்னைக் கவலையுடன் பார்த்தான்.

''தம்பி. இது உனக்கே நல்லாப்படுகிறதா? அந்தப் பெண் பாவம். உனக்காகக் காத்திருக்க...இப்படி நடந்துகொள்ளலாமா? அந்தப் பெண்ணிற்கு உன் ஆதரவு தேவை''.

''தெரியும் ஐயா.''

''அப்ப அவளைக் கலியாணம் செய்து கொள்...''

அவன் என்னைக் கவலையுடன் ஏறிட்டான்.

''எயிட்ஸ் வைரஸ் ஒருவரின் உடலில் புகும்போது வாழ்நாள் முழுவதும் அது தங்கிவிடுகிறது. சாந்தியக் கரப்பான் போல...''

''இந்த உதாரணம் சரியாகப்படவில்லை.''

என் மூளைக்குள் பொறி தட்டியது. தவநாதன் என்ன சொல்ல வருகிறான்? அவனுடைய பேச்சுக்களின் அர்த்தங்கள் புரிபடத் தொடங்கின. அவனும் மாதவனைப் போல ...வசந்தகுமார் போல... அதனால்தான் அவன் அடைக்கலம் தேடி இங்கு வந்தானா? தன் பணத்தை வாரிச் செலவிடுவதும் அதற்காகவா? நான் அவனை ஏறிட்டுப் பார்த்தேன். மங்கிய மாலைவெளிச்சத்தில் அவன் உடல் முழுவதும் கரப்பான்பூச்சிகள் மொய்த்திருப்பதாக ஒரு கணம் எனக்குத் தெரிந்தது. கண்ணாடியைக் கழற்றித் துடைத்துவிட்டுக் கரத்தில் பற்றியபடி பார்த்தேன். கரப்பான் பூச்சிகள் மொய்த்திருந்தன.

சீச்சீ. என்ன பிரமை.

அவன் வானத்தை அண்ணார்ந்து பார்த்தான். வேப்பமரக் கிளைகளூடாக எதையோ தேடினான். வேப்பங்காற்றினை நன்றாக உள்வாங்கி நீண்ட பெருமூச்சொன்றினை விட்டான். இந்த வானம், இந்தக்காற்று, இந்த இயற்கை தனக்குக் கிடைக்காது போய்விடப் போகின்றதே என்ற பயம் அவன் முகத்தில் படர்ந்திருப்பதாக எனக்குப் பட்டது.

தனக்குள்ள நோயை மறைத்தபடி இவ்வளவு காலமும் எவ்வளவு அற்புதமாக நடந்துள்ளான்? அவனை அப்படியே விட்டுவிட்டு நான் என் அறைக்குத் திரும்பி வந்தேன்.

சுவரில் இருந்த கரப்பான் பூச்சியைக் காணவில்லை. எங்கு போயிருக்கும்? தவநாதன் முற்றத்தில் உலாத்துவது தெரிகின்றது. பச்சாதாபத்திற்குப் பதிலாக அவன் மீதுகோபந்தான் ஏற்பட்டது.

அவனைத்தேடி சாந்தி பின்னர் பல தடவைகள் இங்கு வந்திருப்பாள். அவளைப் பார்க்க எனக்குப் பரிதாபமாகவிருக்கும். அவனை நம்பி அவள் ஏமாந்து போனாள். ஊரில் அவனுக்காக அவள் காத்திருக்க அவன் வெளிநாட்டில் ஆடக்கூடாத ஆட்டமெல்லாமாடி நோயை உழைத்துக்கொண்டு வந்திருக்கிறான். அவனுக்காக அவள் எவ்வளவு தியாகம் செய்திருப்பாள்? அவன் வருகைக்காக அவள் எவ்வளவு தாகத்துடன், ஏக்கத்துடன் இங்கு காத்திருந்திருப்பாள்?

எல்லாவற்றையும் அவன் நாசமாக்கிவிட்டான். கணநேர சுகத்திற்காகத் தன்னைப் பலியாக்கிக் கொண்டான்.

அவனை மறந்துவிடு அம்மா என்று சாந்தியிடம் சொல்லிவிடவேண்டும்.

அவள் கெஞ்சி அழுவதும், அவன் தலையைக் குனிந்தபடி அமர்ந்திருப்பதும் வழக்கமாகிவிட்டன. இந்த நாடகம் தொடரக்கூடாது. ஒரு நாள் நான் முடிவு செய்தேன்.

சாந்தி அவனிடம் பேசிவிட்டு ஆறுதல் கிடைக்காமல் கண்ணீருடன் வெளியேறிய பின்னர் அவனிடம் நான் சென்றேன். வேப்பமரத்தடிக் குந்தில் அவன் அருகில் அமர்ந்து அவனை ஆழமாகக் குத்திக்கிளறிவிடுவதுபோலப் பார்த்தேன். அவன் என்னைக் கவலையோடு பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டான்.

''தம்பி, நீர் இப்படி நடப்பது எனக்குப் பிடிக்கவில்லை.''

''நான் சாந்தியை இனி இங்கு வரவேண்டாமென்று சொல்லிட்டன் ஐயா...''

''அதுதான் சரி. எல்லாவற்றையும் ஒளிக்காது கூறிவிட்டீரா?''

அவன் தலையை உயர்த்தி என்னை உற்றுப்பார்த்தான்.

''எல்லாவற்றையுமா?''

''பாவம் நல்ல பெண். அவளுடன் வாழ்வதற்கு உமக்குக் கொடுத்து வைக்கவில்லை. கொஞ்சம் மனவைராக்கியத்துடன் வெளிநாட்டில் இருந்திருந்தால்— உமக்காக ஒருத்தி ஊரில் காத்திருக்கிறாள் என்ற எண்ணம் இருந்திருந்தால்—இப்படி நோயை உழைத்துக் கொண்டு வந்திருக்கமாட்டீர்.

அவன் குந்தைவிட்டு வேகமாக எழுந்திருந்தான், நீண்ட பெருமூச்சு அவனை மீறிக்கொண்டு வெளிப்பட்டது. முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான். உலாத்தினான். என்னிடம் ஏதோ சொல்ல விரும்புபவன் போலப்பட்டது.

வேப்பங் கிளைகள் சரசரத்தாடின. காற்றில் வெம்மை படர்ந்தது.

''நான் நீங்கள் நினைப்பது மாதிரி... அப்படியில்லை ஐயா...''

''அப்ப?...''

''நான் வெளிநாடு சென்றதும் சாந்தி சிங்கப்பூருக்கு வேலைபெற்றுச் சென்றாள்''

''ஏன்?''

''எனக்காகத்தான். பெண் சகோதரங்களுக்குச் சீதனம் தேடுவதற்காக நான் வெளிநாடு சென்றேன். அவள் எனக்கு உதவுவதற்காகத் தானும் வேலை செய்து உழைப்பதற்காகச் சிங்கப்பூர் சென்றாள்.''

அவன் இடையில் நிறுத்திவிட்டுச் செயலற்று நின்றான். விழிகள் நீரைச் சொரிவதைக் கண்டேன். குந்தில் அமர்ந்து முகத்தில் அறைந்தபடி, ''ஐயோ... கொடுமை'' என்று வாய்விட்டழுதான்.

''தம்பி தவநாதன்...''

''அங்கு அவளுக்கு வேலை வழங்கிய அயோக்கியனால் கற்பழிக்கப்பட்டாள்.''

வேப்பமரம் என்மீது பாறி விழுந்ததுபோல உணர்வு.

''தம்பி...''

''ஐயா! இந்த நாட்டில் இருநூற்றியறுபத்தாறு எய்ட்ஸ் நோயாளிகள் இருக்கின்றனர். அவர்களுள் அவளும் ஒருத்தி...''

முகத்தைத் தன்னிரு கரங்களில் புதைத்துக்கொண்டு அவன் குமுறிக்குமுறி அழுதான். தன் துயரமெல்லாவற்றையும் கரைத்து விடுவான்போல அழுது தீர்த்தான். அவனை அழவிட்டுவிட்டு ஆதரவோடு அவனைப் பார்த்திருந்தேன்.

அமைதியாக அவன் தோளில் கரம் பதித்தேன்.

அவன் தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்தான்,

''தம்பி, இப்போதுதான் உன்னுடைய பரிவு அவளுக்குத் தேவை.''

(யாவும் கற்பனை) ★

# சேவல்...

(VII ஆம் பக்கத் தொடர்)

சவாரி பொன்னம்பலம் பிள்ளை. இந்தச் சவாரி அவர் பெயருடன் எப்படி ஒட்டிக்கொண்டது என்றால் அது வேடிக்கையான கதை.

ஒருமுறை கலைப்பு வேட்டைக்குப் பொன்னம்பலம் பிள்ளையும் சேர்ந்து போயிருந்தார். அவரை ஒரு இறக்கக் காவலுக்கு விட்டிருந்தனர்.

''இப்ப எங்கை பண்டி வரப்போகுது''என நினைத்த பொன்னம்பலம்பிள்ளை ஆற அமர இருந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருக்க, அந்த நேரம் பார்த்து மைந்தன் பன்றியொன்று சும்மா வேல் வாற மாதிரி தெறித்துக்கொண்டு வந்திருக்குது.

நல்லாய் கிட்ட முட்ட வந்தபின்தான் பொன்னம்பலம்பிள்ளை பன்றியைக் கவனித்தார். கண்டவுடன் எழும்பி நின்று கூ...கூ... என்று கத்தவும், மிரண்ட பன்றி திரும்பிப் போகவும் பயந்து பொன்னம்பலம் பிள்ளையின் கால்களுக்கு நடுவால் பாய்ந்து ஓட, பயந்து போன பொன்னம்பலப் பிள்ளை செய்வதறியாது கால்கள் நடுங்க அக்கணம் பன்றியின் முதுகின் மேல் இருந்து விட்டார். பன்றி ஆளைச்சுமந்து கொண்டு ஓடவும் வழியினில் தென்னந்தோட்ட வேலி குறுக்கிட பன்றி அதனை இடிக்கும் போது பொன்னம்பலம் பிள்ளை வேலியில் தடுக்குப்பட்டு கீழே விழுந்து விட்டார். சிறிய சிராய்ப்புக்காயம் மட்டும்தான்.

இந்தக் கண்கொள்ளா அதிசயக் காட்சியை பின்னால் பன்றியை கலைத்துக் கொண்டு வந்தவர்கள் கண்டுவிட அன்றிலிருந்து பொன்னம்பலப்பிள்ளை சவாரி பொன்னம்பலப்பிள்ளையானார். பொன்னம்பலப் பிள்ளையை இந்தப்பாடு படுத்திய பன்றியை சேதுமாமா இரண்டு நாள் அலைந்து சுட்டு விட்டுத்தான் ஓய்ந்தார். அறுபது கிலோ இறைச்சி அதில் இருந்தது.

இப்படியெல்லாம் வேடுவர் தலைவனாக இந்த சேதுமாமாவிற்கு பல்லுக்கிதமான பருவத்தில் இருந்த சேவலில் காதல் வந்தது ஆச்சரியம் தான்.

காலையில் சேதுமாமா ஈஸிச் செயாரில் இருக்க,விஜயம் மாமி கோழி திறக்கும் நேரம் மயிலன் ஓடி வந்து செயாரின் சட்டத்தில் ஏறி நின்று செட்டை அடித்துக் கூவும் சேதுமாமா இதமாகத் தடவிக் கொடுப்பார்; பின் மேயப் போய் விடும்.

மயிலன் சேதுமாமாவுடன் ஒட்டிக்கொள்ள இன்னொரு காரணம் சேதுமாமா சாப்பிடும் நேரம் மயிலனுக்கென்று சாப்பாட்டை அள்ளி அள்ளிப் போட்டுப் பழக்கினபடியால் சரியாகப் பன்னிரண்டு மணிக்கு மயிலன் சேதுமாமா சாப்பிடும் விறாந்தைக்கு வந்து விடும். மாலை நேரங்களில் சேதுமாமா கிண்ணத்தில் ஏதேனும் அரிசி, குறுனி எடுத்து மயிலனுக்கு [illegible] மாகக் கொடுப்பார்.

இதனாலும் மயிலன் சேதுமாமாவின் முன்னாலும் பின்னாலும் திரியும். நாளடைவில் சேதுமாமாவும் மயிலனும் வலு ஐக்கியமாகி விட்டனர். 'மயிலன்' என்று சேதுமாமா குரல் கொடுத்தால் போதும். ஓடி வந்து ஈஸிச் செயாரின் சட்டத்தில் ஏறி நிற்கும்.

என்னமோ தெரியாது அதிகாலை 4. 30 மணிக்குச் சொல்லிவைத்தாற்போல் மயிலன் கூவும். அந்த இனிய நாதத்தினில் சேதுமாமா கண்விழி திறந்தருள்வார்.

''மணிக்கூடு பிழைச்சாலும் என்ரை மயிலன் பிழையான்'' சேதுமாமா பெருமையோடு சொல்வார்.

யாராவது மயிலினை விலைக்குக் கேட்டால் தொலைந்தீர்கள் போங்கள்.

''அந்தக் கதைக்கே இடமில்லை; அது நிக்குமட்டும் நிண்டு சாகிற நேரம் சாகட்டும்.''

இது சேதுமாமாவின் பதிலாக இருக்கும்.

★ ★ ★

மயிலன் தன் பேடைகள் அணி ஆடி சேதுமாமாவின் வீட்டுப் பக்கமாக உள்ள பனை வளவில் மேய்வது வழக்கம். அதிக நேரம் அங்கு மேய்த்துவிட்டு மாலைக் கருக்கலின்போதுதான் எல்லாமாகக் கூட்டுக்கு வரும்.

அன்றும் கூட மாலை நாலு மணி இருக்கும். பனம் வளவில் எல்லாக் கோழிகளும் மேய்ந்து கொண்டிருந்தன. என்ன கலிகாலமோ வீதியால் ஒரு டிரக்டர் வந்து கொண்டிருந்தது. பெட்டிக்குள் மூன்று பேர் இருந்த[illegible] வந்துவிட்டது.

என்னமோ கெட்டகாலம். அந்த நேரம் பார்த்து மயிலன் தறித்து விழுந்து கிடந்த பனம் குற்றி மீது ஏறி நின்று கூவத் தொடங்கியது. வீடு சேரும் நேரமல்லவா?

இதனை டிரக்டர் பெட்டிக்குள் இருந்த ஒருவன் கண்டு விட்டான். மயிலனின் தோற்றம் அவன் நாவினில் எச்சில் ஊறப்பண்ணியதால் டிரக்டரினை நிறுத்தும்படி கத்தினான். மூன்று பேரும் இறங்கினர். ஒருவன் கையில் கொட்டன் இருந்தது. மயிலனை அண்மித்தனர். மயிலன் எச்சரிக்கை அடைந்து ஓட எத்தனித்தது. அதற்குள் ஒருவன் எறிந்த கொட்டன் மயிலனின் கழுத்தைப் பதம் பார்த்தது. பாவம் மயிலன். சுழன்று விழுந்தது. செட்டைகள் படபடவென அடித்தன. ஒருவன் பாய்ந்து மயிலனை தூக்கினான். டிரக்டர் வேகமாகக் கிளம்பிப் போய்விட்டது.

மாலைக் கருக்கலுக்கு முன்பாக எல்லாக் கோழிகளும் திரும்பிவிட்டன. மயிலனை மட்டும் காணவில்லை. விஜயம் மாமிக்கு, மாமாவிற்கு சொல்லப் பயமாக இருந்தது.

''என்னப்பா மயிலனை காணேல்லை.''

''விசர் கதை கதையாதையும். வடிவாப்பாரும்.''

''இல்லை... மயிலன்... இல்லை...''

சேதுமாமாவும் விஜயம் மாமியும் மயிலனைத் தேடும் படலத்தை தொடங்கினர்.

எல்லா இடமும் தேடிவிட்டு பனம் வளவிற்கு வந்தனர்.

''அது நேரம் தப்பாது.என்னமோ நடந்திட்டது.''

விஜயம் மாமியின் குரலில் பதற்றம் தெரிந்தது.

''இல்லை அதுக்கு ஒண்டும் நடக்காது...''

பனம் வளவின் நடுவிற்கு வந்து விட்டனர். விஜயம் மாமி மயிலனின் செட்டைகள் சிதறிக் கிடந்ததை கண்டு திடுக்கிட்டுவிட்டா. அவவுக்கு விடயம் விளங்கி விட்டது. அதற்கப்பால் ஒரு கொட்டன் இருந்ததும் இன்னும் சன்றாகி விட்டது.

பின்னால் வந்த சேதுமாமா மனைவியை விலத்தி முன்னுக்கு வந்தவர், மயிலனின் பச்சை நிற செட்டையை கண்டு திகைத்தார்.

''விஜயம்...!'' அவர் குரல் தழுதழுத்தது. குனிந்து ஒரு செட்டையை கையில் எடுத்தார். அவர் கண்களில் இருந்து கண்ணீர் பெருகி வழிந்தது. அவர் மிகவும் தளர்ந்து போனார். பிரியக்கூடாத ஒன்றைப் பிரிந்தது போல் இருந்தது. மயிலன் ஏறிநின்ற கொட்டிலில் சாய்ந்து இருந்து கொண்டார். நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று அடைப்பது போல இருந்தது... கண்கள் செருகின......

விஜயம் மாமி அருகில் வந்து ''என்னப்பா... என்னப்பா... என்ன செய்யுது? இஞ்சாருங்கோ, இஞ்சாருங்கோ...''

சேதுமாமாவின் தலை விஜயம் மாமியின் மடியினில் மெதுவாக சாய்ந்தது.

''ஐயோ......''

விஜயம் மாமியின் அலறலால் அந்தப் பனை வளவு ஒரு கணம் அதிர்ந்தது.

(யாவும் கற்பனை) ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வி சனி | | | சந் |
| வெ | இராசிச் சக்கரம் | | ரா |
| சூ* கே புத | | | |
| | | செ | |

# இந்த வார [illegible] இராசி பலன்

## [30 - 01 - 1999 முதல் 05 - 02 - 1999 வரை]

மாற்றம்:

30-1-99 இல் புனர்பூசம்2ஆம் பாதத்தில்—மிதுனம் இராசியில் சந்திரன் நிற்கும்.

3-2-99 இல் கும்பத்தில்-புதன் மாறும்.

**அரசியலில் அரசியல்வாதிகள் மக்களுக்காக புதிய அணுகுமுறைகளை உருவாக்கலாம். சமயவாதிகள், புத்திஜீவிகளின் அணுகுமுறைகள் மாறலாம். தொழிலாளர்களும், மாணவர்களும் பல பிரச்சினைகளை உருவாக்க சந்தர்ப்பங்கள் ஏற்படும். இந்திய அரசியலில் தொடர்ந்து அரசுக்கு நெருக்கடிகள் ஏற்படும். அரசியல்வாதிகளிடையே கருத்து வேற்றுமைகள் அதிகரிக்கும். வடக்கிற்கும்—தெற்கிற்கும் இழுபறி, சட்டப்பிரச்சினைகள் ஏற்படும். அரசியல்வாதியான செல்வி ஜெயலலிதாவுக்கு ஆதரவு பெருகும். மேற்குலகில் அமெரிக்க ஜனாதிபதிக்கு நல்ல தல்ல. அரசுப் பீடங்களில் மாற்றங்கள் ஏற்படும். மத்திய கிழக்கில் விட்டு விட்டு யுத்த அபாயங்கள் தொடர இடம் உண்டு. கிழக்கு நாடுகளில் பொருளாதார அழுத்தங்களை மேற்கு நாடுகள் செயலாக்கும்.**

மேடம்: எதுவும் ஒருகணத்தில் மாறிவிடும் நிலைமை ஏற்படும். எமது விடா முயற்சி, புத்திசாலித்தனத்திலேயே எதுவும் தங்கியுள்ளது. தொழில் ஸ்தானத்தில் புதிய உத்வேகங்கள் ஏற்படச் செய்யும். உங்களின் நடவடிக்கைகளால் பல நன்மைகள் ஏற்படும். உங்கள் குடும்பத்தவர்களுக்கு கிழக்குத் திசைகளிலிருந்து செய்தி வரும்இருந்தஇடத்திலிருந்தே காரியங்களை கவனித்துவரும் உங்களுக்கு பலவிததொல்லைகள் அடிக்கடி இருந்தாலும் சமாளித்துக் கொள்வீர்கள். சாப்பாட்டைக் கட்டுப்படுத்துங்கள். மலச்சிக்கல், வயிற்றில் குழப்பம், வாய்வுத் தொல்லை, நெஞ்சுச்சளி, நெஞ்சு நோ என்பன அடிக்கடி கொடுக்க இடம் உண்டு. சனீஸ்வரன் தாக்கத்தால் கொடுக்கல் — வாங்கலில் கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம். குலதெய்வ வழிபாடு நன்மைதரும்.

★ அதிர்ஷ்ட நாள்; திங்கள், புதன், வெள்ளி.

இடபம்: இந்த யுத்தத்தால் தாயில்லாத பிள்ளைகள், தகப்பனை இழந்த மழலைகள், மனைவியில்லாத மணவாளர்கள், மனையாளர்களை படுகொலைக் களத்தில் இழந்த மனைவிகள் எத்தனை பேர்? இவர்களுக்கு அரசியல்வாதிகள் என்ன ஆறுதல் சொல்லப் போகிறார்கள் எனச் சிந்திக்கின்றீர்களா? காலம்தான் பதில் சொல்லவேண்டும். தவறுகள் — இழப்புக்களைச் சந்தித்தவர்களை மன்னித்தும்— ஈடுசெய்தும் வாழப்பழகிக் கொள்ளல் வேண்டும் என அடிக்கடி ஆறுதல் கூறுவீர்களே. ஆனால் உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் ஆறுதல் சொல்லமாட்டார்கள். எதிர்ப்பாலாரிடமிருந்து எதிர்ப்புக்கள் வரும். கவலை யார்வம் அதிகரிக்கும். படபடப்பு, கைகால்சோர்வு, நெஞ்செரிப்பு, வாய்வுத் தொல்லை என்பன தேடி வர இடமுண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.

மிதுனம்: மனிதர்கள் மரித்துப்போகலாம், ஆனால் மாறி மாறிவரும் பாச உறவுகள்தொடர்ந்தபடியேதான் இருக்கும் எனச் சாஸ்த்திரங்கள் சொல்லுகின்றன. மாறி மாறி உங்கள்மனமும் அலைந்தபடிதான் இருக்கும். அதே போன்று பகைமை வந்த பாசமொன்று தேடி ஓடிவரும் காலமாக இருக்கும். தொழில் ஸ்தானத்தில் மன்னிக்கும் சுபாவம் அவசியமாகும். மேலதிகாரிகளால் கண்டிப்புக்குள்ளாவீர்கள். நாரிவலி, முதுநோ, தலைவலி, வாத விறைப்பு, கிருமித்தாக்கம், சளித்தொல்லை என தொல்லைகள் கொடுக்கும். அடிக்கடி இரட்டை மனம்ஏற்படும். கூடிவரும் குடும்ப உறவில் இரட்டை நிலைவந்தால் கலகத்திற்கு குறைவிருக்காது. எல்லாவற்றுக்கும் எமது மனமே காரணமாகும். எனவே சலனப்படாமல் நிதானமாக இருக்க முயற்சியுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, புதன், வெள்ளி.

கடகம்: மனித உணர்வுகள் எல்லாம் காதலும் அல்ல; எல்லாக் காதல்களும் கல்யாணத்தில் முடிபவையும் அல்ல. உடல் அளவில் ஏற்படும் காதலை நீங்கள் மதிப்பதும் இல்லை. ஓடி ஓடி உதவினீர்கள். தேடிவரும் உறவு ஒன்று சீண்டிவிட்டுப் பார்க்கும் காலம். தொழில் ஸ்தானத்தில் புதிய படைப்புக்கள், ஆதரவு நிலைகள், ஆதாயங்கள் பலதும் தந்து நிற்கும். முகஸ்துதிக்கு மயங்கி விடாதீர்கள். பித்தக் கொதிப்பு, தலைச்சுற்று, படபடப்பு, நாரி நோ, சலவருத்தம், மலச்சிக்கல் என்பன கொடுக்கும். உடல் நிலையில் கூடிய கவனம் செலுத்தவும். மாற்றங்கள், பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

அதிர்ஷ்டநாள்; சனி, புதன், வெள்ளி.

சிங்கம்: உறவுகள் மாறினாலும் உங்கள் உள்ளத்தை எவரும் மாற்ற முடியாது. பாத்திரம் அறிந்துதான் நீங்கள் பாகத்தை ஏற்பதுவும் உதவி செய்வதுவும் தங்கியுள்ளது. உலகத்தினருக்கு உதவிசெய்யும் உங்களை உங்கள் குடும்பத்தினர் குறைத்து மதிப்பிடுவார்கள். மட்டமான பேச்சுக்களால் பல கட்டங்களில் உள்ளம் வேதனைப்படும். தொழில் ஸ்தானத்தில் எதிர்பார்ப்புக்கள் அதிகம் இருக்கும். மேலதிகாரிகள் உதவுவார்கள். சக நண்பர்கள் பொறாமைப்படவோ, ஆத்திரப்படவோ செய்வர். கைகால் பிடிப்பு, நெஞ்சுநோ, மூலவருத்தம், உஷ்ண பீடைகள் அடிக்கடி இருக்கும். இடமாற்றம், பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்டநாள்; சனி, புதன், வெள்ளி.

கன்னி: சொந்தம் பந்தமெல்லாம் மாறிய நிலை எது? பக்திக்கும் சோதனை ஏற்படும். ஆனால் பின்பு நன்மைகள் அதிகரிக்கும் பலன்கள் காணப்படும். வாழ்க்கையின் சுமைகளை, துன்பங்களைச் சுமக்கக்கூடிய பக்குவநிலை எல்லோருக்கும் வருவதில்லை. எந்த நிலையையும் பதற்றப்படாமல் தாங்கிக் கொள்ளுங்கள். மிக விரைவில் கஷ்டங்கள் குறைந்து விடும். அதிக யோசனைகளால் வேதனைப் பட்டபடி இருக்காதீர்கள். வியாழன், சனீஸ்வரனுடன் 7 ஆம் இடத்தில் சேர்ந்திருப்பதனால் கொஞ்சம் ஆறுதல் கொடுக்கும். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். நரம்புத்தளர்ச்சி, மலச்சிக்கல், சளி, வாய்வு, வாதம் என வருத்தலாம். தெய்வ வழிபாடு உங்களுக்கு மிக முக்கியமாகும்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, புதன், வெள்ளி.

துலாம்: தரணி போற்றும் உங்களைத் தலை குனிய வைக்கும் ஒரு சிலரின் நஞ்சுப் பேச்சை நம்பி ஏமாறாதீர்கள். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி பூகம்பம் போல் பல பிரச்சினைகள் உருவாகும். உள்ளத்தில் கலை உணர்வு ஏற்படும். சகோதர பாசம் சச்சரவில் போய்விடாமல் பார்க்க வேண்டிய காலமாகும். பொருளால் பகைமை வரலாம். காணி, பூமி ஒன்றால் கடுகடுப்பாக இருப்பீர்கள். பந்தபாசமெல்லாம் பொருள் நிலைக்கும் காலம் வரையும்தான் என்பதைஉணரும் வேளையாகும். வயிற்றில் வருத்தம், தலைவலி, குடல்வருத்தம், விறைப்பு,

## [illegible] சஞ்சீவி

வாத உளைவு, சளி, மூட்டு எனச் சிலரை வருத்தங்கள் வருத்த இடமுண்டு. பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, புதன், வெள்ளி.

விருச்சிகம்: பக்தியா? சக்தியா? தாயால் — தாரத்தால் — உடன் பிறந்தவர்களால் — உரிமைகோரும் உறவினர்களால் யாரால் உங்களுக்கு வேதனை? பணத்தால் வரும் பாசமும், பந்தத்தால் வந்த உரிமையும் சொந்தமென்று எண்ணிவிட மாட்டீர்கள். சக்தியும் — புத்தியும் அடிக்கடி மனதில் வட்டமிட்டபடி இருக்கும். கேளுங்கள் கொடுக்கப்படும் என நம்பி தொழில் ஸ்தானத்தில் உங்களை நாடி வருபவர்களுக்கு பல உதவிகளை நயம் பார்க்காது செய்து கொடுப்பீர்கள். நம்பிக்கைக்குப் பாத்திரமான நீங்கள் நட்பு உலகை நாடி ஏமாறுவீர்கள். நெஞ்சுவலி, வயிற்றுவலி, வாய்வுத் தொல்லை, கைகால் விறைப்பு, கிருமித்தாக்கம், முதுகுவலி என்பனவற்றால் வருந்த இடம் உண்டு. இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள், புதன், வெள்ளி.

தனுசு: வாக்குச் சாதுரியத்தாலும், காணி பூமியாலும் பொருள்கள் வர இடம் உண்டு. நாடிவந்த பணம் மாலைக்குள் மாறி ஓடி விடாமல் பாதுகாப்பதில் கவனமாக இருங்கள். கடகடவென்று பேசிவிட்டு கதிகலங்கி நிற்பீர்கள். பாரம் குறைந்தாலும், பணம் குறைந்தால் உடனே வரவா போகின்றது? தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பாலருடன் நிதானமாக நடக்க வேண்டும். அல்லது ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் ஏற்படச் செய்யும். அரசியலும் இலக்கியமும் கலந்த ஞானம் உள்ள நீங்கள் வாக்கு வலிமையால் வீரம் பேசுவீர்கள். நிதானமாகப் பேசுங்கள் அல்லது பெட்டிசன்கள் பறக்கும். அதனால் வேதனைகள் தேடிவரும். வாய்வு, சளி, வாதஉளைவு, நெஞ்சுப் படபடப்பு, அடிக்கடி மனக் கலக்கம் என்பன ஏற்படச் செய்யும். வெளிநாட்டுச் செய்திகளால் சிலருக்கு மகிழ்ச்சி ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, ஞாயிறு, திங்கள், வெள்ளி.

மகரம்: விதி, மதி, சதி இவை மூன்றும் மனித வாழ்வில் நர்த்தனம் புரிவது சகஜமாகும். இறைவன் விதித்த விதிப்படியே அனைத்தும் நடக்கும். மனிதர்கள் யாவரும் பொம்மைகளாவர். இவர்களால் எதையும் இப்பிரபஞ்சத்தில் புதிதாக ஆக்க முடியாது என்பதை மனதார அறிந்தும் அறியாதவர் போன்று இருப்பீர்கள். பலத்துக்கும் — பலவீனத்துக்கும், தர்மத்துக்கும் (நீதிக்கும்) — அநீதிக்கும் இடையில் எப்பொழுதும் போராட்டம் தான்; உங்கள் தொழில் ஸ்தானத்திலும் இப்பலன் நடக்கும் காலமாகும். நரம்புப் பலவீனம், கைகால் பிடிப்பு, வாதம், வாய்வு என்பன அடிக்கடிக் கொடுக்கும். இடமாற்றங்களையும் கொடுக்கல் வாங்கல்களையும் தவிர்த்துக் கொள்ளவும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள்.

கும்பம்: இறைசக்திக்கு அளவே இல்லை. எல்லையை அறிய முடியாது. இறை உணர்வுகள் அதிகரிக்க, அதிகரிக்க கடும் சோதனைகள் ஏற்படும். தனிமரமாவார்கள். ஆத்ம சோதனைக்கு ஆயத்தமாகுபவர்களுக்கு இந்த இராசியின் பலன்கள் பல அனுபவங்களைக் காட்டி நிற்கும் என அறிவீர்கள். தொழில் ஸ்தானத்தில் வரவுக்கு மீறிய செலவுகள் அதிகரிக்கும். நண்பர்கள், எதிர்பாலார்களின் எதிர்ப்புக்கள் அதிகரிக்கும். நரம்புப்பலவீனம், விறைப்பு, நெஞ்சுப் படபடப்பு, உடல்வளர்ச்சித் தன்மை, சளித்தொல்லை என்பன அடிக்கடிக் கொடுக்கும். ஓய்வு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள்.

## மகாதேவா ஜோதிடம்

மீனம்: போட்டி என வந்து விட்டால் தகப்பன், பிள்ளை, மனைவி, பந்தம், பாசமெல்லாம் பார்க்க முடியுமா? சண்டை சச்சரவு எல்லாம் வீடுவரையும்தான். நீதிமன்ற, வழக்கு என வந்துவிட்டால் பந்தபாசமெல்லாம் பறந்து விடாதா? எனவே உறவு முறையில் நிதானம் வேண்டும். முறையான வாழ்வு, சட்டதிட்டம் எல்லாம் வரம்பு வரையும்தான். பய பக்தி நீங்க வைத்தால் சாணும் முழமும் ஒன்றுதான். தொழில் ஸ்தானத்தில் படபடப்பு, மாற்றம், பணச் செலவு, எதிர்ப்பு என மாறி மாறி இருக்கச்செய்யும். எதிர்ப்பாலாரின் எதிர்ப்புக்கள் இருக்கும். சளி, முட்டு, நரம்புப் பலவீனம், வயிற்றுப் பொருமல், வாய்வு—வாதம் என மாறி மாறி இருக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்,

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள்.

## கவித்துளிகள்

**பனித்துளி**

''நிலாப்
பெண்ணின்
வியர்வை''

**நீர் வீழ்ச்சி**

''மலையன்னை
கட்டிய
சிற்றாடை''

**காற்று**

''கண்ணுக்கு
தெரியாத
மின் விசிறி''

**வீதி**

''யாருக்கோ
விரித்து வைத்த
நிலப்பாவாடை''

**பாசம்**

''உயிர்
போடும்
உன்னத முடிச்சு''

— இ. டயாழினி

## குறள் வெள்ளம்

கடும் சொல்லும், கொடுஞ் சொல்லும் மட்டும்தான் துன்பத்தைத் தரும் என்று கருதிவிடக்கூடாது.

இன்சொல்கூடத் துன்பம் செய்யும். இனிக்க இனிக்கப் பேசும்போதும் உள்ளே வஞ்சகம் கலந்திருந்தால் அங்கே இன்பம் பிறக்காது. கேட்பவர் மனங்களை அது கூரிய வேல் கொண்டு தாக்கும்.

எனவே பேசும் இன்சொல்லினுள்ளே சிறுமைத்தனம் — குறுகிய நோக்கம் இருக்கக்கூடாது. நன்மை தராத சிறுமைக் கருத்துக்கள் அங்கே திணிக்கப்படக் கூடாது.

தூயதாகப் பிறக்கும் இன்சொல் இப்போது மட்டுமல்ல எப்போதும் — பின்பு நினைக்கும் போதும் — என்றும் இன்பமே தரும்.

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும் — 0098

யான்பெற்ற துன்பம் பெறுக இவ் வையகம் என்றெல்லாம் வாழக்கூடாது. அடுத்தவன் கடுப்பில் துன்பத்தை அனுபவத்தில் கண்டவன் தானும் அப்படி நடந்து அடுத்தவரை நோகடிக்கலாமா?

தன்னிடம் மற்றவர்கள் இனிக்கப் பேசும்போது தான்பெறும் இன்பம் — மனச் சந்தோஷம் — பற்றி நினைப்பவன் — தானும் அவ்வாறே நடந்து அடுத்தவர்களுக்கும் அதே சுகத்தைக் கொடுக்க நினைப்பதுதானே முறை?

அதைவிடுத்து — எல்லோரும் உன்னிடம் இனிக்க இனிக்க வழிய வேண்டும். நீமட்டும் அடுத்தவரோடு பாய்ந்து சீறிச் சினந்து வாழ்ந்துவிடத் தகுதியுடையவன் என நினைத்துவிடலாமா?

எனவே இன்சொல்லால் நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்று வாழ்.

இன்சொல் இனிது ஈன்றல் காண்பான்
எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது — 0099

(இனியவை கூறல்)

— அம்பிகைபாகன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி

## உங்கள் கவிதைகள்...

போதைக்கும் ரசம் தந்து
போதிமரப் போர்ப்படைக்கும் அரண் தந்து
நிற்கும் பொன்மனச்செம்மலே!
உன் எதிர்காலம் கேள்விக்குறியாக
விடவே மாட்டோம்!
இது சத்தியமல்ல 'சபதம்'!

— வாகசன் —
வதிரி.

★ ★ ★

ஆதிக்கப்பேய்களின் அடக்குமுறை ஆட்சிதன்னில்
பாதிக்கப்படுவது பனைமரங்கள் மட்டுமல்ல......
பாராண்ட இனமதின் பண்பாட்டு விழுமியங்களுந்தான்.

— கிராஞ்சியூரான் —

தனித்துப் போனது
நீ மட்டுமல்ல
நானும் தான்.
நீ காத்திருப்பது
காவலரண்களுக்காய்
நான்......
காணமல் போக......

— தி. கணேஷ் —
காந்தியூர்.

★ ★ ★

உன்
இருப்பு
கேள்விக் குறிதான்!
நீயும்
அவர்களால்
அழிக்கப்படலாம்.
இருந்தாலும்,
கலங்காதே!
உன்னால்
விதைக்கப்பட்டவைகள்
நாளை
விருட்சங்களாய்
மலரும்!

— அபிநவன் —

★ ★ ★

எத்தனை பேர்வந்து
என்னை அறுக்கினும்;
என் மண்ணைக் காக்கும்
என் விதை விருட்சங்கள்!

—எஸ். அருந்ததி—
உடுத்துறை.

★ ★ ★

சந்திரனே!
ஈழத்து தமிழரல்ல,
ஈழத்து கற்பகங்களும்
காணாமல் போயின.
தளிரிழந்த தனிமரமாவது
தப்புமா எச்சத்திற்கு?

— ஆ. ஆரபி —
வரணி

★ ★ ★

ஒட்டுசுட்டானில்
ஓயாத மழையாம்
படையினருக்கு பனைஓலை
பனையிலிருந்து போகிறதாம்
பனை மரங்களோடு — இந்த
பால்நிலவும்கேள்விக்குறியாய்.

— நித்தி —
அரியாலை.

★ ★ ★

வானோங்கி வளர்ந்த
கற்பக தருவே!
இரண்டாயிரம் ஆண்டில்
உன்னினம்
இரண்டு கோடியல்ல
இருநூறும் எஞ்சுமோ?
தெரியவில்லை — இம்
மண்ணில்!


— எம். பிருந்தா —
கோண்டாவில் வடக்கு.

முகில்பூசும் முழுநிலவு
முன்னாலே பனையொன்று;
பகல் வெளிக்கப் பாடுபட்ட
'பழைய வீரர்' குறியீடாய்...
உண்மையிது இன்றிங்கே
இருவருக்கும் வினாக்குறிதான்
இனியென்ன பௌர்ணமியா?
இது என்ன மடைத்தனமாய்...

— நிலாமகள் —

போர்த்துக்கேயர் உனை
போருக்கு அழைக்கவில்லை!
ஒல்லாந்தர் உன்னில்
ஓலைதானும் வெட்டவில்லை!
ஆங்கிலேயர் உனை
அழிக்க முனையவில்லை!
அமைதிப்படை கூட உன்னில்
ஆத்திரம் கொள்ளவில்லை!
அண்மைக் காலமாய் நீ
அற்றுப்போவதேன்?

— வ. கஜீபன் —



★ ★ ★

பூரணை நிலவை
பூரண சுதந்திரத்துடன் அனுபவிக்க
எமக்கு மட்டும் ஏன்
பனையளவு உயரத்தில்
கேள்விக்குறி?

— திருமதி வத்சலா
தியானேஸ்வரசர்மா —
நுணாவில் மத்தி

அன்றெல்லாம் நானறிவேன்
எதிர்காலம் எதுவென்று...
கட்டுமரமாய்...குடிசையாய்...
காத்திரமான வீடாய்...
இன்றிதெல்லாம் புரியவில்லை.
காப்பரணோ?
கைவிடப்படும் வீடோ?
அல்லது காப்பென்ற பெயரில்
'சும்மாதான்' சாவேனோ?

— ச. சாரங்கா —

★ ★ ★

விடை காணா வினாக்கள் பல
விளைந்திருக்கும் பூமியிதன்
அடையாளத் தருவே—உன்
ஆத்மார்த்தக் கேள்வியென்ன?

— கேசி —

★ ★ ★

நீ எப்போது பழம் தருவது?
நாம் எப்போது பசியாறுவது?

— ஐங்கரன் —
இணுவில்

★ ★ ★

மண்ணினில் வளம் குறைந்தால்
மரங்களில் செழிப்பு இல்லை
மனதினில் வெறுமை என்றால்
மன்பதை வாழ்வு இல்லை

— வ. ப. இ. எழில்மதி —
திக்கம்

★ ★ ★

வெட்டவெளிப் பரப்பினிலே
'விதைத்த' கதை நானறிவேன்
பட்டென்று சொல்லிவிட
பார்த்தகதை கூறிவிட
பேச்சு வரவில்லையே ஏன்?

— ச. குணாவினி —

யாழ் மண்ணின் குறியீடுகள்....
உயிரோ வியப்புக்குறி!
சுதந்திரமோ அடைப்புக்குறி!
பாதுகாப்போ அம்புக்குறி!
வாழ்வோ வினாக்குறி!

— க. நாகேஸ்வரா —
சண்டிலிப்பாய்.

## மௌன மொழி -19



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. இதனை வரைந்து அனுப்பியவர். நல்லூரைச் சேர்ந்த பா. லதன்

★ ★ ★

கற்பகதருவே!
காலத்தின் கோலமிது... இன்று
காவலரண்களில் நீ!-எனினும்
காத்திட நாளை ஒரு...
'கனகராஜன்' வருவான்.
கவலை கொள்ளாதே!

— ஷர்மிக் —

★ ★ ★

பனை இருந்தால்
பசி இல்லை!
படை இருந்தால்
பனை இல்லை;

—வீ. வசந்தி —

★ ★ ★

விடியலும் வாழ்வும்
வினாவாகிப் போய்
உதிப்புக் கூட
மறைந்தே நடக்கும்,
என் தேசம்
அப்படி!

நா. இராஜமனோகரன்

★ ★ ★

'கற்பகதரு' என்ற
காரணப் பெயரைப் பெற்ற
அற்புத மரமே நீ
ஆண்டாண்டு காலம் வாழி!

— சே. அற்புதன் —
இணுவில்.

★ ★ ★

கேட்பவற்றைக்
குறைவின்றி வழங்கும்
கற்பகதருவின் நிலையும்
கேள்விக்குறியா?

— சிவமலர் —
இளவாலை.

முழுமதியொளியை
முகில் மூடினும்
முழுமதியழிவதில்லை!
அழுது வாழ்ந்தாலும்
கேள்விக்குறியாகி
தொழுது வாழாதே!
பனைபோல் நிமிர்ந்து
நில்!

—ச. க. சுதர்சனக்குரு—

குருத்தோலை விழ
காவோலை அழும்
தேசமிது!

—ஆ. முகுந்தன்—

★ ★ ★

காலையின் விடியலுக்காய்
காத்திருந்த போதும்
கேள்வியாய்ப் போனது
எதிர்கால வாழ்க்கை!

—இ. சிவதர்ஷினி—

வானத்தில்
நிலவொன்று
உதிக்கின்ற போது......
நிஜமொன்று
இங்கு
அரங்கேறுகின்றதே!
காணாமல்
போனோரின்
புதைகுழிகளும்
காணாமல்
போனதையெண்ணி......
முற்றத்து(ப்)
பனையும்
வெட்கித்து
நிற்கின்றதே!

— எஸ். தீபன் —
அச்சுவேலி.

★ ★ ★

உயர வளர்ந்தாலும்,
கொடையில் சிறந்தாலும்
இம் மண்ணில்
தோன்றியதால்!
உன் வாழ்வும் கேள்விக்
குறிதான்......

—சரோ தம்பித்துரை—

★ ★ ★

தங்க நிலவம்மா
உனக்கு
இங்கு வரத் தடையம்மா?

— ம. சியாமளா —
ஏழாலை மேற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுங்கைகளில் காதலர்கள் சந்தித்துப் பேசுவது தவறா?

ஒழுங்கைகள் 'லவ்—லேன்' ஆவது குறித்து அதிரடி அரங்கிலும் வித்துவான் பதிலிலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

காதல் புனிதமானது; உண்மையானது; அதைக் கொச்சைப்படுத்துவது போல விமரிசித்திருப்பது எம் போன்ற உண்மைக் காதலர்களுக்கு வேதனையைத் தருகின்றது.

தமது காம இச்சையை நிறைவேற்றுவதற்காகப் போலிக் காதல் புரிபவர் இருக்கின்றார்கள். மற்றையவர்களைப் போன்று தாமும் காதல் செய்ய வேண்டும் என்பதற்காக 'பாஷன்' காதல் செய்பவரும் உள்ளனர். பொழுதுபோக்குக்காக பெண்களை காதல் என்ற வலையில் வீழ்த்திக் கெடுப்போரும் உளர். இவை சமூகச் சீரழிவுக்குக் காரணமாகலாம். ஆனால் அதற்காக ஒட்டு மொத்தமாகக் காதலே ஒரு சமூகச்சீரழிவு தான் என்ற போக்கில் நோக்குவது கண்டிக்கத்தக்கது.

''காதல், காதல், காதல்; காதல் போயின் சாதல், சாதல், சாதல்'' என்று பாரதியார் கூறியதைப் போற்றும் நாம் யதார்த்தத்தில் காதலை எதிர்க்கின்றோம். இப்போக்கு ஒரு மனோவிகாரத் தன்மைதான்.

உண்மைக் காதலைப் பிரிப்பதிலேயே நமது சமூகம் கண்ணாக இருக்கின்றது. காதல் பற்றிய தகவல் அம்பலமானதும் காதலர்களை பிரித்து வைப்பதில்தான் அனைவரும் மும்முரமாகின்றார்கள். ஆகையால்தான் உண்மைக் காதலர்கள் மற்றையவர்கள் அனேகரின் கண்களில் படாத இடத்தில் சந்திக்க விரும்புகின்றனர்.

காதலர் சந்திப்பை விடுப்புப் பார்க்கும் — மனோவியாதி பிடித்த— கூட்டமும் நாம் மத்தியில் உண்டு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

உண்மைக் காதலர்கள் சந்திக்க பொது இடம் இல்லை. தனி இடத்தில் — தனிமையில் — ஆள்கள் இல்லாத வீடுகள், கட்டடங்கள் போன்றவற்றில் — சந்தித்தால் அதை வேறு விதமாக அர்த்தம் பண்ணி விடுகின்றார்கள். ஆகவே பொது இடத்தில் — ஆனாலும் மக்கள் அதிகம் நடமாடாத — குச்சொழுங்கைகள், புழக்கமற்ற வீதிகள் போன்றவற்றை தேர்ந்தெடுக்கிறார்கள் காதலர்கள். இது தப்பா? மனதைத் தொட்டுப் பதில் கூறுங்கள்.

வெறுமனே காதலைக் கொச்சைப்படுத்தாமல் அதற்குரிய தூய தன்மையோடு அதனை நோக்குங்கள்.

**அச்சுவேலி. ஓர் அன்பர்.**

★ ★ ★

## முகத்திரை கிழிக்கும் மின்னல்!

சஞ்சீவியில் என்னைக் கவர்ந்த அம்சம் மின்னலின் 'அதிரடி அரங்கு'. மின்னாமல் முழங்காமல், திரைமறைவில் நடக்கும்— அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள் போன்றோரின் — அராஜகங்களை அம்பலப்படுத்தி, அவர்களின் முகத்திரையைக் கிழிக்கும் மின்னலுக்குப் பாராட்டுக்கள்.

'சிந்தனைத் துளிகள்', 'நகைச்சுவைத் துணுக்குகள்' போன்றவற்றையும் சேர்த்துக் கொண்டால் நல்லது.

**பண்ணாகம். இ. பரணீதரன்.**

★ ★ ★

## வன்முறை எங்கு இல்லை?

'வெள்ளை றோஜாவின் வாசனை சிலருக்குப் பிடிக்கவில்லை. ஆனால் 'வெள்ளை றோஜாமுள்' விறுவிறுப்பூட்டும் கதை அம்சங்களும், திடீர் திருப்பங்களும் நிறைந்த ஒரு சுவையான நாவல் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இது ஓர் ஆங்கில நாவலைத் தழுவி எழுதப்பட்டதாக இருந்தாலும் ஆசிரியரின் வசனநடை பாராட்டுக்குரியது. இத்தொடர் வன்முறைகளையும், ஆபாசங்களையும் யாழ்ப்பாணத்துக்கு அறிமுகப்படுத்தி தமிழர் கலாசாரத்தையும், பண்பாட்டையும் சீரழித்துவிடும் என்று சிலர் அஞ்சுகிறார்கள். ஆனால் உண்மையில் வன்முறைகளும் ஆபாசங்களும் உலகில் எங்குதான் இல்லை? உலகின் நிகழ்கால யதார்த்தங்களை இந்நாவல் தொட்டுக்காட்டியது என்றால் அது மிகையில்லை; தொடரட்டும் நாவலாசிரியரின் பணி.

**அச்சுவேலி தெற்கு. எஸ். கருணா.**

★ ★ ★

## அப்பட்டமான இலக்கியக் களவு

'கவிதை முற்றத்தில்' சில தரமான கவிதைகள் வருகின்றன. ஆனால் சிலர் தமது பெயர் பத்திரிகையில் வரவேண்டும் என்பதற்காக கவிதைக் களவும் செய்கிறார்கள். கலாநிதி. என். சண்முகலிங்கனின் 'நீலக்கயல்விழி' எனும் கவிதையை அவரது 'சந்தனமேடை' கவிதைத் தொகுதியில் பார்த்திருக்கிறேன். அதே கவிதையை இராமநாதன் நுண்கலைப் பீடத் துறைத் தலைவர் எஸ். பத்மலிங்கத்தின் குரலிலும் பாடலாகக் கேட்டிருக்கிறேன். அதே கவிதை 12-09-1998 திகதிய சஞ்சீவிக் 'கவிதை முற்றத்தில்' துன்னையூர் எஸ். தாகூர் என்பவரின் பெயரில் பிரசுரமாகியுள்ளது.

இது பதிவில் சஞ்சீவியில் வந்ததால் பிற்காலத்தில் உண்மையான கவிதை எழுதிய கவிஞன் மறக்கப்பட்டு இலக்கியக் களவு செய்தவரின் பெருமைக்கு சஞ்சீவி களம் கொடுத்ததாகி விடும் அல்லவா? இலக்கியக் களவுகளைத் தவிர்க்க சஞ்சீவியே நடவடிக்கை எடுப்பாயா?

**யாழ்ப்பாணம். ரி. சுகந்தன்.**

★ ★ ★

## ஊருக்கா உபதேசம்?

ஒரு றீம் பேப்பர் இரண்டாயிரம் முதல் மூவாயிரம் ரூபா விற்றபோதும் உதயன் விலை 6 ரூபா தான். இப்போது 700 ரூபா முதல் 750 ரூபா வரை விற்கும்போதும் அதே விலைதான். ஏன்? குறைக்க முடியாதா?

'தனியார் ரியூட்டறி' கட்டணங்களை உயர்த்தியபோது கண்டித்த சஞ்சீவி, இப்போது தனது விலையையே அதிகரிப்பதாக அறிவித்துள்ளதே? என்ன நியாயம்? 'ஊருக்கு உபதேசம்; உங்களுக்கு இல்லையா?'

**அரியாலை. வே. திருநாவுக்கரசு**

வாசகரே!

அப்போது நான்கு பக்கங்களில் வந்த உதயன் இப்போது பத்து முதல் பன்னிரண்டு பக்கங்களில் வெளிவருகின்றது. அப்போதும் பத்திரிகை தொடர்ந்து நிற்காமல் வரவேண்டும் என்பதற்காக இழுத்துப் பிடித்துப் பிரசுரமாகியது. இன்றும் கூட நிலைமையில் மாற்றமில்லை.

'சஞ்சீவி' இரு வர்ணங்களில் 24 முதல் 26 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அதன் 25 வீத விலை அதிகரிப்பை ரியூட்டறியின் இரட்டிப்புக் கட்டண அதிகரிப்புடன் ஒப்பிடாமல் — நியாயத்தை உணர்ந்து — வாசகர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்.

(ஆ—ர்)

# உங்கள் உள்ளத்திலிருந்து

## பழைய 'மொடல்'களே தொடர்ந்து தேவையா?

நாட்டில் புதிய, புதிய தரங்களுடனும் பலவித சிறப்புகளுடனும் பல தீப்பெட்டிகள் விற்பனைக்கு வந்துவிட்டன. மெழுகு பூசப்பட்ட தாளைச் சுற்றித் தயாரிக்கப்பட்ட நெருப்புக்குச்சிகள் நீண்ட நேரம் எரியத்தக்கவை. ஆனால் எம்மில் சிலர் இன்னமும் 'யானை மார்க்' தீப்பெட்டி தான் வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கிறார்கள்.

அது போல பழைய எழுத்தாளர்களின் ஆக்கம்தான் தேவை என்று கூறுவோரும் சமூகத்தில் உளர். ஆனால் நல்ல தரமான ஆக்கங்களைத் தரக்கூடிய பல புதிய புதிய எழுத்தாளர்கள் எம் மத்தியில் தோன்றி விட்டார்கள். அப்படிப்பட்ட பலருக்கும் இடங்கொடுங்கள். இன்னும் பழைய காலத்து 'மொடல்' களான 'றலி' சைக்கிளும், 'சிங்கர்' தையல் மெசினும் மட்டுந்தான் தேவையென்று நாம் பிடித்துக் கொண்டிருக்கத் தேவையில்லை. பலருக்கும் இடமளியுங்கள். அது தான் வரவேற்கத்தக்க போக்கு.

**கோப்பாய் தெற்கு. ச. சந்திரசேகரன்.**

★ ★ ★

## விஞ்ஞானத்தின் பால் கவனம் செலுத்துக!


அனைத்துத் தரப்பினரதும் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் விதத்தில் 'சஞ்சீவி' வெளியாவது பாராட்டுக்குரியது.

சிறுவர்களின் மூளை விருத்திக்காக விஞ்ஞானத்தின்பால் அதிக கவனத்தை 'சஞ்சீவி' திருப்ப வேண்டும். புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் அதையொட்டிய தகவல்களைப் பிரசுரிக்கவும் அதிக இடம் கொடுப்பது நல்லது.

**சாவகச்சேரி. சு. சிவஜங்கரன்.**

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 87



சொற்சிலம்பம் இல. 87
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

............ இங்கே வெட்டுக ............

முடிவு திகதி: 05 — 02 — 1999

**இடமிருந்து வலம்**

1. அழிவு செய்பவன். 4. இராமனால் கொல்லப்பட்ட ஓர் அரக்கன். 7. காலன். 8. மன்னன். 9. காதின் அருகேயுள்ள பகுதி. இங்கு நரைமயிரைக் கண்டதும் தனது அரசை இராமனிடம் ஒப்படைக்க முடிவு செய்தான் தசரதன். 11. தொண்டை. 12. அதிக. 13. உறவுக்கு பகை இது என்பர். 14. இரவு அல்ல. 15. நீரின்றி தாவரத்துக்கு ஏற்படும் நிலை. 16. குறைந்த அளவு. 17. பாய். 18. குழந்தையிடம் கேட்பது. 20. மகவு. 21. ஓர் அசைச்சொல்.

**மேலிருந்து கீழ்**

1. தலைவன். 2. சமானநிலை. 3. திருடுதல். 4. காய்ச்சல். 5. இந்த மலரையே பலரும் விரும்புவர். 6. குறைந்து போகுதல். 8. பீதியால் கத்து. 10. அறிவு குறைந்தவன். 12. அதிகம். 13. இறைவன். 14. பரப்புதல். 15. ஓர் அரக்கன். இவனைக் கொன்றதால் இவன் பெயரே கணபதிக்கு பட்டமாகி விட்டது. 16. நாணயத்தில் ஒருவகை. 19. பெண்ணுக்கு வேலி.

### சொற்சிலம்பம் — 85 விடைகள்

**இடமிருந்து வலம்**

1. ஞாபகசக்தி. 7. லண்டன். 8. டப்பா. 9. கனிதல். 11. ஆம். 12. சாக. 13. அசை. 14. சக்கரம். 16. தோப்பு. 18. குத்தி. 19. கபடபுத்தி. 21. திடும். 22. துரிதம்.

**மேலிருந்து கீழ்**

1. ஞாலம். 2. பண். 3. கடகம். 4. சன்னி. 5. திடல். 6. தபாலகம். 10. தலைக்குத்து. 11. ஆசைப்படு. 12. சாரதி. 13. அதோகதி. 15. கத்திரி. 17. புடம். 20. ரோம்.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற் பரிசு: வி. கஜந்தினி,
ஆண்டு — 9,
வேம்படி மகளிர் கல்லூரி.

★ இரண்டாம் பரிசு: சி. அரசகுலஇரத்தினம்,
ராஜா மருந்துக்கடை,
பிரதான வீதி, சுன்னாகம்.

★ மூன்றாம் பரிசு: ப. பஞ்சலிங்கம்,
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், வீடமைப்புத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா: 150: 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா: 100: 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா: 50: 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 86 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைநகரில் பொருளாதார இலக்குகள் மீது புலிகள் கண்!

வடமேல் மாகாணசபைத் தேர்தல் முடிந்து விட்டது. இருவாரத்துக்கும் கூடிய காலம் நாட்டின் கவனத்தை ஈர்த்திருந்த இந்தத் தேர்தலின் முடிவு தெரிந்து விட்டது. இப்போது சகலரது கவனமும் வழமை போல் யுத்தமுனைப் பக்கம் திரும்புகிறது.

தேர்தலில் அரசாங்கத்துக்கு கிடைக்கும் ஆதரவைக் குலைப்பதற்காக பெரும் தாக்குதல் ஒன்றைப் புலிகள் நடத்தலாம் என்ற எதிர்பார்ப்பு அரசாங்க வட்டாரங்களில் நிலவியது. எனினும் அப்படி எதுவும் நடக்கவில்லை. கொழும்பில் மின்மாற்றிகளை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுவெடிப்புகளைத் தவிர நாட்டின் ஏனைய பகுதிகளில் பெரிய தாக்குதல் சம்பவங்கள் எதுவும் தேர்தல் காலத்தில் இடம் பெறவில்லை. புலிகள் அங்கு தாக்குவார்கள்; இங்கு தாக்குவார்கள் என்ற எதிர்பார்ப்பும் அதற்கான காத்திருப்பும் பாதுகாப்புப் படையினரைப் பொறுத்தவரை அலுத்துப்போன விடயமாகவே இருக்கும். நாட்டின் 51 ஆவது சுதந்திர தினம் நெருங்குகிறது. தேர்தலை ஒட்டி உஷார்ப் படுத்தப்பட்டிருந்த படையினர் சுதந்திர தினத்தை எதிர்கொள்ளத் தயாராகின்றனர்.

கடந்த ஆண்டு நாடு 50 ஆவது சுதந்திர தினத்தைக் (பொன் விழாவை) கொண்டாடத் தயாராகிக் கொண்டிருந்த சமயம் ஜனவரி 25 ஆம் திகதி கண்டி ஸ்ரீ தலதா மாளிகை மீது பெரும் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. பொன் விழாக் கொண்டாட்டங்களை ஸ்தம்பிக்கச் செய்ததுடன் நாட்டையே அதிர வைத்த தாக்குதல் அது. ஒரு வருடம் கடந்து விட்டது. மீண்டும் சுதந்திர தினம் நெருங்குகிறது. புலிகள் தாக்குவர் என்ற எச்சரிக்கைகள் நேர காலத்துடன் வெளிவரத் தொடங்கி விட்டன.

இம்முறையும் படையினர் முழு உஷார் நிலையில் உள்ளனர். தேர்தல் வெற்றியையும் சேர்த்துக் கொண்டாடப்படவுள்ள சுதந்திரதினம் என்பதால் ஆளும் தரப்பினர் மிகுந்த ஆரவாரத்துடன் காணப்படுகின்றனர்.

கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமையும் 23 ஆம் திகதி சனிக்கிழமையுமாக தலைநகரில் ஐந்து பெரிய மின்சார டிரான்ஸ்போமர்கள் ஒரே பாணியிலான குண்டுத் தாக்குதல்களில் தகர்ந்துபோயின.

கொழும்பு பாதுகாப்புக் கட்டளைத் தலைமையகம் (Operations Command. Colombo) இத் தாக்குதல்களால் சிறிது அதிர்ச்சி அடைந்துள்ளது. மின் மாற்றிகள் மீதான இந்தத் தாக்குதல்களை விடுதலைப் புலிகளே நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் உறுதியாக நம்புகின்றன. தலைநகரில் பொருளாதார நிலைகள் மீதான தொடர்ச்சியான புதிய தாக்குதல்களின் ஆரம்பமே இந்த மின்மாற்றித் தகர்ப்புகள் என்று புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த இருமாத காலப் பகுதிக்குள் மின்மாற்றிகள் தகர்க்கப்பட்ட மூன்று சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இதனால் மின்சார சபைக்கு பல லட்ச ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதை விட தலைநகரின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் தொய்வு நிலை ஏற்பட்டிருக்கிறதோ என்ற எண்ணமே பாதுகாப்பு வட்டாரங்களுக்கு கவலை அளித்துள்ளது.

தலைநகருக்குள் புலிகள் ஊடுருவி சிறு சிறு குழுக்களாக அணிதிரண்டு வருகின்றனர் என்று புலனாய்வு அறிக்கைகள் அண்மையில் எச்சரிக்கை செய்திருந்தன. அதை நிரூபிப்பது போல் இந்தத் தொடர்ச்சியான மின் மாற்றித் தாக்குதல்கள் ஆரம்பமாகி உள்ளன.

மின்மாற்றிகளில் அல்லது அவற்றுக்கு மிக அருகே பொருத்தப்பட்ட நேரக் கணிப்பு குண்டுகளே அவற்றைத் தகர்த்துள்ளன. அத்துடன் அதிகாலை வேளைகளிலேயே அவை வெடித்துள்ளன. மின்மாற்றிகள் அமைந்துள்ள இடங்களுக்கு அருகே உள்ள இடங்களில் தங்கியிருந்தே இக் குண்டுகளைப் புலிகள் பொருத்தி இருக்க முடியும். பொதுமக்களுக்கு உயிரிழப்பு ஏற்படுவதைத் தவிர்க்கவே ஆள் நடமாட்டம் குறைந்த அதிகாலை வேளையைத் தெரிவு செய்து குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டிருக்கலாம்.

கடந்த காலங்களில் பொதுமக்களுக்கும், பொதுச் சொத்துகளுக்கும் சேதத்தை ஏற்படுத்திய தாக்குதல்கள் சர்வதேச ரீதியாகக் கண்டனத்துக்கு இலக்காயிருந்தன. எனவே இனிமேல் தலைநகரில் பொதுமக்களைப் பாதிக்காத அதேசமயம் பொருளாதாரத்துக்கு சேதம் விளைவிக்கக்கூடிய தாக்குதல்களையே புலிகள் நடத்துவர் என அவதானிகள் கருதுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு 30–க்கும் அதிகமான மின் மாற்றிகள் தகர்க்கப்பட்டன. இதன் மூலம் மின்சாரசபைக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது. விடுதலைப்புலிகளே அவற்றைத் தகர்த்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. தற்போது கொழும்பில் தாக்குதல்கள் ஆரம்பித்துள்ளன.

புறக்கோட்டைப் பகுதியில் மின் மாற்றிகளைத் தகர்ப்பதற்காக வைக்கப்பட்டிருந்த இரு குண்டுகளை கடந்த ஞாயிறன்று பொலீஸார் மீட்டனர்.

சாப்பாட்டுப்பெட்டி போன்ற சிறு பொருள்களுக்குள் இக் குண்டுகள் வைக்கப்பட்டுள்ளன. இக்குண்டுகளை தலைநகருக்குள் புலிகள் கடத்தி வந்திருக்கலாம்; அல்லது அங்கேயே அவற்றைத் தயாரித்து இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

கொழும்பு மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள சுமார் 270 மின்மாற்றிகளையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டிருக்கிறது. மின்மாற்றிகள் மற்றும் பொருளாதார நிலைகளைப் பாதுகாக்கும் ஏற்பாடுகள் தொடர்பாக மேஜர் ஜெனரல் நீல் டயஸ் தலைமையிலான கொழும்புப் பாதுகாப்புத் கட்டளைத் தலைமையகம் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

மின்மாற்றிகள், தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையங்கள், நீர்விநியோகக் குழாய்கள், எரிபொருள் நிலையங்கள் என்பவற்றின் பாதுகாப்புக் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட உள்ளது.

★ ★ ★

வன்னியில் புதிய நகர்வுகளைப் படையினர் ஆரம்பிக்கலாம் என்று பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இராணுவ இயந்திரத்தை இயக்கும் பொறுப்பைத் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் எடுத்துள்ள ஜனாதிபதி இவ்வாரம் பல புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்குவார் என்று தகவல் கசிந்துள்ளது.

## மறுபக்கம் ▶ வார விமர்சனம் ◀

**நல்லூர் தாஸ்**

புதிய தாக்குதல்கள், நகர்வுகள் தொடர்பாக வகுக்கப்பட்ட திட்டங்களுடன் மூத்த படை அதிகாரிகள் கடந்த வாரம் ஜனாதிபதியின் அனுமதியைப் பெறுவதற்காகக் காத்திருந்தனர். வடமேல் மாகாண சபைத் தேர்தல் சூடு பிடித்திருந்ததால் பொதுமக்கள் ஐக்கியமுன்னணியின் பிரசாரப் பணிகளில் ஜனாதிபதியும் நேரடியாக ஈடுபட்டிருந்தார். அதனால் இராணுவ விவகாரங்களைக் கவனிக்க அவரால் முடியாமல் இருந்தாகக் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றுக்குத் தயாராகிவருவதாக புலனாய்வுப் பிரிவினர் வன்னி உட்பட நாடு முழுவதும் படையினரை எச்சரித்துள்ளனர். கடந்த 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட புலனாய்வு அறிக்கை ஒன்றின்படி வன்னியில் பெரிய ஒரு தாக்குதலுக்காக புலிகள் தங்கள் உறுப்பினர்களை அணிதிரட்டி வருவதாகவும் மட்டு—அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கருணா தலைமையில் மாங்குளம், ஒட்டுசுட்டான் பகுதியில் தாக்குதல் இடம்பெற வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை புலிகள் தம்மிடம் பணயக் கைதிகளாக உள்ள பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸாரைச் சேர்ந்த 400 பேரை இம்மாத முற்பகுதியில் வன்னிக்குள் ஓர் இடத்தில் இருந்து வேறோர் இடத்துக்கு இடம் மாற்றியதாக அந்தப் புலனாய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது. லொறிகள் மற்றும் டிராக்டர்கள் மூலம் இவர்கள் முள்ளியவளைப் பகுதிக்கும் நாச்சிக்குடா பகுதிக்கும் இடையே நகர்த்திச் செல்லப்பட்டனர் என்று அந்த அறிக்கை சுட்டிக் காட்டி உள்ளது.

விடுதலைப் புலிகள் வசம் இத்தனை பெரும் எண்ணிக்கையான படையினர் பணயக் கைதிகளாக இருப்பதை புலனாய்வு அறிக்கைகள் ஊர்ஜிதம் செய்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

இதேசமயம் கிழக்கிலும், வன்னியிலும் விடுதலைப் புலிகள் கப்பல் மூலம் ஆயுதங்களையும், மருந்துப் பொருள்களையும் தரையிறக்கி உள்ளதாகவும் புலனாய்வுத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

★ ★ ★

ரஷ்ய விமான நிறுவனம் ஒன்றிடம் இருந்து இரண்டு 'எம். ஐ. 35' ரகக்ஹெலிக் கொப்ரர்கள் இலங்கை விமானப்படை கொள்வனவு செய்யவுள்ளது. 'ரொஸ்ரோவ் ஹெலிக் கொப்ரர் புறடக்சன் கொம்பிளக்ஸ்' எனப்படும் இந்த நிறுவனத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் இந்த ஹெலி கொள்வனவு தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக இவ்வாரம் கொழும்பு வருகை தந்தனர்.

இந்த இரு அதிகாரிகளுக்கும் தலைநகரில் அவர்கள் நடமாடிய இடங்களில் பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

'எம். ஐ. 24' ரக ஹெலிக்கொப்ரர்களையே இலங்கை விமானப் படையினர் தற்சமயம் பயன்படுத்தி வருகின்றனர். இவை தரையில் இருந்தான எதிரியின் தாக்குதல்களுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடியவை அல்ல. போர் முனையில் குறிப்பாக வன்னியில் புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே இந்த ஹெலிகள் பறக்க வேண்டி உள்ளது. ஹெலிகளையும், விமானங்களையும் இலக்கு வைத்து புலிகளின் விமான எதிர்ப்புப் படைப் பிரிவின் சிறு சிறு குழுக்கள் காடுகளுக்குள் காத்து இருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன. சின்ன கடாபி என்பவரின் தலைமையில் சுமார் ஐவர் கொண்ட குழு ஒன்று விமான எதிர்ப்பு ஆயுதங்களுடன் காடுகளுக்குள் பதுங்கி உள்ளதாகவும், நெடுங்கேணி — ஒட்டுசுட்டான் பகுதிகளுக்கு இடையே அடிக்கடிப் பறக்கும் ஹெலிக்கொப்ரர்களே அவர்களின் இலக்குகள் என்றும் கடைசியாக வெளியான புலனாய்வு அறிக்கை படையினரை எச்சரித்துள்ளது.

இத்தகைய அச்சுறுத்தல்களை சமாளிப்பதற்காகவே அரசு 'எம். ஐ. 35' ரக ஹெலிகளைக் கொள்வனவு செய்ய முடிவு செய்தது. இந்த ஹெலிகள் எம். ஐ. ரக ஹெலிகளில் — பிந்திய — நவீன வசதிகள் கொண்டவை. விமான எதிர்ப்பு ஏவுகணை வசதியும் இவற்றில் உண்டு.

★ ★ ★

யாழ்ப்பாணத்துக்கும், இரத்மலானைக்கும் இடையே சிவில் விமானப் போக்குவரத்து சேவையை இலங்கை விமானப்படையின் துணைப் பிரிவான 'ஹெலி டூர்ஸ்' Heli Tours) நிறுவனம் நடத்த உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமான சேவைக்கான ரிக்கெற் பதிவுகளைச் செய்வதற்கான நடைமுறைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

எனினும் இந்த விமானசேவை திட்டமிட்டபடி இவ்வாரம் ஆரம்பமாகவில்லை; கடந்த 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாக இருந்த சேவை பின்னர் 25 ஆம் திகதிக்கும் 26 ஆம் திகதிக்கும் ஒத்திவைக்கப்பட்டதாக சிவில் நிர்வாகப் பிரிவு தெரிவித்தது. இவ்வாரம் இப்பத்தியை எழுதும் வரை விமானசேவை ஆரம்பமாகவில்லை.

பயணிகள் ரிக்கெற் பதிவு செய்ய முன்வராததே விமானசேவை தாமதமடைவற்குக் காரணம் என்று முதலில் தகவல் வெளியானது. ஆனால் சேவையை ஆரம்பிக்க பயணிகளின் எண்ணிக்கை அவசியம் அல்ல என்றும் சில நிர்வாக நடைமுறைகள் காரணமாகவே சேவை காலதாமதமடைவதாகவும் சிவில் நிர்வாக சேவையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் பின்னர் தெரிவித்தன.

போக்குவரத்து மார்க்கம் இல்லாமல் குடாநாட்டிலும், கொழும்பிலுமாக முடங்கிப்போய் நிற்கும் ஏராளமான பயணிகளிடையே இந்த விமானசேவை பற்றிய அறிவிப்பு எவ்வித ஆவலையோ, ஆரவாரத்தையோ ஏற்படுத்தி விடவில்லை.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் தங்கள் தங்கள் நிலைப்பாடுகளில் விடாப்பிடியாக இருப்பதுதான் இதற்குக் காரணம்.

பொதுமக்களின் இந்தப் பயண விவகாரத்துக்கும் நாட்டின் இனப் பிரச்சினைக்கும் நெருங்கிய ஒற்றுமை இருப்பதை நன்கு அவதானித்தால் புரியும்.

## 3ஆம் தரப்புத் தலையீடை கோரி நிற்கும் பயணிகள்

நீண்டகாலமாக நீடிக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் அவசியத்தை விடுதலைப் புலிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். பக்கச் சார்பற்ற பார்வையாளர்களும் அதை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் அரசுத்தரப்போ அதை அடியோடு நிராகரித்து வந்துள்ளது. இந்த விவகாரத்தில் மூன்றாம் தரப்பாகச் செயற்பட அவ்வப்போது சில தரப்புகள் விருப்பம் தெரிவித்தபோதும் அரசு அவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது.

இந்தப் பின்னணியில் இலங்கை இன விவகாரம் சர்வதேச அரங்கில் மூன்றாம் தரப்புத் தலையீட்டைக் கோரி நிற்கும் விவகாரமாகவே இருந்து வருகிறது.

குடாநாட்டை இராணுவம் கைப்பற்றுவதற்கு முன்பும் அதன் பின்னரும் பொதுமக்களின் போக்குவரத்து என்பது ஒரு பெரும் பிரச்சினையாக — மக்களை வதைக்கும் விவகாரமாக — மாறி வந்துள்ளது.

குடாநாட்டு மக்களின் போக்குவரத்து சேவைகள் எதுவாயினும் மூன்றாம் தரப்பான — பக்கச் சார்பற்ற — சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்றின் கண்காணிப்பின்கீழேயே நடைபெற வேண்டும் என்பது விடுதலைப் புலிகளின் உறுதியான நிலைப்பாடு. இதை அவர்கள் அவ்வப்போது பகிரங்கப்படுத்தியும் வருகின்றனர். ஆனால் அரசுத் தரப்போ இதை ஏற்பதாக இல்லை. குடாநாட்டுக்கான போக்குவரத்து என்பது அங்கு நிலைகொண்டுள்ள படையினரின் தேவைகளையும் நிறைவேற்றுவதாக அமையவேண்டும் என்பது அரசின் நிலைப்பாடு போல் தெரிகிறது. எனவே தான் பயணிகள் கப்பல்களிலும், விமானங்களிலும் படையினரும், அவர்களது பொதிகளும் கூடவே ஏற்றப்படுகின்றன.

பயணிகள் போக்குவரத்து என்ற பெயரில் இராணுவ, வர்த்தக நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதே அரசின் நோக்கம் என்று புலிகள் குற்றஞ் சுமத்துகின்றனர். எனவே இந்த நோக்கம் நிறைவேறுவதைத் தடுக்க மூன்றாம் தரப்பு ஒன்றை புலிகள் கோருகின்றனர்.

ஆனால் போக்குவரத்து சேவையில் மூன்றாவது தரப்பின் தலையீடு அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பின்னடைவுகளை ஏற்படுத்தி விடலாம் என்பது அரசின் அச்சம். எனவே சர்வதேச நிறுவனம் ஒன்றுக்கு இதில் இடமளிக்க அரசு முன்வராது.

சம்பந்தப்பட்ட இருதரப்பும் கோரிக்கை விடுத்தால் மட்டுமே இதில் தமது பங்குபணிகளை ஆற்ற முடியும் என்று மூன்றாவது தரப்பினர் கூறுகின்றனர். இன விவகாரமும் பயணிகள் விவகாரமும் இவ்வாறான சூழ்நிலைக்குள்தான் சிக்கி உள்ளன.

இந்த இழுபறிக்கு நடுவே அவஸ்தைப்படுகின்றனர் பொதுமக்கள். பயணங்களைப் போலவே அவர்களது துயரங்களும் முடிவதாக இல்லை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியமரத்துப் பேய்

ஊர்க் கோடியில் உள்ள முச்சந்தியில் ஒரு பெரிய புளியமரம் நின்றது. இரவில் அந்த முச்சந்தி வழியாக மிகுந்த பயத்துடன்தான் போக்குவரத்துச் செய்வார்கள். அதிலும் அமாவாசை காலம் என்றால் எவரும் முச்சந்திப் பக்கம் போகமாட்டார்கள்.

முச்சந்தி புளியமரத்தில் இரவில் வெளிச்சம் தெரிவதாகவும், பேய்கள் கூத்தாடுவதாகவும் அந்த ஊர்மக்கள் பேசிக் கொள்ளுவார்கள்.



பச்சையன் என்று அந்த ஊரிலே ஒரு துடிப்பான இளைஞன் இருந்தான். அவன் திருக்கல் வண்டியில் தனியாக வெளியூர் சென்றிருந்தான். திரும்பி வருவதற்கு சுணங்கிவிட்டது. 'பொழுது மைம்மலாகிப் போச்சு, எப்பிடியும் முச்சந்திப் புளியடியாலை தான் போகவேண்டும்'. சிறிது சிறிதாக ஏற்பட்ட பயம் அவனுக்கு நெஞ்சுப் படபடப்பைக் கொடுத்தது.

''பேயைக்கண்டு பிடிக்கிறது வலுசுலபம். அதின்ரை காலைப்பார்க்கவேணும். கால் நிலத்திலை பாவாமல் இருந்தால் அது பேய்தான்.'' என்று பெரியவர்கள் சொன்ன அறிவுரை அவனது நினைவுக்கு வந்தது. முச்சந்திப் புளியமரத்தடியால் யாராவது வந்தால் அவர்களது கால்களை வடிவாகப் பார்க்கவேண்டும் என்று எண்ணினான்.

**யாழ்ப்பாணத்து நாட்டார் கதைகள்**

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணக் கச்சேரியில் ஒரு வெள்ளைக்காரத்துரை இருந்தார். அவர் பின்னேரங்களில் தனியாக நடந்து ஊர்சுற்றிப் பார்ப்பது வழக்கம். அவர் அந்தப் புளியமரத்தடியால் வந்து கொண்டிருந்தார். வெள்ளை நிற அரைக் காற்சட்டையும், கரு நிற கால் மேசும், கருநிறச்சப்பாத்தும் அணிந்திருந்தார்.

இருள் கவ்விக்கொண்டு வந்தது. பச்சையன் வெள்ளைக்காரத் துரையின் தோற்றத்தைத் தூரத்திலே கண்டுவிட்டான். வெள்ளை உருவம், காற்பகுதி கருமையாக இருந்தமையால் நிலதித்தில் முட்டுவது தெரியவில்லை. ''ஐயோ பேய்'' என்று உரத்துக் கத்தத் தொடங்கினான்.

தொகுப்பு:-
கலாநிதி சபா. ஜெயராசா.

# வள்ளுவரும்...

(I ஆம் பக்கத் தொடர்)

மையானது — நிலைத்தது — எது என நீண்ட நாள் உலகையெல்லாந் தேடினேன். (வாய்மை) சத்தியத்தைத் தவிர வேறு ஒன்றையும் கண்டேனில்லை' என முடிவு கட்டுகிறார்.

உண்மை, அன்பின் உருவாகவே கடவுளைக் காண்பவர் காந்திஜி.

சத்து (உண்மை), சித்து (அறிவு), ஆனந்தம் (இன்பம்) இவையே கடவுள் என்கிறது உபநிடதம்.

'இன்பமே என்னுடை அன்பே' என்றனர் தமிழ் நாயன்மார்.

'ஞானவேள்வி நல்லற இயல்பினன்' என்கிறார் ஆழ்வார்.

கட்டற்று, கடந்து உரிமையாய் நிற்பது கடவுள். ஆகவே உரிமை வேண்டுவோர் அதனை உணர்கின்றனர்.

உண்மையெனில், என்றும் உள்ளது; அழியாது நிலைத்தது. நிலைத்த இன்பத்தையும் அழியாத அமைதியையும் ஆறாத நல்லுறவை (அன்பு)யும் இன்று உலகம் விழைகிறது. அதற்கு, மாறாத உரிமை ஒவ்வோர் நாட்டிற்கும் மனிதனுக்கும் வேண்டும் என உணர்கிறது. என்றும் இருக்க வேண்டிய இவற்றை, என்றும் உள்ள இவைகளை உணர்ந்துதானே எய்த வேண்டும்? உள்ளதைத் தரும் அவன், உண்மைவடிவினன்.

ஆறாத உறவைநாட்டும் அவன் அன்புருவினன். ஆண்டவன் எனில் அஹிம்சை, சத்தியம் என்ற அழகியகொள்கையைக் காந்திஜியிடம் கண்டுதான் கடவுளைப் பற்றியும் சமயத்தைப்பற்றியும் கவலையே கொள்ளாத நேருவும், காந்திஜியின் கடவுளைக் கொஞ்சம் கருதிப் பார்க்கிறார்.

உண்மை, அன்பில் உயருமானால் அந்த சமயம் உலகிற்கு ஆறுதலளிப்பதே என நேரு ஒப்புக்கொள்கிறார்.

அறிவும், அறமும் இருந்தால்தான் உண்மையையும் அன்பும் ஓங்கும். அறிவால் உண்மை விளங்கும்; அறத்தால் அன்பு பரவும். வள்ளுவர் இறைவனை 'வாலறிவன்', 'அறவாழி அந்தணன்' என்கிறார்.

ஆகவே மூட நம்பிக்கையும், எல்லாம் இறைவன் செயலென்று சோம்பலுமுடையவாய்ப் பல நூற்றாண்டுகளாகப் பழகிப் போன இன்றைய உலகச் சமய வாழ்க்கையன்று — வள்ளுவரும் காந்திஜியும் உரைக்கும் சமயம்.

அது செயலை, தொண்டினை வற்புறுத்துகிறது; அதாவது அறத்தை வற்புறுத்துகிறது; ஏன், அறிவை வற்புறுத்துகிறது. ஆங்கிலேயன் ஆண்டாலென்ன இந்தியன் ஆண்டாலென்ன, உழைத்தவன் வறுமையில் வாடுவதும்விதி என்றுகோழையாய் மடிந்து கிடக்கும் மூடத்தனத்தை யழித்து, எளிமையை விரும்பும் அறிவுடைய மனித சமயம் அவர்கள் காண்பது. காந்திஜியின் வாழ்வு முழுவதும் இந்தியாவின் உரிமைக்கே உழைத்துக் களைத்தது என்றால் அங்கு சோம்பலும், மடமையும் சாய்ந்துவிட்டன.

வள்ளுவர், மனிதன் செய்ய வேண்டுவது சமயச்சடங்கு, கடவுள் வழிபாடு என்பதைக் கூட வற்புறுத்தவில்லை; ஆனால் அறம்; அறம் (தொண்டு) என்கிறார், தவிர்க்க வேண்டுவது பழியொன்றே என்கிறார். உரிமைப் போராட்டத்திலேயே என்சமயம் அடங்கியுள்ளது; அதிலேயே என் கடவுளைக் காண்கிறேன் எனத்தானே காந்திஜி கருதினார்? உலகச் சமயங்கள் இப்படி மாறுமானால் [illegible] அவற்றை [illegible] செய்வர்? ★

# வன்னியில் . . .

(II ஆம் பக்கத் தொடர்)

அரசியல் கட்சிகள் பலவும் தெரிவித்தன.

ஆனால் குற்றஞ்சாட்டப்படும் அளவுக்கு தேர்தல் வன்செயல்கள், மோசடிகள் பெரிதாக நடைபெறவில்லை என்று அரசாங்க அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இதற்கென ஒரு பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி ஓர் அமைச்சர் மாறி இன்னொருவர் வன்முறைகள் நடைபெறவில்லை என்பதற்கான தர்க்க வாதங்களை —தமது தரப்புக்கு ஏற்ற மாதிரி—நிகழ்த்தினார்கள்.

தேர்தல் கண்காணிப்புக் குழுவை தேர்தல் ஆணையாளர் அங்கீகரித்திருந்த போதிலும் அதன் அறிக்கை பக்கச் சார்பானது; சுத்தப் பொய்கள் அதில் உள்ளன என்று கோபாவேசத்துடன் சொன்னார் ஓர் அமைச்சர்.

''பல தேர்தல் பிரிவுகளில் சென்ற முறையைவிட இத் தேர்தலில் ஐ.தே. கட்சிக்கு கூடுதல் வாக்குகள் கிடைத்திருக்கின்றனவே; வாக்கு மோசடி நடைபெற்றால் அது எப்படிச் சாத்தியம்?'' என்று கேட்டார் ஓர் அமைச்சர்.

''தேர்தல் கண்காணிப்புக் குழுவுக்கு அது இயங்குவதற்கு நிதி உதவி, உதவி செய்பவர்கள் யார் தெரியுமா?'' என்று முழங்கினார் இன்னொரு அமைச்சர்.

எனினும் நெருப்பில்லாமல் புகையாது என்ற தன்மையுடன் அரச தரப்புக் கூறியதை நம்பும் நிலையில் தெற்கு மக்கள் இல்லை என்று சுயேச்சையான அவதானிகள் தெரிவித்திருக்கின்றனர்.

தேர்தலில் மோசடி மற்றும் ஒழுங்கீனம் நடைபெற்றிருந்தால் சம்பந்தப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப் பதிவை இரத்துச் செய்யுமாறு தேர்தல் ஆணையாளருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

அரசு நீதியுடன், நேர்மையுடன் நடந்து கொள்கிறது என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் உருவாக்கும் நோக்குடனேயே அந்த உத்தரவு விடப்பட்டதாகக் கூட அர்த்தம் தரப்படுகிறது.

எப்படியோ தேர்தலை இரத்துச் செய்வதில்லை என்று அரசு எடுத்திருக்கும் முடிவு ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. தேர்தல் நடவடிக்கைகள் குறித்துக் குற்றச் சாட்டுகள் வந்தபின்னர் அரசு எடுத்திருக்கும் முடிவு நினைத்ததைச் செய்யும் போக்கே!

ஜனநாயகத்தின் காவலன் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் அரசு—தனக்கு ஆதரவு உண்டு என வாதாடும்—அரசு மக்கள் முன் செல்வதற்கு ஏன் தயங்க வேண்டும்?

அரசாங்கம் வயம்ப தேர்தலை இரத்துச் செய்யப் பின் நின்றாலும் நீதிமன்றத்தின் தீர்ப்பு எப்படி அமையும் என்று சொல்லமுடியாதல்லவா? எதிரணிக் கட்சிகள் தேர்தலை இரத்துச் செய்யக் கோரி வழக்குத் தாக்கல் செய்வதற்கு முடிவு செய்துவிட்டன!

ஊவா, சப்பிரகமுக, மேற்கு, தெற்கு, வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலை அரசாங்கம் ஒத்திவைத்தது அரசமைப்புக்குமுரணானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

தேர்தலை நடத்துவதற்குப் போதிய பாதுகாப்பு அளிக்க முடியவில்லை. வடக்கில் போர் முனையில் உள்ள பொலீஸாரை தேர்தலுக்காக தெற்கே அழைத்தால் வெல்லும் தறுவாயில் உள்ள ''வெற்றிஉறுதி'' தோல்வியாகி விடும் என்று காரணம் கூறி அரசு, திகதி நிர்ணயிக்கப்பட்ட (ஒகஸ்ட் 28) தேர்தலை ஒத்திவைத்தது அரசு!

பொலீஸாரை வடக்கிலிருந்து தெற்கே கொண்டுவந்து போரில் தோற்கக் கூடாது என்று மகாநாயக்கர்களையும் பக்கப்பாட்டுப்பாட வைத்து தேர்தலை ஒத்திவைக்குமாறு தூண்டினார் ''தலைமைச் சேனாதிபதி'' பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த.

மக்கள் ஆதரவு தமக்குக் கிடைக்காது என்பதனை ஊகித்தே— தோல்வி ஏற்பட்டால் அரசுக்கு அபகீர்த்தி என நினைத்தே— அரசு தேர்தலை ஒத்திவைத்ததாக எதிரணியினர் கூறினர்.

இவர்கள் இரண்டு தரப்புகளுக்கும் இடையில் நின்ற சுதந்திர ஊடக அமைப்பு தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. ஒகஸ்ட் 28 ஆம் திகதிக்கு நிர்ணயித்த தேர்தலை ஒத்திவைத்தது தவறு என்றும் இன்னும் மூன்று மாதங்களில் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது!

ஊடக அமைப்பு ஒன்று ஜனநாயகத்தை நிலைநாட்ட நீதி தேவதையின் தீர்ப்பைக் கோரி வெற்றி கண்டிருப்பதும் ஒரு புதிய சூழ்நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. இதே ஊடாக அமைப்பும் அதன் பிரமுகர்களுமே இப்போதைய அரசை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்குப் பெரிதும் பாடுபட்டவர்கள் என்பதும் நோக்கற்பாலது அரசாங்கம் தனது வசதிக்காக மக்களின் உரிமைகளை நசுக்குவதற்கு சர்வாதிகாரத் தனமாக நடந்து கொண்டதால் இப்போது தலைகுனிந்து நிற்க நேரிட்டுள்ளது. அதன் ''இமேஜ்'' பெரிய அளவில் கெட்டுவிட்டது.

அதிகாரம் கையில் வந்துவிட்டது என்பதற்காக தலைகீழாகச் செயற்பட நினைப்பது தகாது. நீதி வெல்லும். என்பதனை அரசியல் வாதிகள் மறவாதிருப்பாராக! ★

# அபத்தம்...

(VII ஆம் பக்கத் தொடர்)

வட்டத்திற்குள் என்பதை எந்தக்கட்டத்திலும் அவன் ஏறிட்டுப்பார்ப்பதில்லை. இந்தப் பிரபஞ்சத்தில், பிறப்பின் மகிமை உணராது பொய்மைகளையும் போலிகளையும் போர்த்துக் கொண்டவனாக இருக்கும் உண்மை ஒன்றை அறிந்து நடக்க முற்படுவதில்லை. இது அவனின் இறப்பு!

அந்தப்புத்தகத்தின் கடைசிப் பக்கத்தையும் பார்த்துவிட்டு முடினாள் கௌரி. அட்டை முகப்பில் 'அபத்தம்' என்ற தலைப்பு.

இதனை ஆக்கிய ஆசிரியர் யார்? விடைக்கு வியப்பில்லை. கௌரிதான். பிற்போக்குகளில் இருந்து தன்னைப் பிரித்துக் கொண்டவள்.

முற்போக்குக்காக முன்னணிகள் அமைக்கவில்லை. பேனா முனையூடே தானாக செல்கிறாள். எழுத்துக்கள் தான் அவளின் ஏமாற்றங்களுக்கு நிவாரணி. இவள் ஒன்றும் சீர்திருத்தவாதியல்ல: அடைபட்டுக் கிடக்கும் எண்ணக் குப்பைகளை மூடைகட்டி முதுகிற் காவாமல் உருப்படா ஊத்தைகளை எழுதி எழுதியே கழுவிக் கொள்கிறாள். இப்போது தந்தையை இழந்து தனித்த நிலைதான்! இருமனம் இணையும் திருமணமாம்! இன்னும் காணாத கௌரிக்கு இப்போது வயது ஐம்பதிற்கு அப்பால்......

(யாவும் கற்பனை) ★

## விடைகள்

VIII மற்றும் IX ஆம் பக்கங்களில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### மூளைக்கு வேலை

சிறுவன் A செல்ல வேண்டிய வழி:-
A → 2 → 7 → 3 → 1 → 5 → 6 → 4 → 8 → 2 → 9 → 2 → 1 → 7 → 5 → 9 → 2 → 3 → 4 → 2 → 8 → 2 → 1 → 2 → 3 → 2.

### கணக்குப் புதிர்

30 வயது, 15 வயது.

### சொற்றேடல்

1. குடித்தல். 2. பகுத்தல். 3. பருகுதல். 4. கரங்குவி/வணங்குக. 5. ஆமணக்கு. 6. பறக்கும். 7. உருகுதல். 8. உகுத்தல். 9. குதித்தல். 10. புகுத்தல். 11. பழகுதல். 12. இடிக்கும்./முழங்கும். 13. காற்பங்கு. 14. துர்க்குறி. 15. திக்குவாய். 16. சகுந்தலை. 17. குருக்கள். 18. காகுத்தன். 19. ஆக்குதல். 20. துலங்கும். 21. பல்லக்கு.

### கட்டங்களை நிரப்புங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 தி | 3 க | | 4 ப | 5 த | 6 வி |
| தி | ன | ம் | | த | ட | ல் |
| க | ம் | 7 பு | 8 ர | 9 வி | ல் | லு |
| | | ர | ச | ம் | | |
| 10 மா | 11 த | 12 வி | ம் | 13 மு | 14 து | 15 கு |
| த | ங் | கு | | து | ண் | டு |
| வி | கு | தி | | கு | டு | வை |

### நவரத்தினங்களை கண்டுபிடியுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வை | டூ | ரி | ய | ம் | கோ |
| ர | து | ம் | நீ | மா | மே |
| ம் | த் | ள | ல | ணி | த |
| க | மு | வ | ம் | க் | க |
| பு | ஷ் | ப | ரா | க | ம் |
| ம | ர | க | த | ம் | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை தலை குனிய வைக்கும் கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல்கள்!

இந்தியாவில் சமீப காலமாக கிறிஸ்தவதேவாலயங்கள், கிறிஸ்தவபாடசாலைகள் எரிக்கப்பட்டுள்ளன. கன்னியாஸ்திரிகள் சிலர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். சுவிஷேச பணியாளர்கள் பலர் தாக்கப்பட்டுள்ளனர்.

சில இடங்களில் பைபிள்களும் எரிக்கப்பட்டன. கடைசியாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிறிஸ்தவ மிஷனரி ஒருவரும் அவரது இரு புதல்வர்களும் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவங்களுக்கு இந்து தீவிரவாத அமைப்புக்களே காரணம் என்று கிறிஸ்தவ அமைப்புக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

பிரதான இந்து தீவிரவாத அமைப்பான விஸ்வ ஹிந்து பரிஷத் (உலக இந்து கவுன்ஸில்) தனக்கு இந்தச் சம்பவங்களுடன் தொடர்பு இல்லை என்று மறுப்புத் தெரிவித்துள்ளது.

எனினும் இந்தியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் பலவந்தமாக இந்துக்களை மத மாற்றம் செய்கின்றனர் என்று விஸ்வஹிந்து பரிஷத் குற்றஞ் சாட்டி வருகிறது.

அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி. ஐ. ஏ. கோடிக்கணக்கான டொலர்களை இந்தியாவில்உள்ள கிறிஸ்தவ அமைப்புகளுக்கு இரகசியமாக வழங்குவதாகவும் —

இந்தியாவில் கிறிஸ்தவர்களின் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதும் —

தற்பொழுது ஆட்சியில் உள்ள இந்து தேசிய வாத அரசுக்கு (பி. ஜே. பி) அபகீர்த்தியை உண்டுபண்ணுவதும் —

தவ மன்றத்தின் இணைப்பாளர் செட்றிக் பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

1998 முற்பகுதியில் இருந்து கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து சுமார் 100 முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியா சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் வரை இத்தகைய 40 சம்பவங்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மாநிலங்கள் தடுக்கத் தவறின

மாநிலங்களில் இடம் பெறும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகளை

மோசம் அடைந்து வருவதையே இது காட்டுகிறது.

இந்து தீவிரவாத அமைப்புக்களின் குற்றச்சாட்டுக்கள், கிறிஸ்தவ அமைப்புக்களின் விளக்கங்கள் விவாதத்துக்குரியவை என்று தமது குஜராத் விஜயத்தின்போது வாஜ்பாய் தெரிவித்தார்.

## ஆஸி மிஷனரி கொலை

கடந்தவாரம் ஆஸ்திரேலிய கிறிஸ்தவ மிஷனரி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவமே அரசுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் புதிய நெருக்கடியை உருவாக்கியது.

பிரிட்டன், இத்தாலி, ஜேர்மனி உட்பட பல மேற்கு

கடுமையாக விமர்சித்துள்ளன. ஆனால் கொலையாளிகள் இதுவரை பிடிபடவில்லை. வெளிமாவட்டத்தில் இருந்து வந்த கும்பல் ஒன்றே இந்தக் கொலைகளைச் செய்ததாக கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 100 கோடி இந்திய சனத்தொகையில் 1 கோடியே 70 லட்சம் பேர் கத்தோலிக்கர்கள். புரட்டஸ்தாந்து மதத்தினர் 1 கோடி பேர். முழுச் சனத்தொகையில் இந்துக்கள் 85 சதவீதம். உலகெங்கும் சிதறிவாழும் இந்துக்களுக்கு இந்தியா நம்பிக்கை நட்சத்திரமாக இருந்து வருகிறது.

## கிறிஸ்தவர்கள் வருகை

1700 ஆண்டுகளுக்கு முன்னர் முதலாவது கிறிஸ்தவ விசுவாசி இந்தியா வந்ததாக வரலாறு கூறுகிறது.

பாடசாலைகளையும் ஆஸ்பத்திரிகளையும் அமைத்து இவர்கள் ஆற்றிய சேவைகளும் குஷ்டரோகிகளுக்கு ஆற்றிய உதவிகளும் மற்றும் கொடைகளும் பின் தங்கிய நிலையில்இருந்த இந்துக்களை கவரவும் அவர்கள் மதம் மாறவும் தூண்டின என்பதில் சந்தேகம் இல்லை.

தீவிரவாத இயக்கங்கள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

இந்தியாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான உணர்வுகள் காங்கிரஸையும் இக்கட்டான நிலைக்குள் தள்ளிவிட்டுள்ளது.



வாஜ்பாய்

பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி ஒரு கிறிஸ்தவர்.

பாரதீய ஜனதா அரசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள இந்து தீவிரவாதியான அசோக் சிங்கால் அரசியலில் உயர் பதவிகளில் கிறிஸ்தவர்களின் ஆதிக்கம் குறித்து சமீபத்தில் எச்சரித்தார்.

## வாஜ்பாய் அரசுக்கு மீண்டும் நெருக்கடி

அந்த மாநிலங்களின் அரசுகள் தடுக்கத் தவறிவிட்டன என்று புதுடில்லியில் கத்தோலிக்க ஆர்ச் பிஷப் அலன் டீ லாஸ்கிக் குற்றஞ் சாட்டினார்.

மாநில அரசுகள் இத்தகைய சம்பவங்களைத் தடுக்கத் தவறுவதால் இந்து தீவிரவாத அமைப்புகளுடன் பேச்சு நடத்தத்தாம் விரும்புவதாக கத்தோலிக்க தலைவர்கள் பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் வாஜ்பாய் உட்பட பாரதீய ஜனதாக் கட்சியின் சகல தலைவர்களும் இந்த வன்செயல்களுக்குக்

நாடுகள் இந்தச் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

ஆந்திராவில் சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம், மேற்கு வங்காளத்தில் மமதா பனர்ஜியின் திரிணாமூல் காங்கிரஸ் ஆகியவை பாரதீயஜனதா அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கிக்கொள்ளப் போவதாக எச்சரித்துள்ளன.

ஏற்கனவே கூட்டணிக்குள் உருவாகி உள்ள பூசல்களால் அமைச்சரவை விஸ்தர்ப்பைப் பின்தள்ளி வரும் பாரதீய ஜனதா அரசுக்கு ஆஸ்திரேலியமிஷனரிகொலை புதிய நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.

சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன் மதிப்புக்கும் இது பெரும் சவாலாகும்.

ஆஸ்திரேலிய மிஷனரி கிரஹாம் ஸ்ரெவார்ட் ஸ்ரெய்ன்ஸ் மற்றும் அவரது இரு குழந்தைகள் அவர்கள் நித்திரை செய்த ஜீப்புக்குள் வைத்தே ஜீப்புடன் எரித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த மிஷனரி கடந்த 34 வருடகாலமாக ஒரிஸாவில் மிகவும் பின்தங்கிய பகுதி ஒன்றில் தமது குடும்பத்துடன் தங்கி இருந்து தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவைசெய்து வந்தார்.

ஒரிஸாவில் உள்ள இந்து தீவிரவாத இயக்கமான ''பாஜ்ராங்தள்'' அமைப்பைச் சேர்ந்த தாராசிங் என்பவர் தலைமையிலான கோஷ்டியே இந்தக் கொலைகளைச் செய்ததாகக் குற்





குஜராத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து மகாராஷ்டிர தலைநகர் மும்பாயில் கிறிஸ்தவ கன்னியாஸ்திரிகள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.


ஆனால் பலவந்த மதமாற்றம் எதுவும் செய்யப்படவில்லை என்று கத்தோலிக்க ஆர்ச்பிஷப் அலன்டீ லாஸ்ரிக் கூறுகிறார்.

கிறிஸ்தவ பாடசாலைகளில் படித்தவர்களை மதம் மாற்றுகிறோம் என்றால் தற்பொழுது இந்தியாவில் 50 கோடி கிறிஸ்தவர்கள் இருந்திருப்பார்கள் என்று அவர் கூறினார்.

இந்தியாவில் கிறிஸ்தவர்களால் 16 ஆயிரம் பாடசாலைகள் நிர்வகிக்கப்படுகின்றன. முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி படித்துப் பட்

ஆனால் கிறிஸ்தவ மத எதிர்ப்பு உணர்வுகள் சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸை பாதிக்கவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற சட்டசபை இடைக்காலத் தேர்தல்களில் காங்கிரஸ் அமோக வெற்றி ஈட்டி இருந்தது.

பாரதீய ஜனதா அரசு பதவிக்கு வந்த பின்னர் இந்தியாவில் மததீவிரவாதிகள் எழுச்சி பெற்ற போதிலும் ''மத சார்பின்மை'' கோஷம் இன்னும் இந்தியாவில் பெரும் சக்தியாக விளங்கிவருகிறது. சட்டசபை இடைக் காலத் தேர்தல்களில் இதனை முன்வைத்தே காங்கிரஸ் கட்சி போட்டியிட்டு வெற்றி பெற்றது. இனி வரும் தேர்தல்களிலும் காங்கிரஸின் முக்கிய கோஷம் இதுவாகத்தான் இருக்கும்.



ஒரிஸாவில் கடந்த வாரம் கொலை செய்யப்பட்ட ஆஸ்திரேலிய மிஷனரி கிரஹாம் ஸ்ரெவார்ட் ஸ்ரெய்ன்ஸ் தனது குடும்பத்துடன் காணப்படுகிறார். அவரது மனைவியும் மகளுமே தற்பொழுது எஞ்சி உள்ளனர். முன்னால் நிற்கும் புதல்வர்கள் இருவரும் அவருடன் சேர்த்து கொலை செய்யப்பட்டு விட்டனர்.

சி. ஐ. ஏ. யின் பிரதான நோக்கம் என்றும் — விஷ்வ ஹிந்து பரிஷத் தெரிவிக்கிறது

ஆனால் இந்தியாவில் உள்ள கிறிஸ்தவ அமைப்புக்கள் இந்தக் குற்றச்சாட்டுக்களை அடியோடு, மறுக்கின்றன. இந்துக்களை தாம் பலவந்தமாக மதம்மாற்றவில்லை என்று அவை கூறுகின்றன.

தர்ம காரியங்களையே கிறிஸ்தவ அமைப்புக்கள் செய்து வருவதாக புதுடில்லியில் உள்ள இந்திய கத்தோலிக்க யூனியன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

## பீதியுடன் வாழும் கிறிஸ்தவர்கள்

இந்தியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் சுதந்திரத்திற்குப் பின் பெரும் பீதியுடன் வாழ்கிறார்கள் என மனித உரிமைக்கான ஐக்கிய கிறிஸ்

கண்டனம் தெரிவித்துள்ளனர். எனினும் இந்துக்கள் பலவந்தமாக மதம் மாற்றப்படுகிறார்கள் என்ற இந்து தீவிரவாத இயக்கங்களின் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கும் நிலையில் பாரதீய ஜனதா அரசு இல்லை.

குஜராத்மாநிலத்தில்நத்தார் நாள்களில் தேவாலயங்கள் பல எரிக்கப்பட்டன. இத்தகைய தேவாலயங்கள் ஜெப மண்டபங்கள் போன்று மரக் கொட்டில்களில் அமைந்திருப்பதால் அவற்றை எரிப்பது தீவிரவாதிகளுக்கு கடினமான காரியம் அல்ல.

வாஜ்பாய் குஜராத் சென்று திரும்பிய கையோடு அங்கு மற்றும் ஒரு தேவாலயம் எரிக்கப்பட்டது. பாரதீய ஜனதா ஆட்சியில் உள்ள குஜராத்தில் சட்டம், ஒழுங்கு [illegible]

# உலக உலா

என். பி. சீலன்

றஞ்சாட்டப்படுகிறது. ஆனால் தாராசிங் தனது உறுப்பினர் அல்லர் என பாஜ்ராங்தள் அமைப்பின் தலைவர் தெரிவிக்கிறார்.

58 வயது நிரம்பிய கிரஹாம் ஸ்ரெவார்ட்ஸ்ரெய்ன்ஸினதும் அவரது 7 வயது, 10 வயது நிரம்பிய குழந்தைகளினதும் கொலைகளை இந்தியாவில் உள்ள சகல அரசியல் தலைவர்களும் கண்டித்துள்ளனர். இந்தியப் பத்திரிகைகள், [illegible]

டம் பெற்றதும் ஒரு கத்தோலிக்க ''கொன்வென்ட்''டில் தான்.

## இந்து தீவிரவாதிகள் குற்றச்சாட்டு

இந்தியாவில் தொழுநோயாளிகளுக்கு பெரும் சேவை ஆற்றிய தெரேஸா அம்மையார் பொருளாதாரத் துறையில் பெரும் சாதனைகளைப் புரிந்த அமர்ஜா சென் ஆகியோருக்கு நோபல் பரிசுகள் வழங்கப்பட்டதன் பின்னணியில் சர்வதேச அரசியல் நோக்கம் இருப்பதாக இந்துத்

மத தீவிரவாதிகளுக்கு எதிராகத் தற்பொழுது தி.மு.க. உட்படப் பல்வேறு கட்சிகள் குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளன.

ஈரானிலோ அல்லது ஈராக்கிலோ இத்தகையதீவிரவாதச் சம்பவங்கள் நிகழ்ந்தால் சர்வதேசசமூகம்தட்டிக்கேட்காது. இந்தியா பாம்ரபரியமாக ஜனநாயகத்தில் ஊறிய நாடு. இத்தகைய தலைகுனிவுச் சம்பவங்களுக்குசர்வதேச சமூகத்துக்கு அது பதில் சொல்ல வேண்டிய நிலையிலேயே இருந்து வருகிறது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org